பட்டபாண சரிதம்.

(ஹர்ஷசரிதத்தின் முதற்பாகம்.)

கும்பகோணம்
ராஜாங்ககலாசாலை ப்ரதான ஸம்ஸ்கிருத பண்டிதர்
அபிநவபட்டபாண
ரா. வே. கிருஷ்ணமாசாரியரால்
இயற்றப்பெற்று

கும்பகோணம்
ராஜாங்ககலாசாலை ப்ரதான தமிழ்ப்பண்டிதர்
ம. வீ. இராமாநுஜாசாரியருடைய
முகவுரையுடன்

கும்பகோணம்
இந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனி,
டி. கிருஷ்ணஸாமி ஐயரால்
ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ அச்சாபீஸில்
பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

விலை] 1919. [அணா 10

TO

THE REVERED MEMORY

OF

The Late Rao Bahadur

M. Rangachariya M. A.,

Professor of Sanskrit and Comparative Philology,

Curator, Government Oriental Manuscript Library

and

Registrar of Books, Madras,

THIS BOOK

IS

DEDICATED

AS

A mark of sincere respect and admiration

BY

The Author.

முன்னுரை.

—(o)—

மஹாவித்வானும் மஹாகவியும் பரம ரஸிகருமான ராஜ ஸ்ரீமான் ஸ்ரீமான விக்ரம ஸாமூதிரி மஹாராஜா அவர்கள் கள்ளிக்கோட்டையில் தமது அரண்மனையில் வருஷந்தோறும் நடத்திவந்த ஸஹ்ருதயஸமாகமம் என்னும் வித்வத்ஸபையில் எனது ஸம்ஸ்கிருத வாசகநடையையும் சாஸ்திர பாண்டித்யத்தையும் பாராட்டி வித்வான்களுடையவும் ப்ரபுக்களுடையவும் முன்னிலையில் பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னர் எனக்கு அபிநவ பட்டபாண சப்த தர்க்காலங்கார வித்யாபூஷண என்னும் பட்டத்தை அளித்தபோது, பாணமஹாகவியினிடத்தில் எனக்குள்ள அஸாதாரணமான பக்தியையும் பஹுமானத்தையும் வெளிப்படுத்தத்தக்க ஸந்தர்ப்பம் ஏற்படுமென்று நான் நினைத்தவனல்லன்.

ஆனால், பாணபட்ட மஹாகவி செய்திருக்கும் காதம்பரி, ஹர்ஷசரிதம் ஆகிய இவைகளிலுள்ள வர்ணனைகளையும் ரஸசமத்காராதிகளையும் எளிதில் யாவரும் அறிந்து ஸந்தோஷிக்கவேண்டுமென்று நினைத்து, சென்னை ராஜாங்க கலாசாலையில் ஸம்ஸ்கிருத போதகாசிரியரும், பலபாஷைகளையும் பல விஷயங்களையும் குற்றமற நன்றாய்க் கற்றறிந்தவரும், பெருந்தன்மை பரோபகாரம் குணபக்ஷபாதம ஸௌஜன்யம் முதலிய நற்குணங்களின் விளைநிலமாயிருந்தவருமான ஸ்ரீமான் ராவ்பகதூர் எம் அரங்காசாரியர் அவர்கள் காதம்பரியையும் ஹர்ஷசரிதத்தையும் கவியின் வாசகங்களைக்கொண்டே கூடியவரையில் சமத்காராதிகளைவிடாமல் சுருக்கி அமைக்கும்படி என்னை ஆஜ்ஞாபிக்கவே, ஸ்ரீவத்ஸகோத்ரத்தில் பிறந்த எனக்கு ஸ்ரீவத்ஸகோத்ரத்தில் அவதரித்த பாணனிடத்தில் இயற்கையாகவே பலவிதத்திலுமுள்ள மதிப்பைக்காட்ட இதுவும் ஒருவழி என்று

கிழைத்து நான் உடனே காதம்பரீஸங்க்ரஹம் என்னும் கிரந்தத்தை ஸ்ரீமான் அரங்காசாரியர் அவர்களுடைய அபிப்ராயத்திற்கேற்பச்செய்துமுடித்து, பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னரே அச்சிற் பதிப்பித்தேன். இந்தக் காதம்பரீஸங்கிரஹ புஸ்தகம் சென்னை ஸர்வ கலாசாலைச்சங்கத்தாரால் நான்குதடவை பாடபுஸ்தக மாக வைக்கப்பட்டிருப்பதுடன் மைஸூர் ஸர்வகலா சாலைச் சங்கத்தாராலும் திருவாங்கூர் ராஜாங்கபாட சாலைகளாலும் குருகுலபாட சாலைகளாலும் ஆதரிக்கப் பட்டும் வருவதிலிருந்து பாணமஹாகவியின கவிதா சமத்காராதிகளை வெகுபெயர்கள் அனுபவித்து மகிழ்ந் து வருகிறதாக நினைக்கக் காரணமிருப்பதால், என் னுடைய ஸந்தோஷத்திற்கும் திருப்திக்கும் அளவே கிடையாது.

பின்னர், எனது ஆப்த நண்பரும் பண்டித மணி யுமாகிய ஸ்ரீமான் ஆயுர்வேதபூஷண எம். துரைஸாமி ஐயங்கார் அவர்கள் என்னுடைய விருப்பத்தையும் பிரே ரணையையும் மதித்து ஸம்ஸ்கிருத காதம்பரீஸங்கிர ஹத்தைத் தமிழில் வெகு அழகாய் மொழிபெயர்த்து ஸம்ஸ்கிருதம் அறியாத தமிழ்மக்களுக்கும் உபயோகப் படுமாறு பத்து வருஷங்களுக்கு முன்னரே அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தினார்கள்.

காதம்பரீஸங்கிரஹத்தைப் போலவே ஹர்ஷசரித ஸங்கிரஹமும் ஸம்ஸ்கிருதத்தில் என்னால் செய்யப் பட்டு, கொஞ்சதூரம் அச்சிற் பதிப்பித்து வரும்பொழு தே வேறொரு பண்டிதருடைய ஸௌகரியத்தை உத் தேசித்து நான் முழுவதும் அச்சிற் பதிப்பிக்காமல் நிறுத்திவிட வேண்டியதாயிற்று.

இப்பொழுது பாணபட்டரால் செய்யப்பெற்ற ஹர்ஷசரிதபுஸ்தகத்தில் காணும் பாணபட்டருடைய சரித்திரபாகத்தைமாத்திரம் தமிழில் மொழிபெயர்த்

து ஹர்ஷசரிதத்தின் முதற்பாகமாக வெளியிட முன் வந்துள்ளேன்.

பழைய ஸம்ஸ்கிருதமஹாகவிகளின் சரித்திரம் அனேகமாய் நமக்குத் தெரியாமலிருக்க, பாணபட்டர் தமது சரிதையைத் தாமே கூறியிருப்பதாலும், இந்தப் பாகத்தில் ரஸசமத்காராதிகள் ததும்பிநிற்கக் காண்பதாலும் இந்தப் பாகத்தின் சுவையைத் தமிழர்களும் அனுபவித்து ஆனந்திக்கவேண்டுமென்று நினைத்தே, நான் இந்தப் பாகத்தைத் தர்ஜிமைசெய்ய விரும்பினேன்.

வர்ணனையாலும் உத்ப்ரேக்ஷையாலும் சிலேஷையாலும் எவை எவை மொழிபெயர்க்கப்பட்டால் தமிழ் நடைக்கும் தமிழர் மனப்பான்மைக்கும் உசிதமாயிருக்குமென்று எனக்குத்தோன்றினவோ, அவ்வவற்றை மாத்திரமே நான் தர்ஜிமை செய்துள்ளேன். ஆங்காங்குக் கருத்தைக்கருதிச் சிறிது விரித்தும், சுருக்கியும் எழுதினேனேயல்லாது, பிரதிபத தர்ஜிமையை முற்றிலும் நான் ஆதரிக்கவில்லை. ஒருவரோடொருவர் பேசுந்தருணத்திலுள்ள சிறிய சிறிய வாசகங்களில் கூடியவரையில் அப்படியே ப்ரதிபத மொழிபெயர்ப்பாகவே தர்ஜிமை செய்திருக்கிறேன். கூடிய வரையில் ஸம்ஸ்கிருத பதங்களை விலக்கியும் ஸாதாரணமாய்ப் பழக்கத்திலுள்ள தமிழ்ச் சொற்களைப் போல் வழங்கிவரும் ஸம்ஸ்கிருத பதங்களை உபயோகித்தும், யாவரும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதவேண்டுமென்று நான் வெகுவாகப் பாடுபட்டதுண்டு; ஸம்ஸ்கிருதத்தில் அதிக பரிசயமும் 'ப்ராஸ மென்னும் சப்தாலங்காரத்தில் மிக்க சிரத்தையும் எனக்கு இயற்கையாகவே இருப்பதால் இந்த எண்ணம் முற்றிலும் பலித்திருப்பதாக என்னால் சொல்ல முடியாது. ஸம்ஸ்கிருதபதங்களைத் தமிழில் எழுதும் போது சில நிபந்தனைகளைச் சிலர் ஆதரிக்கின்றனராயி

னும், நான் ஒரு நிபந்தனையும் கூடாது என்னும் எண்ணமுள்ளவனாகையால் பிரவாஹம் ப்ரவாஹம் என்கிற மாதிரியில் இரண்டு விதமாயும் எழுதியிருக்கிறேன். சுருங்கச் சொல்லின், மூலத்தின் அர்த்தத்தை மொழிபெயர்ப்பதிலும் கருத்தைக் கசடற வெளிப்படுத்துவதிலும் உசிதமான உத்ப்ரேக்ஷையை உபயோகிப்பதிலும் அழகான வர்ணனையை அங்கீகரிப்பதிலும் கடினமல்லாத நடையைக் கைக்கொள்வதிலும் என்னால் எவ்வளவு கவனம் செலுத்த முடியுமோ, அவ்வளவும் செலுத்தியிருக்கிறேன் என்று நான் சொல்வதாயிருந்தால், அஃது ஒரணுவேனும் மிகையாகாது.

இந்த முதற்பாகக் கதையிலிருந்து பற்பல நீதிகளை அறியலாமாயினும் முக்கியமாய் அடியில் காண்பன அறியப்பட வேண்டியவை:—

1. ஒருவன் எவ்வளவு படிப்புள்ளவனாயிருப்பினும், கோபத்தை அடக்கமுடியாதவனாயிருப்பின் அவன் பெரியோர்களால் பெரிதும் பழிக்கப்படுவான்

2. தபோநிஷ்டரான அந்தணரை அவமதிப்பவன், தெய்வத்தன்மையுள்ளவனாயினும் அதோகதிக்கு ஆளாகுவான்.

3. ஒருபிரபு எவ்வளவு மேதாவியாயிருந்தாலும் அவன்கூடத் தெளிவுபெற முடியாதபடி அயோக்கியர்கள் சூழ்ந்து நின்று பெரியோர்களைப் பழித்துக் கொண்டிருப்பார்கள்.

4. யோக்கியர் ஒருவர் இருப்பினும் அவர் அயோக்கியர்களுடைய சூழ்ச்சிகளை விலக்கிப் பிரபுவினிடம் உண்மையை எடுத்துரைக்கத் தவறமாட்டார்.

5. தம்மதிப்பும் தந்நம்பிக்கையுமுள்ள பண்டிதர்கள், யோக்கியர் ஒருவர் உறுதிகூறாத வரையில் அயோக்கியர்களால் சூழப்பட்ட பிரபுவை அணுகமாட்டார்கள்.

6. பண்டிதர்களுடைய உண்மை நிலைமையை உணர்ந்தானாகில், நற்குணம் வாய்ந்த பிரபு நிச்சயமாய்ப்பரிசுத்தரான அவர்களை வெகுமானியாமலிரான்.

இந்த முதற்பாகத்தை முடித்தவுடன் இரண்டாம் பாகத்தை மொழிபெயர்க்கவேண்டியது எனது கடமையாயிருந்தும, நான் வேறு பல காரணங்களால் இதை விடுத்து 'ராஜதரங்கிணீ' என்னும் காச்மீர சரித்திர நூலை இப்பொழுது தர்ஜிமைசெய்து வருவதால், அதுமுடிந்ததும் இதன் இரண்டாம்பாகத்தை எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறேன்.

இந்த மொழிபெயர்ப்பை மூலத்துடன் ஒத்துப் பார்த்தும் தமிழ்வாசகங்களை ஆங்காங்குச் சீர்திருத்தியும் அச்சிற் பதிப்பிக்கும்பொழுது பிரதிகளை ஒத்துப் பார்த்துக் கவனித்துத் திருத்தியும் பலவிதத்தில் உதவிபுரிந்த எனது உயிர்த்தோழராகிய தஞ்சை கே. எச். ஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ எஸ். ஸுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும், வாசகங்களை அக்ஷரப்பிழையறப் பரிசோதித்தும் ப்ரூபுகளை ஸரியாய்க் கவனித்தும் மூலத்திலுள்ள சுலோகங்களின் கருத்தை வெகு நன்றாய்த் தழுவி இனிமையான பாக்களைப் பாடிக்கொடுத்தும் எனக்கு உபகாரம் செய்த எனது நண்பர் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

புஸ்தகம் முடிவுபெற்றதும் ஸம்ஸ்கிருத பதங்களுக்குத் தமிழில் அர்த்தம்கொடுத்தும், அவ்வப்போது என்னை உத்ஸாஹப்படுத்தியும் உபகரித்து வந்த எனது ஸஹபாடி கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ எஸ். வேங்கடராம சாஸ்திரிகள் அவர்களுக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸம்ஸ்க்ருதம் தமிழ் ஆகிய இருபாஷைகளிலும் விசேஷ பாண்டித்தியமுள்ள கும்பகோணம் காலேஜ் ப்ரதான தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ம. வீ ராமானுஜாசாரியர் அவர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி, தமது அபாரமான வேலையின் நடுவில் சிரேஷ்டமான ஒரு முகவுரையை எழுதிக்கொடுத்ததற்கு வந்தனத்துடன நன்றிபாராட்டுவதைத் தவிர வேறு என்ன கைம்மாறு என்னால் செய்யமுடியும்?

தமிழ்ப்பாஷையில் நான் புஸ்தகம் எழுதுவது இதுதான் முதற்றடவையாகையால் பல சொற்பிழைகள் நேரிடலாமாயினும், பாணனது ரஸசமத்காராதிகளை அனுபவித்து ஆநந்திக்கும் ரஸிகர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது என்னை மன்னிப்பார்கள் என்று உறுதியாய் நம்பியிருக்கிறேன்.

இதன் மூலக்கிரந்த கர்த்தாவாகிய பட்டபாண மகாகவியினுடைய கவிதாசமத்காரம் கிரந்தங்களின் காலக்கிரமம் முதலியவைகளைப்பற்றியும் கேள்விவழியாய் வந்த வேறு சில சரித்திரவிஷயங்களைப்பற்றியும் இரண்டாவதுபாகத்தின் முன்னுரையில் விரிவாய்க் கூறவிரும்புகிறேன்.

இப்புத்தகத்தை அச்சிட்டுவெளியிடுவதாக முழு மனதுடனும் பரோபகார புத்தியுடனும் முன் வந்த கும்பகோணம் ஹிந்து எஜுகேஷனல் டிரேடிங்கம்பெனி ஸொந்தக்காரர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணஸாமி ஐயர் அவர்களை எனக்கு உதவியதற்காக நானெப்பொழுதும் பகவானிடத்தில் அந்தரங்க பக்தியுள்ளவனாகவிருக்கிறேன்.

ஸ்ரீ முனித்ரயமந்திரம்
கும்பகோணம்.
7—5—19.

ஆர். வி. கிருஷ்ணமாசாரியர்.

ஸ்ரீ:

முகவுரை.

அமிர்தினும் இனிய நம் தமிழ்மொழியதனில் இலக்கிய இலக்கணங்களிலும், சோதிடம் வைத்திய முதலிய மற்றக்கலைகளிலும், பற்பலநூல்கள், கற்றவர் மனத்தைக் கவரும்தன்மையனவாய்ச் சொல்லழகும் பொருள்வளமும் பொருந்தி நிலவுகின்றன. அவையெல்லாம் செய்யுள்நடையாகவே அமைந்தவை. சிலப்பதிகாரம் பெருந்தேவனார்பாரதமுதலிய சிலநூல்களில் மாத்திரமே இடையிடையே உரைநடை காணப்படுகிறது. நக்கீரர் பரிமேலழகர் நச்சினார்க்கினியர்முதலிய உரையாசிரியர்களுடைய உரைகளில் காணப்படும்வசனங்களைத்தவிரத் தனியே வசன காவ்யங்களிருந்ததாகப் புலப்படவில்லை. விஷயங்களை எளியநடையில் செய்யுளாகச்சொல்லுதலே பயனுடையதென முற்காலத்து அறிவிற்சிறந்த பெரியோர்கள் கருதினர்போலும். அக்கொள்கையினர், அங்ஙனம் செய்தற்கு, படிப்போருக்கு இன்பம்பயத்தலும் விஷயங்கள் ஞாபகத்தில் நிலைபெறுதலுமாகிய பல ஏதுக்களை எடுத்துக்காட்டுவார். காரணம் எதுவாயினும், தமிழில் வசனநடையில் நூல்கள் அக்காலத்துச் செய்யப்படவில்லையென்பது உண்மை. பாஷையின்பெருமை நூல்களின் மிகுதியினாலேயே யென்றும் நூல்களும் எல்லாருமே படித்தறிந்துகொள்ளும் தன்மையுடைய உரைநடையிலேயே அமைந்திருக்கவேண்டுமென்னும் சாஸ்திரக்கருத்துக்களை விளக்கு

வதற்கு வேண்டுஞ்சொற்களைக்கொண்டு இனிதுவிளக்குதல் வசனநடைக்கே சாத்தியமென்றும் அப்படிப் பலகலைகளிலும்பற்பலநூல்களில்லாமை தமிழ்மொழிக்கு ஒரு குறையென்றும் இக்காலம் நாகரிகம்வாய்ந்த அறிஞர்பலர் கூறுவாராயினர்.

நச்சினார்க்கினியர்காலத்துக்கு இப்பால் மயிலேறும்பெருமாள்பிள்ளைமுதலிய பலபுலவர்கள், பல அரிய இலக்கிய இலக்கணங்களுக்கு நல்லுரைவகுத்தனர். அவைகளிலெல்லாம் உரையாகவந்த வசனங்களே உரைநடைக்கு வழிகாட்டியாகின்றன. திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீமத் சிவஞானயோகிகள் செய்த தர்க்கஸங்கிரகமும் அன்னம்பட்டீயமும், சென்னை மஹாவித்வான் தாண்டவராயமுதலியார் இயற்றிய இலக்கணமும் பஞ்சதந்திரமுமே முதலில் வசனரூபமாகவந்த நூல்களென்று சொல்லலாம்.

வைஷ்ணவரும் ஜைனரும் வசனரூபமாக அநேக நூல்கள் இயற்றியிருக்கின்றனர். ஆனால் அவை பெரும்பாலும் மணிப்ரவாள நடையில் அமைந்தவை. வைஷ்ணவ ஆசார்யர்களில் நம்பிள்ளைமுதலான ஆன்றோர்கள் நாலாயிரப்ரபந்தமுதலிய செய்யுள்களுக்கு உரையாகவும் ஸமயசாஸ்திரக்கருத்துக்களை வெளியிடும் முதனூலாகவும் செய்துள்ள அரிய வசனநூல்கள் எத்தனையோபல. அவைகளெல்லாம் அறிவிற்பெரிய ஆன்றோர்களால் மிகப்பாராட்டப்படுகின்றன.

இப்பொழுது ஐம்பதுவருஷகாலமாகத் தமிழில் வசன நூல்கள் பலவெளியாகின்றன. சில, நாடகங்களே;

சில, நவீன கதைகள்; சில, வடமொழியிலுள்ள புராண இதிஹாஸங்களின் மொழிபெயர்ப்புக்கள்; சில, செய்யுள்வடிவமாகவுள்ள தமிழ்நூல்களை வசனமாக எழுதியவை; சில, ஆங்கிலமுதலிய பிறபாஷைகளிலுள்ள அரியவிஷயங்களைப் பெயர்த்து எழுதியவை; தேசசரித்திரம் அரசாட்சிமுறை முதலியவற்றைப்பற்றித் திரட்டி எழுதியவை வேறுசில; உலகத்தில் பலபலதுறைகளிலும கீர்த்திவாய்ந்த பெரியோர்களுடைய சரித்திரமாக எழுந்தவை மற்றுஞ்சில.

பாஷையின் பெருக்கத்துக்குக் காரணமான வசனநூல்கள் பல வெளிவரவேண்டுமென்று மிக்க ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிற இக்காலத்தில், வடமொழியில் கவிகுலதிலகராக விளங்கிய பட்டபாண மஹாகவியால் செய்யப்பட்ட ஹர்ஷசரித்திரத்தை, கும்பகோணம் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர் மஹாவித்வான், அபிநவபட்டபாணர் ஸ்ரீ.உப.வே. ஆர். வி. கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி தமிழில் வசனமாக மொழிபெயர்த்துஉதவியது தமிழ்ப்பாஷாபிமானிகளுக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை விளைவிப்பதாகும். வடமொழி மூலத்தை முற்றும்தழுவியே மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் மொழிபெயர்ப்பு, படிப்பவர் மனத்தைக் கவரும் தன்மைவாய்ந்திருக்கிறது. இதனைப்படிக்கும்போது வடமொழியிலியற்றிய பட்டபாணமஹாகவியினாலேயே தமிழிலும் இயற்றப்பட்டதோவென்று வியப்புண்டாகிறது. இதனைமொழிபெயர்த்த ஸ்ரீமான் ஆசாரியாவர்களுக்கு அபிநவபட்டபாணர், என்று சிறப்புப்பெயர் அமைந்தது, வடமொழியில், 'காவ்யாதர்சம்' என்ற அலங்காரநூலை இயற்றியவர்களுக்கும்

அதனைப்பின்பற்றித் தமிழில், 'அணியியல்' என்னும் நூலை இயற்றியவர்களுக்கும் 'தண்டி' என்னும் ஒரே பெயர் அமைந்திருத்தலை ஒருவாறு ஒத்திருக்கின்றது.

வசனநூல்கள் பல்கிப்பெருகவேண்டுமென்று பூல காரணங்காட்டி வற்புறுத்திக்கூறும் ஆங்கிலம்வல்லார், 'வசனசம்பந்தமானது' எனப்பொருள்படும் 'Prosaic' என்பதை, 'ரஸமற்றது' என்னும் பொருளில் உபயோகிக்கின்றனர். அதனால், உரைநடைகள் கற்பனலங்காரங்களோடு சேர்ந்து புனைந்துரைக்கப் படுதலின்மையால், படிப்பவருக்கு இன்பம் பயத்த லில்லையென்பது தோற்றுகிறது. ஆனால் பட்டபாண மஹாகவி வடமொழியிலியற்றிய வசனகாவ்யங்கள் செய்யுள்நடையிலமைந்த சிறந்த காவ்யங்களுக்குச் சிறிதும் குறைந்தவையல்லவென்று வடமொழி இலக்கியஇலக்கணங்களில் தேர்ச்சிபெற்ற அறிஞர்பலரா லும் பாராட்டப்படுகின்றன. 'காதம்பரீ ரஸஜ்ஞாநாம் ஆஹாரோபி ந ரோசதே' என்னும் பழமொழியே இந்த மஹாகவியின் உரைநடைச்சிறப்பை நன்கு விளக்கும். இவர்களுடைய சரித்திரத்தையும் இவர்கள் இயற்றிய நூல்களின்சிறப்பையும்குறித்து ஆராய்ச்சிமுறையில் கைதேர்ந்தபலபுலவர்கள் நன்கு விளக்கி எழுதியிருத்தலால், நான் இங்கு ஒருசிறிதும் எழுதப் புகவில்லை.

இம்மொழிபெயர்ப்பும் முதனூலைப்போலவே எல்லாஅழகும் பொருந்த அமைந்திருப்பது ஆசார்யரவர்களுடைய பாஷாஞானத்தையும் அவர்களுக்குக் காவ்யங்களிலுள்ள மிக்கபரிசிரமத்தையும் நன்கு

புலப்படுத்துகின்றது. இது அவர்கள் தமிழில் முதல் முதல் செய்திருக்கிற நூலாதலால் அங்கங்கே காணப்படுகிற சிலசில எழுத்துப்பிழைகள்முதலியவற்றைக் குறித்து ஆசார்யரவர்கள் முன்னுரையில் தெரிவித்திருக்கிறபடி *ரஸிகர்கள் பாராட்டமாட்டார்களென்றும் அவைகள் இரண்டாம்பதிப்பில் மாற்றப்படுமென்றும் உறுதியாக நம்புகிறேன்.

வடமொழியிலுள்ள அரியபெரிய பலவிஷயங்களைத் தமிழ்நாட்டினர் எளிதில் படித்தறிந்துகொள்ளும்படி இன்னும் பல நூல்களை மொழிபெயர்த்து உதவும்படியான மனஊக்கத்தையும் ஆயுராரோக்யாதி மற்றச் சௌகர்யங்களையும் ஆசார்யரவர்களுக்கு அளித்தருளவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறேன்.

கும்பகோணம், }
29—4—19. }

ஸ்ரீ:

பட்டபாண சரிதம்.

முதல் உச்சுவாஸம்.

பெருமித மாதும் பிறங்கேரி யானால்
விரிநீ ருலகம் புரப்போன் வேண்டினர்
தினமன முவக்கத் திருமலை போன்றே
வினையனும் ஹர்ஷ விலதுவன் சிறந்தே.

முன்னொரு காலத்தில் இந்திரன்முதலாய தேவர்கள் நாலுபுறமும் நிறைந்து நிற்கப் பிரமதேவர், பரப்ரும்மத்தைப் பற்றிய வார்த்தைகளைப் பேசிக்கொண்டும், குற்றமற்ற வேறு வித்தியாகோஷ்டிகளை நடத்திக்கொண்டும் பதுமாஸனத்தில் வீற்றிருந்தார்.

அங்ஙனம் வீற்றிருக்கும் பிரமதேவரை, மனு தக்ஷர் சாக்ஷுஷர் முதலிய சிருஷ்டிகர்த்தாக்களும், ஸப்தரிஷிகள் முதலாய முனிவர்களும் சூழ்ந்து கைகூப்பிநின்றனர்.

அப்பொழுது, சிலர் இருக்வேதம் ஓதினர்; வேறு சிலர் எஜுர்வேதம் படித்தனர்; மற்றுஞ் சிலர் ஸாமவேதம் பாடினர்; பின்னுஞ் சிலரோ யாகவிதிகளைத் தெரிவிக்கும் மந்திரங்களின் பொருள்களை விரிவாய்

எடுத்துரைத்தனர். அன்றியும், ஒன்றோடொன்று முரண்படும் சிற்சில வித்தியாவிஷயங்களைப்பற்றி அவர்களுக்குள் கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் நிகழ்ந்தன.

அச்சமயம், கோபத்திற்கும் தவத்திற்கும் உறைவிடமாகிய துர்வாஸமஹாரிஷிக்கும், மந்தபாலன் என்னும் மற்றொரு மஹாரிஷிக்கும் விவாதம் ஏற்படக், கோபத்தால் மதியிழந்த துர்வாஸமஹாமுனி ஸ்வரம் தவறி ஸாமகானஞ் செய்துவிட்டார்.

இந்தத் தவறுதலை அறிந்தும் மற்ற முனிவர்கள் சாபத்திற்கு அஞ்சி ஒன்றும் பேசாமலிருந்துவிட்டார்கள். பிரமதேவரோ வேறொருவருடன் பேசிக்கொண்டு பராக்காய்க் கேட்டும் கேளாதவர்போல் நடித்தார்.

அப்பொழுது, தளிர்போல் சிவந்த கால்களில் சிலம்பு அணிந்தும், இடுப்பிலுள்ள ஒட்டியாணத்தில் தனது இடது கையை வைத்தும், பூணூலுடன் மார்பில் ஒரு முத்துமாலையைத் தரித்தும், துர்வாஸரிஷியிடத்தில் அவமதிப்பால் முகஞ் சுளித்து ஒரு புருவத்தைச் சாய்வாய் உயரத்தூக்கியும், மெல்லிய ஆடை உடுத்தும் பிரமதேவருக்குச் சமீபத்தில் நின்று வெண் சாமரம் வீசிக்கொண்டிருந்த ஸரஸ்வதிதேவி, பற்களின் காந்தி பளீரென்று பரவக் களீரென்று சிரித்துவிட்டாள்.

அவ்விதம் சிரித்த ஸரஸ்வதிதேவியைப் பார்த்து அம்மாமுனிவர், கோபத்தால் தலை குலுங்க, செஞ்சடைகள் அவிழ்ந்து சிதற, புருவம் நெற்றியில் ஏற, கண்களினின்று உதிரம் வடிய, கைவிரல்கள் நடுங்க,

உதட்டைப் பற்களாற் கடித்துக்கொண்டு "அடி பாபீ, அரைப்படிப்புள்ள அஹம்பாவி, என்னையா பரிஹஸிக்கின்றாய்" என்று இகழ்ந்து பேசித் தோளி னின்று நழுவிய மான்தோலைத் தாறுமாருய் முடித் துக்கட்டிக் கையிலுள்ள ஜபமாலையைத் தூர எறிந்து, தனது குண்டிகைஜலத்தால் ஆசமனஞ் செய்துவிட்டு ஸரஸ்வதிதேவியைச் சபிக்கக் கையில் நீரேந்தினர்.

அப்பொழுது, அமிருதநுரைபோல் அதிக வெண்மை பொருந்திய கற்பக மரவுரிப்பட்டாடை உடுத்து, நெற்றியில் மூன்றுகோடாய்த் திருநீறு அணிந்து; பிரமதேவரின் அருகில் அமர்ந்திருந்த ஸாவித்ரீதேவி, இடதுகையில் ஸ்படிகக் கமண்டலு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, விரல்களில் சங்கு மோதிரங்களுள்ளதும் ஜபமாலை சுற்றியிருப்பதுமான தனது வலது கையை உயர்த்திச் சுட்டுவிரலை ஆட்டி, "அடா பாபிஷ்டனே, கோபத்தினுல் மதிகெட்டுப் போனவனே, துராத்மாவே, அறிவில்லாதவனே, பிராமணப்பதரே, ரிஷிகளுக்குள் கீழ்ப்பட்டவனே, நினது தப்பிதத்தை நினைத்துத் தலைகுனிந்து நிற்கவேண் டிய தருணத்தில், நீ அதைவிட்டுத் தேவர் அசுரர் மனிதர் முனிவர் முதலாய யாவராலும் நமஸ்கரிக்கப் படும் திரிலோகமாதாவாகிய ஸரஸ்வதீதேவியைச் சபிக்கக் கிளம்புகிருயா" என்று துர்வாஸமுனியை அச்சமுற அதட்டிக்கொண்டு தனது ஆஸநத்தினி ருந்து எழுந்தனள்.

உடனே, ஸாவித்ரீதேவியின் அருகில் பஸ்மதாரணஞ்செய்தும் கிருஷ்ணாஜிநந்தரித்தும் கையிற் பலாச

தண்டம் ஏந்தியும் வீற்றிருந்த நான்குவேதங்களும், சடைகள் அலங்கோலப்படத் தேஹத்திலிருந்து வியர்வைத்துளிகள்விழப் பெருமூச்சுவாங்கக் கோபத்துடன் தாமிருந்த பிரம்புநாற்காலிகளினின்று ஓங்காரத்தை உச்சரித்துக்கொண்டு எழுந்தன.

பிறகு, தேவர்கள் "பெரியவரே, பொறுத்தருள வேண்டும். ஸரஸ்வதியைச் சபிக்கலாகாது" என்று பிரார்த்தித்தும், சிஷ்யர்கள் "குருவே, இந்த ஒரு பிழையை மன்னித்தருளுக" என்று கைகூப்பி மன்றாடியும், அத்ரிமஹரிஷி "குழந்தாய், தவத்தை வீணில் பாழாக்காதே" என்று தடுத்தும், யாதொன்றையுங் கவனியாமல் கோபங்குடிகொண்ட துர்வாஸ முனி "அடி, அடக்கமற்ற அஹங்காரீ, இதோ போக்கடிக்கின்றேன் பார் உனது கல்விச்செருக்கை; போகிறேமே பூலோகத்திற்கு" என்று மொழிந்துகொண்டே அந்தச் சாபஜலத்தைத் தரையில் வார்த்தனர்.

உடனே, ஸரஸ்வதிதேவியும் பிரதிசாபங் கொடுக்கத் தொடங்க, ஸாவித்ரீதேவி "தோழி, கோபங் கொள்ளாதே. அடக்கத்துடன் அமர்ந்திரு. சரியானபடி மனப்பக்குவம் பெறுவிடினும் ஜாதியைக்கொண்டே வேதியர்களை வெகுமாணிப்பதுதான் உசிதமான காரியமாகும்" என்று சொல்லித் தடுத்துவிட்டாள்.

அந்த ஸபையில் ஸரஸ்வதியின் சாபத்தைக் கேட்டதும் பெருங் கோலாஹலங்கிளம்ப, பிரமதேவர் தமது வலதுகையை உயர்த்தி அப்பெருங்கூச்சலை அடக்கிக்கொண்டு கம்பீரமான தொனியில் பின்வருமாறு பகரலானார்—

பட்டபாண் சரிதம்.

"ஏ பிராம்மணா, நீர் சென்றவழி பெரியோர்களாற் பாராட்டப்பெற்றதன்று. இவ்வழி பிற்பாடு உம்மைக் கெடுத்துவிடும். ஐம்புலன்களாகும் அசுவங்கள், தங்களை அடக்கிஆள அறியாதவர்களின் கண்களில் கனமாய் மண்ணைவாரிப் போடுகின்றன. புத்திசாலிகள் பரிசுத்தமான புத்தியைக்கொண்டல்லவா நன்மைதீமைகளை நன்கு உணருகிறார்கள். வெறுங்கண் எத்துணைத்தூரந்தான் காணக்கூடும்? தர்மமும் கோபமும், நீரும் நெருப்பும்போல் ஓரிடத்தில் நிலைத்திருக்க முடியுமா? ஒளியைக்கைவிட்டு ஏன் இருளில் ஆழ்கிறீர்? பொறுமை அன்றோ எவ்விதத் தவத்திற்கும் ஆணிவேராவது. முனிவுமுதிர்ந்த உமது புத்தி, பிறருடைய பிழையைக் கவனித்ததேயன்றி தனது தோஷத்தைச் சிறிதளவும் சிந்தித்ததில்லையே! புறங்கூறலும் தவச்செயலும் ஒன்றோடொன்று ஒவ்வாதனவன்றோ. கண்கள் கிடைத்தவனாயிருப்பினும் கடுங்கோபங்கொண்டவன் முழுக்குருடனே. கோபத்தால் கலங்கிய புத்தி, நன்மைதீமைகளைப் பகுத்தறியமாட்டாது. கோபவெறி பிடித்தவனுடைய புருவங் கறுப்பதற்குமுன், அவனது கல்வி இருளடைந்துவிடுகிறது. அவனுடையநேத்திரம் சிவப்பதற்குள், அடாத ஆசை அவனுடைய ஐம்பொறிகளையும் ஆக்ரமித்துவிடுகிறது. அவனது தவம் வியர்வைஜலத்துடன்சிந்திப்போகிறது. அவனுடைய உதடு துடிப்பது கீர்த்தியும் அபகீர்த்தி கூத்தாடுவது மூர்த்தியுமாய் முடிகிறது. விஷவிருக்ஷத்திற்கு வளரும் பட்டையும் உலகநாசத்திற்காகவே உற்பத்தியாவதுபோல், உமக்குச் சடையும் மரவுரியும் அமைந்திருப்பது அனைவரும் அழிந்துபோவதற்குத்

தாரூ! முனிவேஷம்பூண்ட உம்முடைய மனப்பாங்கு நன்னடக்கையை நழுவவிடுவது நன்றன்று. உமது அகத்தில் அடக்கம் அமையாதிருக்க ஏன் வீணில் நாடகக்காரனைப்போல் முனிவேஷம் போடுகிறீர்? உமக்குச் சிறிதேனும் நன்மை உண்டாகுமென எனக்குத் தோன்றவில்லை. இத்தகைய உமது கனக்குறைவைக் கவனிக்கையில் இன்னமும் நீர் ஞானஸாகரத்தின்மீதே தான் மிதப்பதாகக் கருதவேண்டும். இந்த மஹரிஷிகளெல்லாம் பேசவும் பிறர்சொல்வதை அறியவும் பயிற்சிபெறாதவர்களா, அல்லது வெறும் மூடர்களா, என்ன? எல்லாத் தோஷங்களுக்குமிருப்பிடமான உமது மனத்தை விவேகத்தால் அடக்கவேண்டியிருக்க, அதற்கு மாறாகச்சாபங்கொடுத்துக்குற்றமற்ற இந்த ஸரஸ்வதிதேவியை நீர் அமிழ்த்திவிட்டது அநீதத்திலும் அநீதம். அவிவேகிகள் இவ்விதந்தான் தமது அறியாமையாலும் தவறுதலாலும் நேர்ந்த காரியங்களை நினைத்துப் பின்னிட்டு வெட்கமுறுவதுமன்றி உலகத்தோராலும் பழிக்கப்படுகிறார்கள்.''

இவ்வாறு கூறிவிட்டு, பின்பு பிரமதேவர் ஸரஸ்வதிதேவியைப் பார்த்துச் சொன்னதாவது—

''பெண்ணே, ஸரஸ்வதீ, நீ வருந்தவேண்டாம். ஸாவித்ரியும் மண்ணுலகத்திற்கு உன்னுடன் கூடவே வருவாள். நமது பிரிவாற்றாமையால் துயரமுறும் உனக்குத் தக்கபடி தேறுதல்கூறி அவளே ஆறுதல் அளிப்பாள். பூலோகத்தில் ஒரு பிள்ளைபிறந்து அதன் முகத்தை நீ காணவே உனது சாபம் அகன்றுவிடும்.''

இவ்வண்ணம் மொழிந்தபின், பிரமதேவர், தேவர் அசுரர் மனுஷியர் ரிஷிகள் எல்லாரையும் அனுப்பி

விட்டு, பரபரப்புடன் அருகே வந்த நாரதரது தோள் மீது கையை வைத்துக்கொண்டு ஸந்தியாவந்தனஞ் செய்ய எழுந்திருந்தார்.

ஸரஸ்வதீதேவியும் தலைகுனிந்து துயரத்துடன் தன்னுடைய கைகளைத் தளரத் தொங்கவிட்டுக் கொண்டு ஸாவித்ரீதேவியுடன் தனதகம் ஏகினள்.

அப்பொழுது, ஸரஸ்வதிதேவி வரப்போகும் வரலாற்றை முன்னதாகவே அறிவிக்க அவாவுள்ளவன் போல் ஆதித்தனும் ஆகாசத்தினின்று அவனியில் இறங்கலானான். பகலின் கடுமை வரவரத் தணிந்து வந்தது. உலகத்திற்கெல்லாம் ஒரு கண்ணாகிய கதிரவன் செந்நிறம்வாய்ந்து மலைவாயில் விழுந்தனன். கங்கையின் மணல்திட்டில் உட்கார்ந்து ரிஷிகள் ஸந்தியா ஜபம் செய்யத்தொடங்கினர். தேவமாதரின் கூந்தல்களிலுள்ள மல்லிகைமலர்களின் நறுமணத்துடன் அந்திப்பொழுதின் இளங்காற்று வீச ஆரம்பித்தது. ஸந்தியாநர்த்தனமாடும் பரமேசுவரனது ஜடையினின்று சிதறிய குடமல்லிகைப் பூக்களோ இவை என்று எண்ணுமாறு எண்ணிறந்த நக்ஷத்திரங்கள் வானத்தில் தோன்றி விளங்கின. உதயகாலத்திற்சூரிய செந்நிறம் பெற்று உயரக்கிளம்பிய இந்துவின் வெண்மையுள்ள கிரணங்கள் விழவிழ ஆழியின் வெள்ளம் மேலெழும்பி வளருவதைப் பார்ப்பவர்க்கு, சந்திரன் தந்தக்குழாய்கள்வழியாய் நீரைப் பெருகவிட்டு நீள் கடலை நிரப்புகிறானோ என்று நினைக்குமாறிருந்தது.

இந்தச் சமயத்தில் மனமிழந்து கண்ணுங் கண்ணீருமாய் ஏதேதோஎண்ணி ஏக்கமுற்றிருக்கும் ஸரஸ்

வதியின் சமீபம்வந்து ஸாவித்ரீதேவி அடியில் வரு மாறு கூறலுற்றாள். "தோழீ, மூவுலகிற்கும் ஹிதோ பதேசஞ் செய்யும் திறமை வாய்ந்த உன் முன்னிலையில் பேச என் நாவு வெட்கமடைகிறது. தெய்வத்தின் போக்கு, நல்லார் தீயார் என்கிற பேதமில்லாமல் எல் லாரிடத்திலும் ஒரே ரீதியில் தடுக்கமுடியாதபடி வெகு கடுமையுடன் நடமாடுவதை நீயும் நன்றாய்த் தெரிந்துகொண்டவள் தானே. தகாதவரிடமிருந்து ஏதுவின்றி ஏற்படும் அவமானம் அற்பமெனினும், பெருந்தன்மை பொருந்தியவருடைய மனத்தைக் கூட அது வருத்திவிடக் கூடியதே. எப்பொழுதுமே கண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தால் பட்டுப்போகும் மரத்திற்கு ஜலம் விட்டாற்போல், சிறிய ஆபத்தும் சாகோபசாகமாய்த் தழைத்தோங்கி விடுமன்றோ. மன இளக்கமுள்ள மனிதர்களை அற்பமான தாபமும் மல்லிகைப்பூவை வெயில் வாட்டுவதுபோல் வாட்டிவிடு கின்றது. யானைக்கு அங்குசம்போல் பெரியோர்க ளுக்குச் சிறிய மனக்குழப்பமும் பெரிய வாதனையை விளைவிக்கின்றது. சினேகபாசத்தால் கட்டுண்ட ஜன்ம பூமியைவிட்டுவிலகுவது எளிதான காரியமல்ல. பழகிய ஜனங்களை விட்டுப்பிரிவது, இரம்பம் மரக்கட்டையை அறுப்பதுபோல் மனத்தை அறுத்துவிடுகிறது. என் றாலும், நீ இங்ஙனங் கோழைப்படுவது தகாது. துக்க மென்னும் விஷமுளைகள் உன்னிடத்தில் முளைக்க லாமா? மேலும், முற்பிறப்பில் செய்த நல்வினையும் தீவினையும் வன்மையுடன் நாற்புறமும் சூழ்ந்துநின்று அதனதன் பலனைக் கொடுக்கத் தொடங்கிவிடின், அப்பொழுது அறிவுள்ளவனுக்குக் கலங்கிநிற்கக் காரண

ளாம் ஏது? மூன்று உலகத்திற்கும் மங்களம் அருளும் உனது முககமலத்தை அமங்களங்களான இக்கண்ணீர்த்துளிகள் ஏன் தீண்டவேண்டும்? ஆதலின், ஸகி, நீ வாளா வருந்தவேண்டாம். பகருக—பூலோகத்தில் புண்ணியம் நிறையும் எந்த ஸ்தலத்தில் வாஸஞ்செய்ய உனக்கு வாஞ்சை? எங்கெந்தத் தீர்த்தங்களில் நீராட நீ விரும்புகின்றாய்? பாக்கியம்பெற்ற எங்கெந்தத் தபோவநங்களில் தவம்புரியப் பார்க்கின்றாய்? புழுதியிற்புரண்டு விளையாடின காலம்முதல் இடைவிடாமல் பழகிவருந் தோழியாகிய நான் உன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே உன்னுடன் கூடப் பூலோகத்திற்குப் புறப்படத் தயாராயிருக்கின்றேன். இன்றுமுதல் மூன்றுலோகத்திற்கும் குருவாய்த் தேவாதிதேவனாய் அனைவருக்கும் அகிலசுபங்களையும் அருளுபவனாய் எழுந்தருளியிருக்கும் சந்திரசேகரனாகிய முக்கண்ணனை மனம் வாய் மெய் என்னும் திரிகரணங்களாலும் நீ சரணம் புகவேண்டும். வேறு சிந்தனை இருத்தலாகாது. அப்பகவானே சடிதியில் உனது சாபதுக்கத்தை நீக்கியருள்வார்."

இந்தப்பிரகாரம் ஸாவித்ரீ சொல்லியபின், ஸரஸ்வதீ முத்துமுத்தாய்க்கண்ணீரை உதிர்த்துக்கொண்டு "எனது அருமைத் தோழி, நீயும் என்னுடன்கூட வருகின்றமையால் எனக்குப் பிரமலோகத்தை விட்டுப் பிரிவதினாலோ அல்லது கடுஞ்சாபத்திற்காளானதினாலோ கொஞ்சமேனும் மனவருத்தம் ஏற்படப்போவதில்லை. ஆனால் அம்புஜாஸநருக்கு அருகிலிருந்து பணிவிடைசெய்யும் பாக்கியமும் ஆநந்தமும் அகன்று விடுமே என்று நினைத்துத்தான் எனது மனம் உருகுகி

றது. அன்றியும், எனக்குத் தரணியில் தர்மத்திற்கும் தவத்திற்கும் யோகத்திற்கும் தகுதியுள்ள இடங்கள் இவைஇவை என்பது உனக்கே செம்மையாய்த்தெரிந்தவிஷயம்.'' என்று உத்தரம் உரைத்து ஓய்ந்தாள். பின்னர், மனம் பதைபதைக்க இரவு முழுவதையும் கண்மூடாமல் விழித்துக்கொண்டே கழித்தனள்.

மறுநாட்காலையில் சூரியன் உதிக்கவே, பிரமதேவரின் வாஹநஹம்ஸங்களைப் பராமர்சித்துவரும் சேவகனொருவன் கொஞ்சம் அகலநின்று, உரத்ததொனியில்

"மான்தப் போய்கையில் மருவுபெண் ணனமே,
காதலும் மருளுங் கலந்த கண்களால்
மலங்கினை பேனங் கிறங்குநீ வாவித்
தூலம்பின் னேதுவை தாமரை மனைக்கே.'' என்று

பாடினான்.

இதைச் செவியுற்றதும், ஸரஸ்வதிதேவி, அதனைத் தன்னையே சுட்டிச் சொல்லியதுபோல் கருதி, பூலோகத்திற்குப் புறப்படத் தீர்மானித்துத், தனது பிரிவாற்றாமையால் துயரமுறும் பணியாளரையும் பந்துவர்க்கத்தினரையும் பாராட்டாதுவிடுத்து, பிரமதேவரை மும்முறை வலம்வந்து, கூடவேவரத் தலைப்பட்ட தாபஸர்களை நல்லவார்த்தைசொல்லி நிறுத்திவிட்டு, பிரமலோகத்தினின்று ஸாவித்ரியுடன் வெளிக்கிளம்பினாள்.

பின்பு, கரைகளில் வர்லகில்ய முனிகள் வீற்றிருக்கப்பெற்றதும், நக்ஷத்திரங்கள் மிதக்குமாறு மேலே வெகுதூரமெழும்பும் அலைகளமைந்ததும், ரிஷிகள் தர்ப்பணஞ் செய்கையில் சிதறிய எள்ளுகள் நிறைந்து

விளங்கும் மணல்திட்டுகளுடையதும், நீராடிச் சுத்தி பெற்ற பிரமதேவர் பித்ருதேவதைகளைக் குறித்துக் கரையிலிட்ட பிண்டங்கள் காணப்பெற்றதும், கரையோரங்களில் கிடக்கும் தர்ப்பப்படுக்கைகளால் சூரிய கிரஹண காலத்தில் ஸப்தரிஷிகள் உபவாஸத்துடன் இவ்விடத்தில் படுத்திருந்தார்கள் என்று தெரிவிக்கின்றதும், ஆசமனஞ்செய்து புனிதம் வாய்ந்த புரந்தரன் பூஜைசெய்த புஷ்பங்கள் எங்கும் இறைந்து கிடக்கப்பெற்றதும், தேவமங்கையர் பலரும் இறங்கிக் களிப்புடன் நீந்திக் குளித்து விளையாடப்பெற்றதும், மணல்தரையில் பிருகஸ்பதியால் அக்கினிவளர்த்து ஆஹுதி செய்யப்பெற்றதும், மணல்திட்டில் ஸித்தர்கள் மணலால் சிவலிங்கம் பிடித்துப் பூஜிக்குமளவில் ஆகாசத்தில் இச்சிவலிங்கத்தைத் தாண்டிச் செல்ல அச்சமுற்று அகன்றுநிற்கும் வித்யாதரர்களால் விரைவில் வணங்கப்பெற்றதும், புண்ணியமென்னும் சரக்குவிற்கும் அங்காடிபோலிருப்பதும், கைலாஸமலை என்னும் யானைக்கு வெண்பட்டுக்கொடிபோல் விளங்குவதும், பாபங்களை நீக்கி முக்திநகரிக்குச் செல்லும் வழிபோன்றதுமான ஆகாசகங்கையை அநுஸரித்தே பூலோகத்தினிடம் இறங்கலானாள்.

ஆகாயவீதியிலிருந்துகொண்டே அமிருதப்ரவாஹம்போல் தெளிவும் குளிர்ச்சியும் இனிமையும் பெற்று விளங்கும் ஜலம் நிறைந்து ஓடும் சோணம் என்னும் மஹாநதத்தைப் பார்த்துவிட்டு, ஸரஸ்வதீ, அதன் அழகினால் தன் மனம் இழுபட, ஸாவித்ரியோடு இவ்விதம் சொல்லலானாள்— "தோழி, சோணநதத்தின்

இருகரையும் எவ்வளவு அழகாயிருக்கின்றன. பார்த்தீரையா? இந்நதத்தை நமது பிரமதேவரின் குழந்தை என்று கொண்டாடுவதுண்டு. இதற்கு ஹிரண்யவாஹன் என்ற மறுபெயரும் வழங்கி வருகின்றது. தீரங்களிலுள்ள மரங்களிலிருந்துகொண்டு மயில்கள் எத்துணை இனிமையாக அகவுகின்றன. மலர்களினின்று உதிர்ந்துவிழும் பராகங்கள் பெரிய மணல்திட்டுபோல் காணப்படுகின்றன. புஷ்பங்களின் வாஸனையை அநுபவித்து மதங்கொண்ட வண்டுகள் வீணைபோல் மதுரமாய் இசை பாடுகின்றன. என்மனம் இங்குத்தானே இருக்க இச்சை கொள்கின்றது."

இவ்வபிப்பிராயத்தை ஸாவித்ரியும் தழுவ, இருவரும் அச்சோணநதத்தின் மேற்குக்கரையில் இறங்கி அங்குக் கற்பாறையுள்ள ஒரு கொடிவீட்டில் வஸித்து வரத் தீர்மானித்தனர்.

கொஞ்சநேரம் அந்த லதாகிருஹத்தில் உட்கார்ந்து விடாய் தீர்த்து எழுந்து தேவபூஜைக்குரிய புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு சோணநதத்திற்குச் சென்று இருவரும் நீராடினர்.

பின்னர், ஸரஸ்வதீதேவி அந்தச்சோணநதத்தின் மணல்திட்டில் ஈரமணலைக்கொண்டு சிவலிங்கம்பிடித்துவைத்துப் பரமபக்தியுடன் கீர்த்தனங்களைப்பாடிப் பரம்சிவனது எட்டு மூர்த்திகளையும் தியானித்துக் கொண்டு புஷ்பார்ச்சனை செய்தாள்.

தேவதாபூஜை முடிந்தவுடன் அவ்விடத்தில் சுலபமாய்க் கிடைக்கும் பழம் கிழங்கு இவைகளைப் புசித்தும், அமுதினும் அதிருசியுள்ள சோணநதத்தின்

தண்ணீரை அருந்தியும் தனது தேகயாத்திரையைக் கழித்தனள். இவ்விதம் பகலைக் கழித்துவிட்டு இரவில் அந்த லதாமண்டபத்திலேயே தளிர்களை மெத்தைபோல் பரப்பி அதில் படுத்துறங்கினாள். நாள்தோறும் அவளுடைய காரியங்கள் இம்மாதிரியாகவே நடைபெற்றுவந்தன.

இவ்வாறு அனேக நாட்கள் செல்ல ஒருதினம் சூரியன் உதித்து ஒரு ஜாமம் சென்றபொழுது, வடதிசையில் அக்கானகத்திலுள்ள குகைகளெல்லாம் எதிரொலிபடுமாறு குதிரைகளின் மிக்க வலுத்த கனைப்புத்தொனியைச் செவியுற்றாள். உடனே லதாமண்டபத்தினின்று வெளிவந்து 'இஃதுஎன்ன' என்று ஆவலுடன் பார்க்கும்பொழுது தாழம்பூப் பொடிபோல் வெண்ணிறமுள்ள புழுதி எதிரில் கிளம்பிவரக் கண்டாள்.

அற்பநேரஞ் சென்றதும், யெளவனப்பருவம் வாய்ந்த ஆயிரக்கணக்கான வீரர் அடங்கிய காலாட்படை முன்செல்லப் பின் தொடர்ந்துவரும் ஒரு குதிரைப்படை புலப்பட்டது. அப்பதாதிவீரர்களோ தங்களுடைய சிகைகளை உச்சிக்குடிமிகளாகக் கட்டியும், காதுகளில் தந்தத்தாற் செய்த ஓலைச்சுருள்களை அணிந்தும், தாங்கள் தரித்திருக்கும் சொக்காய்கள்கூடக் கறுக்குமாறு கருப்பகிற்சந்தனக்கலவையைப் பூசியும், தங்கள் தங்களது அங்கவஸ்திரத்தைத் தலைப்பாகையாகச் சுற்றியும், இடதுகையில் தங்க வளையல் ஒவ்வொன்றைத் தரித்தும், இரண்டு சுற்றாகச் சுற்றிக்கட்டியிருந்த அரைக்கச்சையில்

சிறிய கத்தியைச் செருகியும், கைகளில் பட்டாக் கத்தி தடி இவற்றை ஏந்தியும் இருந்தார்கள். மேலும் அவர்களுடைய சரீரம் எப்பொழுதும் கவாத்துப் பழகுவதால் மெலிவும் உரப்புமுள்ளதாயிருந்தது. அவர்கள் மான்களைப்போல் துள்ளிக்குதித்துக்கொண்டும், காட்டிலுள்ள பலவிதமான பூ பழம் கிழங்கு இவைகளை எடுத்துக்கொண்டும், "நட நட, போ போ, ஒதுங்கு ஒதுங்கு, முன்னடி வழியை விடு" என்று இடைவிடாமல் கூச்சல் போட்டுக்கொண்டும் வந்தார்கள்.

அந்தக் குதிரைப்படையின் மத்தியில் பலவித ரத்தினங்கள் இழைக்கப்பெற்றதும் ஓரங்களில் முத்துஸரங்கள் ஜாலர்களாகத் தொங்கவிடப் பெற்றதுமான வெண்குடையின்கீழ், ரூபம் லாவண்யம் காந்தி கீர்த்தி பிரதாபம் இவைகள் குடிகொண்டவனாய்க் குதிரைமேலேறிவரும் சுமார் பதினெட்டு வயதுள்ள வாலிபன் ஒருவனை ஸரஸ்வதிதேவி கண்டனள்.

அவன் தனது சுருள்சுருளான கூந்தலை அழகாய்க் கட்டி அதன்மீது மகிழமொட்டு மாலையைச் சூட்டியிருந்ததுந் தவிர, ஒரு மல்லிகைமாலையையுந் தலையினின்று முதுகில் தொங்கவிட்டிருந்தான். அவனது நெற்றியோ சந்திரகலைபோல் அழகும் வளைவும் வாய்ந்து மனோசிலைபோல் செவ்விய காந்தியைப் பரவவிட்டுக் கொண்டிருந்தது. யௌவனப்பருவத்தின் ஆரம்பமாகையால் மூவுலகத்தையும் மதியாதபடி அதிகம்பீரமான பார்வை பொருந்திய அவன் கண்ணினது ஒளி வீசுமிடத்து ஆம்பலும் குவளையும் தாமரையும் பூத்துவிளங்குவதுபோல் தோன்றும். அவனு

டைய மூக்கைப் பார்த்தால் கண்களாகும் இரு நதிக ளின் மத்தியில் போடப்பட்டிருக்கும் அணைக்கட் டோ என்றும், நெற்றியாகும் சந்திரகாந்தக் கல்லி னின்றும் உருகியொழுகும் காந்திவெள்ளமோ என்றும் எவரும் எண்ணுவர். பலவகை வாசனைச் சரக்குக் கள் சேர்த்து நன்றாய்ச்செய்த ஒருவித குளிகையை வாயிலிட்டிருப்பதால் அவ்வாசனைக்கு வசப்பட்டு வண்டுகள் அவனது முகத்தைச் சுற்றிச்சுற்றி வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. அவன் தனது சமீபத்தி லிருந்த ஸ்நேஹிதனுடன் முகமுயர்த்தி சிரிப்பும் களிப்புமாய்ப் பரிஹாஸவார்த்தைகளைப் பகர்ந்து கொண்டிருக்கையில் பற்களினின்று பரவுங் காந்தி சந்திரிகைபோல் சுந்தரமாயிருந்தது. அவன் இருபுற மும் பெரியமுத்தும் நடுவில் மரகதமும் பதித்துத் திரிகோணவடிவில் கட்டப்பெற்ற கடுக்கனைக் காதில் அணிந்திருந்தான். மதனனது துவஜஸ்தம்பம்போல் நீண்ட அவனுடைய கைகளில் நல்லவாசனையுள்ள கஸ் தூரிக்குழம்பினால் சிலசித்திரங்கள் வரையப்பட்டிருந் தன. கர்ப்பூரப்பொடி பூசியதால் நல்ல மணமும் வெண்மைக்குணமும் வாய்ந்த அவனது விசாலமான மார்பில் அதிதவளமான யஜ்ஞோபவீதம் மந்தரகிரி யின்மீது கங்காப்ரவாஹம்போல் தூய்மையுடன் துலங்கிற்று. அவன் பச்சைநிறமுள்ள வஸ்திரத்தை அரையில் தொப்புள்தெரியத் தரித்துக்கொண்டு அவ் வஸ்திரத்தின் முன்தலைப்பை முன்பாகத்தில் நன்றாய்ச் செருகியும், பின்தலைப்பைப் பின்பாகத்தில் அதிகம் தொங்கவிட்டுச் செருகியும், துடையின் மூன்றிலொரு

பாகம் வெளியில் தெரியும்படி தூக்கி இழுத்துக்கட்டியுமிருந்தான். ஐராவதத்தின் தும்பிக்கைபோல் நீண்டு திரண்டுருண்ட அவனுடைய துடைகள் அவனது விசாலமான மார்பாகும் கற்பாறையைத் தாங்கி நிற்க நாட்டிய இரண்டு கருங்கற் கம்பங்கள்போல் விளங்கின. எப்பொழுதும் தேகப்பயிற்சி பெறுவதால் முட்டுக்களிரண்டுஞ் சதைப்பற்றும் அழுத்தமுமுள்ளவைகளாயிருந்தன. பெருத்த துடைகளைச்சுமந்து நிற்குஞ்சிரமத்தால் இளைத்தவைபோல் முழங்தாள்கள் இரண்டும் படிப்படியாய்ச் சிறுத்து வலிமைவாய்ந்திருந்தன. அவன் குதிரையின்மீதிருந்துகொண்டு அதன் இருபுறத்திலுமுள்ள அங்குவடிகளில் கால்களை வைத்துக்கொண்டிருக்க, அந்தப்பாதங்களின் நகவொளி அலங்காரசாமரங் கட்டியிருப்பதுபோல் அந்தத் துரகத்தின் காதோரங்களில் கனமாய் வீசிற்று. அவன் ஏறிவந்த குதிரையோ மிகப்பெரியது. அதன் நிறம் கருநொச்சிற்பூவை ஒத்திருந்தது. அதன் நெற்றியில் தங்கச்சுட்டிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. தங்கத்தாற்செய்த பெருங் குண்டுச்சதங்கைமாலை அதன் கழுத்தில் கட்டப்பெற்று 'கலீர் கலீர்' என்று ஒலித்துக்கொண்டிருந்தது. அவ்வுத்தமாசுவம், வாயில் பூட்டியிருந்த கடிவாளத்தை 'கட கட' என்று சப்தம் புறப்படுமாறு அடிக்கடி பற்களால் கடித்துக்கொண்டும், முன்னங்கால்களைச் சிறிது வளைத்துச் சரித்து ஆகாயத்தில் மனோவேகத்துடன் ஊடுருவிப் பாய்ந்துபாய்ந்து தாவிக்கொண்டும் ஓடிவந்தது. பூமியில் அதன் குளம்புபட்ட பிரதேசங்க

ளெல்லாம் வெட்டுண்டுபோயின. அக்குதிரையின் இரு புறத்திலும் இரண்டு சேவகர்கள் ஜேணத்தைப் பிடித்துக்கொண்டே வெண்சாமரம் வீசிவர, முன்பக்கத்தில் தனது எஜமானர் கேட்டுக் களிப்புற்று மயிர்சிலிர்க்கும்படி கட்டியக்காரன் கட்டியங் கூறிவந்தான்.

அவ்வாலிப புருஷன் பார்ப்போருடைய மனம் கண் மற்ற இந்திரியங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஆகர்ஷித்துக்கொண்டு, சிருங்காரரஸமே இவ்வடிவமெடுத்து வந்தாற்போலவும், மன்மதனே மறுஜன்மம் பெற்று மருவினாற்போலவும், உலகத்தின் புண்ணியமே இவ்வுருவமமைந்து உலாவினாற்போலவும் விளங்கினான்.

இவனருகில் உருக்கிவிட்ட தங்கத் தூண்போல் உயரமும் காந்தியும் வன்மையும் பொருந்தியவனும், வயது சென்றும் கசரத்துச்செய்வதால் தேகதிடனமைந்தவனும், கத்தரித்த மீசை குடுமி நகம் இவைகளுடையவனும், வழுக்கைத்தலையனும், கொஞ்சம் தொந்தியுள்ளவனும், மார்பில் உரோமமடர்ந்திருப்பவனும், வெளுத்த சட்டைதரித்தவனும், வெண்பட்டைத் தலைப்பாகையாய்ச் சுற்றியிருப்பவனும், நடை உடை முதலியவைகளில் அடக்கமுள்ளவனுமான மற்றொரு புருஷன் வேறொரு குதிரையின்மீதிருப்பதும் ஸரஸ்வதீதேவியின் பார்வையில் விழுந்தது.

பிறகு, முன்சென்ற பதாதிகள் அவ்விரு தேவகன்னிமாரையும் கண்ணுற்று வியப்படைந்து திரும்பி ஓடிவந்து தாங்கள் கண்டமாதிரி தெரிவிக்கவே, அதைச் செவியுற்ற அவ்வாலிபன் அவரைக் காண ஆவல்கொண்டு குதிரையைத் துரிதமாய் நடத்தி அவ்

விருவரிருக்கும் கொடிவீட்டிற்குச் சற்றுத்தூரத்திலேயே குதிரையினின்று கீழிறங்கிப் பரிஜனங்களைக் கூட வாராவண்ணம் கட்டளையிட்டுவிட்டுத் தான் அந்தக் கிழவனுடன் கால்நடையாகவே லதாமண்டபத்திற்குட் சென்றான்.

இவர்களிருவரும் உட்கடந்து ஸாவித்ரீதேவியையும் ஸரஸ்வதிதேவியையும் அடிபணிந்து வணங்கி நிற்க, தேவிமாரிருவரும் இவர்களுக்கு உட்காரத் தளிர்களாலாகிய ஆஸநங்கொடுத்து வனவாஸத்திற் கேற்றவாறு புஷ்பம் பழம் முதலியவற்றைக்கொண்டு அதிதிஸத்காரஞ் செய்து, அவர்கள் ஆஸநத்தில் அமர்ந்தபின் தாங்களும் உட்கார்ந்தனர்.

அப்பொழுது, ஸாவித்ரீதேவி அக்கிழவனோடு அடியில் வருமாறு பேசத்தொடங்கினாள்—"ஐயா, இயற்கையாகவே அச்சமும் நாணமும் அணிகலமாயுள்ள அங்கனைமார் ஆடவருடன் தாமாகவே முதன்முதலில் பேசப்புறப்படுவது முற்றிலும் அசட்டுத் துணிச்சல்; அதிகப்பிரஸங்கித்தனமுமாம். அதிலும் விசேஷித்துக் காட்டில் மான்பேடுகளுடன் பழகி உலக நடவடிக்கை அறியாத நற்குலக் கன்னிகைமாரைப் பற்றி நவிலவும் வேண்டுமோ? எனினும், உங்களைக் கண்டுகளித்த கண்களிடத்தில் பொறாமைகொண்டது போல் எனது காது உங்களுடைய வரலாற்றைக் கேட்க விருப்பமுற்று என்னைப் பலமாய் வற்புறுத்துகின்றது. நல்லோர்கள் முதற்காட்சியிலேயே தமது அன்பைப் பேட்டிப்பொருளாக அளித்துவிடுகின்றார்கள். பெருந்தகைமையுள்ளவர்கள் தாழ்மையைக்

காட்டித் தமது மனத்தை ஒளிக்காமல் வெளியிடத் தொடங்கினால், கூடவிருப்பவனுக்குத் திறமையும் தைரியமும் இல்லையாகிலும் ஏதாவதுளறிக்கொட்ட உற்சாகம் உதிக்கின்றது. மிக்க வணக்கமுள்ள நல்லோர்கள்மீது நமக்குண்டாகும் நன்னம்பிக்கை நாளடைவில் நமது பிரயத்தனமின்றியே தீவிரமாய் முன்னேற்றம் பெற்றுவிடுகிறது. பெரிதும் பெருமை பொருந்திய இவ்வாலிபரது அழகு அகிலபுவனங்களிலும் அரிதாயிருப்பதால் அடங்காத ஆச்சரியம் ஆவிர்ப்பவிக்கின்றது. ஆம்; இதுகாறும் காணப்பெறாத சிருஷ்டிவிசேஷங்களைப் புதிதாகப் பார்க்கையில் எவ்வளவு அழுத்தமுள்ள மனத்தினரும் ஆச்சரியக் கடலில் அமிழ்ந்துவிடுவார்களன்றோ. தெய்வானுக்கிரஹம் பெற்ற இவரது சுபகரமான நல்லொழுக்கம் இங்ஙனம் பேசவும் வினவவும் என்னைத் தூண்டுகின்றதேயன்றி அபலைகளுக்கு இயல்பாயுள்ள மனத்துடிப்பு அன்று இதற்குக் காரணம். ஆதலின், சொல்லுக — இவருடைய பிரிவுபாட்டினால் எந்தத் தேசம் புண்ணியத்தைப் பறிகொடுத்துத் துயரத்தால் தவித்து நிற்கின்றது? நீங்கள் எங்குப் போகவேண்டும்? அரனுடைய அஹங்காரத்தை அடக்கவந்த மற்றொரு மன்மதனைப்போன்ற இவரை மாதவம்புரிந்து புதல்வராகப்பெற்றுப் பேரன்பினால் தமது மார்போடணைத்துத் தழுவி ஆநந்திக்கும்படி இலாக்கியமான பாக்கியம் படைத்தவர் எவர்? சூரியனைப்போல் மஹாதேஜஸ்வியான இவரை மூவுலகமும் போற்றும் எந்தப் பாக்கியவதி பெற்றெடுத்தனளோ? இவருடைய பெயரினை

சேருமாறு புண்ணியஞ்செய்த அக்ஷரங்கள் எவை? தங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதிலும் ஆவல் அதிகரித்த எனது மனம் இவ்வாருகவே வினவ விரும்புகின்றது.''

இவ்வண்ணம் ஸாவித்ரீதேவி பேசிமுடிக்க, அக்கிழவன் வணக்கத்துடன் வருமாறு மறுமொழிகூறலாஞன்—''அம்மா, பக்ஷமாய்ப்பேசுதலென்பது ஸாதுக்களுக்குக் குலவித்தையன்ருே! உமது வதனம்போல் உமது மனமும் சந்திரவடிவமாய் நின்று அமிருதம் போல் குளிர்ந்த வசனங்களால் கேட்போர்களை மகிழ்விக்கின்றது. ஸௌஜன்யத்திற்கு விளைநிலமாகிய உம்மைப் போன்றவர்கள் உலகம் செய்த பெரும் புண்ணியத்தின் பயனுகவே எப்பொழுதேனும் தோன்றுகின்ருர்கள். நற்குடிப்பிறப்போர்கள் ஒருவருக்கொருவர் வார்த்தையைக் கலக்கவேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லை; அவர்களுடைய பார்வை ஒன்ருேடொன்று கலந்தமாத்திரத்திலேயே உயர்ந்த நிலைமை உண்டாய்விடுகிறது. கேளும்—பார்க்கவ குலத்திற்கு ஆபரணமான இவ்வாலிபர், இந்திரனது வஜ்ரமேந்திய கையைத் தமது மஹிமையால் ஸ்தம்பிக்கச் செய்தவரும், தமது தேஜஸ்ஸிஞல் புலோமன் என்னும் அஸுரனைச் சுட்டெரித்தவரும், தேவரும் அஸுரரும் தமது திருவடிகளில் பணியுமாறு மாட்சிமை பெற்றவருமான ச்யவனமஹரிஷியின் அருமைப்புதல்வர். இவரது மாதாவோ மஹாராஜாதிராஜஞன சர்யாதநரபதியின் பெண்ணுகிய ஸுகன்யை என்பவள். ததீசன் என்பது இவரது பெயர். தமது குமாரி கர்ப்பிணி

யாயிருப்பதை அறிந்த சர்யாதர் பிரஸவத்திற்காக ஸுகன்யையைத் தமது அரண்மனைக்கு வரவழைத்தார். அவ்விடத்தில்தான் சிரஞ்சீவியான இவர் பிறந்தது. இவர், பந்துக்கள் கண்டு களிப்புறுமாறு இளம் பிறைச் சந்திரனைப்போல் நாளுக்குநாள் வனப்புடன் வளர்ந்துவந்தார். சர்யாதமஹாராஜர் தமது பெண்ணைமாத்திரம் புக்ககத்திற்கு அனுப்பிவிட்டு, அழகிய இப்பாலனை அனுப்ப மனமில்லாமல் மனது ஸமீபத்திலேயே நிறுத்திக்கொண்டார். அவ்விடத்தில்தான் இவர் அகில வித்தைகளையும் கலைகளையும் கற்றுணர்ந்தது. இவருக்கு யௌவனப்பருவம் வந்தபின், நம்மைப் போலவே இவனது தகப்பனாரும் இவனழகைக் கண்டு ஆநந்திக்கட்டும் என்று நினைத்து, மாதாமஹராகிய சர்யாதர் மனமின்றியே இவரைப் பிதாவின் ஸமீபத்திற்கு அனுப்பியிருக்கின்றார். நான் அந்த சர்யாத மஹாராஜருடைய வேலைக்காரன். விகுக்ஷி என்பது எனது பெயர். என்னை இவருக்கு வழித்துணையாக அந்த அரசர் அனுப்பினார். அவருடைய அரண்மனையில் எங்களுக்குத் தலைமுறை தலைமுறையாய்ச் சேவகம் ஏற்பட்டிருக்கிறது. வம்சபரம்பரையாய்வரும் வேலைக்காரனிடத்து மேன்மக்களுக்கும் ஒருவகைத் தாக்ஷிண்யம் உண்டாய்விடுகிறதல்லவா. மஹான்களின் தாக்ஷிண்யப் பொக்கிஷம் எந்நாளும் குறைவற்றதன்றோ. இவ்விடமிருந்து இரண்டுநாழிகை தூரத்தில் சோணநதக்கரையில், குபேரனது பூங்காவனம்போல் அழகுவாய்ந்த ஓர் உபவனத்தில்தான் பகவான் ச்யவனமஹரிஷி வஸிக்கின்றார். அந்த

இடத்திற்கு ச்யாவனம் என்பது பெயர். எங்களுடைய யாத்திரையும் அவ்விடத்தோடு முடிவுபெறும். உமக்கு எங்களிடத்தில் தாக்ஷிண்யமிருந்தால், உம்முடைய மனத்தில் எங்களைப்பற்றி அலக்ஷியம் தோன்றுவிடில், எங்களிடத்தில் உமக்குத் தயை உளதாயின், நாங்கள் கேட்கத்தக்கதானல், ஆவலுடன் நான் செய்துகொள்ளும் முதலாவதான விண்ணப்பத்தை நீர் தள்ளாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். உங்களுடைய விருத்தாந்தத்தைக் கேட்க எங்களுக்கும் விருப்பமுண்டு. உங்களுடைய ஆகிருதியைப் பார்த்தால், நீங்களிருவரும் தேவப்பிறப்பினர் என்பது எங்கள் துணிபு. உங்களுடைய குலத்தையும் பெயரையுமே தெரிய விரும்புகிறோம். ஆகையால், சொல்லுங்கள்—நீங்கள் ஜனித்ததால் எந்த வம்சம் மேன்மைபெற்றது? உமது ஸமீபத்திலிருக்கும் இவ்வம்மை யாவர்? இவ்வம்மையிடத்து ஒன்றோடொன்று பொருத்தமில்லாத பதார்த்தங்கள் கூட ஒற்றுமையுடன் கூடியிருக்கின்றனவே! இஃது என்ன புதுமை! காரிருளும் காலைவெயிலும், அம்புஜமும் அம்புலியும் ஓரிடத்தில் ஒன்றுகூடி உறவாடுமோ!''

இங்ஙனம் விகுக்ஷி வினவியபின்னர், ஸாவித்ரீ தேவி ''ஐயா, நாங்களிருவரும் இனியும் சிலகாலம் இங்குத்தானே வஸிக்கப் போகின்றோம். வழியோ வெகு கிட்டம். நீங்களும் அடிக்கடி வரமுடியுமே. ஆதலின், நமக்கு ஏற்படும் பழக்கத்திலிருந்தே எங்களுடைய வரலாற்றை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். ஏதோ போகிறபோக்கில் பார்த்தோமென்றிராமல் எங்களை மறவாதிருப்பீர்களாக'' என்று மறுமொழி கூறிவிட்டு மௌனமாயிருந்தாள்.

ததீசனே நீருண்டமேகத்தின் தொனிபோல் மிக்க கம்பீரமான ஸ்வரத்தில் "ஐயா, நாம் அடிக்கடி வந்து கொண்டிருந்தால், கௌரவமுள்ள இந்த அம்மாள் கட்டாயம் கருணை காட்டுவாள். இப்பொழுது என் தகப்பனுரைப் பார்க்கப் போவோம். எழுந்திரும்; புறப்படுவோம்" என்று சொல்ல, அதற்கு விகுக்ஷியும் இசையவே, இருவரும் எழுந்திருந்து தேவிமாரை நமஸ்கரித்துக் குதிரைமீதேறிக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

அப்பொழுது, ஸரஸ்வதீதேவி, விழித்த விழியாளாய் இமைகொட்டாமல் வெகுநேரம் ததீசனையே பார்த்தவண்ணமாயிருந்தாள்; ததிசனும் கொஞ்ச நேரத்திற்குள் சோணநதத்தைக்கடந்து தனது பிதாவின் ஆச்ரமத்தை அடைந்தான்.

ஸரஸ்வதீதேவியோ ததீசன் சென்ற பிறகும் அத்திசையையே நெடுநேரம் நோக்கினுள்; மிகப்பிரயாசைப்பட்டுப் பின்பு தனது பார்வையை அவ்விடமிருந்து திருப்பினுள்; பின்னும் கொஞ்சநேரம் அசையாமல் அங்கேயே உட்கார்ந்துகொண்டு ததீசனது அளவுகடந்த அழகை அடிக்கடி நினைத்தாள்; வியப்புற்றுள். அவளுடைய கண் மறுமுறையும் ததீசனைக் காண விரும்பிற்று; அவளது பார்வை பரவசமாய் அத்திக்கையே நாடிச் சென்றது; அவள் அனுப்பாதிருந்தும், அவளது மனம் ததீசனேடுகூடவே போயிற்று. இளங்கொடியினிடத்தில் புதுத்தளிர் புறப்படுவதுபோல், அவளிடத்தில் அநுராகம் எவ்வாறுகவோ

அங்குரித்தது. சோம்பலும் கவலையும் மயக்கமுமாக வே அவளுக்கு அப்பகல் சென்றது.

வேதஸ்வரூபியாகிய ஸூரியபகவான் அஸ்தமிக்க, அந்தகாரம் ஆகாயத்தையும் அவனியையும் அளாவி நின்றது. கொஞ்சநேரத்தில், ஆகாசகங்கையினின்று அன்னப்பட்சி மெதுவாகக் கிளம்புவதுபோல் வெண் மதியும் உதித்து உயர்ந்துவரலாயிற்று.

அப்பொழுது, ஸரஸ்வதி, ஸந்தியாநமஸ்காரம் செய்துவிட்டு சீக்கிரமாகவே பல்லவப்படுக்கையில் வந்து விழுந்தாள். ஸாவித்ரியும் ஸந்தியாகாலத்திற் குரிய கடமைகளை முடித்துவிட்டு, உரிய ஸமயத்தில் தளிர்மெத்தையில் படுத்துறங்கினாள்.

ஸரஸ்வதிக்கோ தூக்கம் வரவில்லை. வெறுமையே கண்களை மூடிக்கொண்டு, அந்தப் படுக்கையில் அவள் அடிக்கடி புரண்டுருண்டுகொண்டிருந்தாள். அந் நேரத்தில் அவள் மனத்தில் இவ்வாறான எண்ணம் உதிக்கலாயிற்று— "ஆஹா! மனுஷியலோகம் மற்ற லோகங்களைவிட மிகுதியும் மேன்மை பெற்றுவிட்டது. இதிலல்லவோ இவ்விதம் மூவுலகத்திற்கும் பூஷண மாய் ஸகலகுணங்களும் நிறைந்த நல்ல ரத்தினங்கள் விளைந்திருக்கின்றன. ஆம்—ததீசனது முகத்தினின்று பெருகிவரும் காந்திப் பிரவாஹத்தின் ஒரு பிந்துவே இந்து. இவனது பார்வையின் பரப்புத்தான் ஆம்ப லோடை, நீலோற்பலவாவி, தாமரைப்பொய்கை. இவ னுடைய அதரத்தின் அழகிய காந்திகளே மலர்ந்த செம்பருத்திப்பூக்கள். இவனது அவயவங்களின் அழ கை அளவிட்டு உலகத்தோர் உரைப்பதற்காகவே

அருங்கன் ஆவிர்ப்பவித்தனன்போலும். இவனை எந்த யுவதிகள் பார்த்ததில்லையோ, அவர்களுடைய கண்ணும் மனமும் யௌவனமுமன்றோ பாக்கியம் பெற்றவை. ஜன்மாந்திரத்தில் நான் செய்த பாபமல்லவா இவனை எனக்கு க்ஷணகாலம் காட்டிவிட்டது. இப்பொழுது நான் செய்யக்கூடியதென்ன?"

இத்தகைய எண்ணங்கள் தோன்றிக்கொண்டேயிருக்க, வெகுநேரஞ் சென்றபின், மிக்கப் பிரயாசையுடன் ஒருமாத்திரி அற்பகாலம் தூங்கினாள். தூங்குகையில் அக்கட்டழகனையே கனவிலுங் காணலானாள். உடனே பஞ்சபாணன் வில்வளைத்து நாணேற்றி விரைவில் விட்ட அம்பு ஸரஸ்வதியின் மார்பில் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. திடீரென விழித்துக்கொண்டாள். அன்று முதல் அவளுக்கு எல்லா விஷயங்களிலும் அருவருப்புத் தோன்றத் தொடங்கிற்று. மலர் நிறைந்து மணங்கமழும் கானகக் கொடிகளைக் காணக்காண, ஸரஸ்வதிக்கு மனவேதனை அதிகரித்தது. பூக்களினின்றும் பொடிகளை வாரியிறைத்துக்கொண்டு மந்தமாருதம் வீச வீச, இவளுடைய கண்கள் கண்ணீர் சொரிந்தன. சோணநதத்தில் விளையாடிவிட்டு ஹம்ஸபக்ஷிகள் தங்களது நனைந்த இறக்கைகளை அடித்துக்கொண்டு உயரப்பறந்து செல்வதைப் பார்க்கப்பார்க்க, இவளது தேகம் வியர்த்து நனைந்துவிட்டது. தாமரைப்பொய்கையில் ஊஞ்சலாடுவதுபோல் அலைகள் மேன்மேலும் எழஎழ, இவளது உடலில் நடுக்கம் எடுத்தது. சக்கிரவாகப்பறவைகளுள் ஆணும் பெண்ணும் பிரியுங்கால் அவைகள்படுந் துயரத்தினை

நினைக்க நினைக்க, இவளது பொன்மேனி கறுத்தது. பூவினுட் புரண்டு வெளிவந்த வண்டினங்கள் இசை பாடப்பாட, இவளுடைய சரீரத்தில் பலவாறு சேஷ்டைகள் நிகழ்ந்தன.

இவ்விதம் பலநாள் கழிந்தபின், ஒரு தினம் விகுக்ஷி திரும்பிப்போகையில் இவ்வழியாய் வந்து, கூட வந்தவர்களையெல்லாம் வெளியில் நிறுத்திவிட்டுக் குடை பிடிப்பவனைமாத்திரம் கூட்டிக்கொண்டு ஸரஸ்வதீதேவி வஸிக்கின்ற லதாகிருஹத்தினுட் சென்றான்.

ஸரஸ்வதீதேவியும், ஸமீபத்தில் வரும் விகுக்ஷியை அவனது வழிநடந்த களைப்புத் தீர அன்புடன் தனது குளிர்ந்த பார்வைகொண்டே எதிரேற்க, இவனும் சென்று அவள் அளித்த ஆஸநத்தில் அமர்ந்தான்.

பின்பு ஸாவித்ரீதேவி "ஐயா, நமது ரிஷிகுமாரருக்கு க்ஷேமந்தானே?" என்று வினவ, விகுக்ஷியும் "அம்மா, க்ஷேமந்தான். உங்களிருவரையும் நினைத்துக்கொண்டேயிருக்கிறார். ஆனால், கொஞ்சகாலமாய் அவருடைய தேகம் இளைத்துக்கொண்டே வருகிறது. என்னவோ மனக்கவலையில் அவர் மூழ்கியிருக்கின்றார். காரணமோ தெரியவில்லை. மேலும், உங்களுடைய செய்திகளை அறிந்துகொள்ளுவதற்காகத் ததீசரிடமிருந்து மாலதி எனும் தூதி அடுத்தாற்போல் இவ்விடம் வரப்போகிறாள். அவளோ ததீசருக்கு உயிருக்குயிராயிருப்பவள்" என்று விடையளித்தான்.

இதைச் செவியுற்றதும், ஸாவித்ரீதேவி மறுபடியும் கூறுவாளாயினள்—"ஐயா, குமாரர் மிகப் பெருந்

தன்மை பொருந்தியவர். ஏதோ தற்செயலாய்க் கண்ணில்பட்ட மனுஷியர்களிடத்தும் இவ்வாறு பெரிதும் பக்ஷம் பாராட்டுகின்றனரே! அவர் புறப்பட்டுப் போகும்பொழுது. வழிக்கொடியில் வஸ்திரம் சிக்கிக் கொள்வதுபோல் எங்களிடத்தில் அவருடைய மனம் சிறிது நேரம் பற்றியிருந்தது. உங்களுடைய பிரபு குமாரரிடத்தில் அவருடைய உயர்குடிப் பிறப்பிற்குத் தக்கவாறு நல்லொழுக்கமும் நிலைபெற்றிருக்கின்றதே! ஆ! ஹா! இவ்வாறு அன்பு நிறைந்து ஆதரவு காட்டும் ஸத்துக்களின் சித்தத்தை வெகு எளிதில் எவ்வாற்றானும் விலைக்கு வாங்கிவிடலாமே. உலகமே இவ்விதம் செய்யத்தெரியாமல் ஊக்கமற்று உறங்கிக் கிடக்கின்றதே! ஆம்; பெரியோர்கள் மற்றவர்களுக்கெட்டாத தமது மேம்பாட்டினாலேயே மூவுலகத்தையும் தமக்கு வசமாக்கிவிடுகின்றார்கள்."

இவ்வண்ணம் ஸாவித்ரீதேவி மொழிந்தபின். விதூஷி வேடிக்கையும் விநோதமுமாய் வெகு நேரம் ஏதேதோ பேசிவிட்டுத் தான் போகவேண்டிய விடத்தைக் குறித்துப் பிரயாணமானான்.

மறுநாட் காலையில் ஸூரியோதயமானவுடன், குணம் கௌரவம் வணக்கம் இணக்கம் தைரியம் சாதுரியம் வனப்பு களிப்பு உருவம் பருவம் மகிழ்ச்சி எழுச்சி இவைகள் கொண்டாடிக் குடிகொண்டிருக்கும் மாலதி என்பவள் வெள்ளைக் குதிரைமீதேறிக் கொண்டு, தனது வெற்றிலை மடித்துக் கொடுப்பவள் வேறொரு பெரிய குதிரையிலேறிப் பின்றொடர்ந்துவர, சில வேலைக்காரர்களுடன் சோணாநதத்தைத் தாண்டி,

ஸரஸ்வதிதேவியின் ஆச்ரமத்தினருகாமையில் வரக் காணப்பட்டாள்.

குதிரை மீதேறிக்கொண்டு குதிரையின் இருபுற மும் அங்குவடிகளில் வைக்கப்பட்டவைகளும் செம் பஞ்சுக்குழம்பு இட்டுச் சிவந்தவைகளுமான அவளு டைய கால்களில் அணியப்பெற்ற பாதஸரங்கள் கலீர் கலீர் என்று ஒலிக்கவே, அவளேறியிருந்த அச்வம் காதுகளைச் சரிவாய் உயர்த்திக்கூப்பி, அத் தொனியில் கவனஞ்செலுத்தி வந்தது. அவளுடைய அரையில் பூட்டிய ஒட்டியாணம் "ஸகல ஜீவராசிக ளுடையவும் மனத்தை நான் இழுத்துவிடுவேன்" என்று பறை சாற்றுவதுபோல் ஒலித்துக்கொண்டி ருந்தது. அவள் கழுத்துமுதல் கணுக்கால் வரையில் லேசான வெளுத்ததொரு சட்டையைத் தரித்திருந் தாள். அவள் உடம்பில் பூசிய சந்தனக்காப்பு மெல் லிய சட்டைவழியாய் வெளியில் தெரியுமாறிருந்தது. குஸும்பாச் சாயமேற்றி இடையிடையே புள்ளிகளை அழகாய்ப் போட்டுத்தயாரித்த ஆடைகொண்டு செய் யப்பெற்ற சல்லடம் ஒன்றை அவள் போட்டிருந்தாள். நெல்லிக்காயளவு பெரிது பெரிதான முத்துக்கள் நிறைந்த முத்துமாலை ஒன்றும், பல ரத்தினங்களுங் கலந்து கோத்த ரத்தினஹாரம் ஒன்றும் அவளுடைய வக்ஷஸ்தலத்தில் விளங்கின. மரகதப் பச்சையால் மகர முகப்புவைத்த தங்கவளையலைக் கைக்கொன்றாய் அவள் அணிந்திருந்தாள். தாம்பூலம் தரித்திருந்த மையால் அவளுடைய அதரத்தில் சிவப்பும் அற்பம் கறுப்புங் கலந்து காணப்பட்டன. அவளுடைய நய

கங்களைக்கண்டு கருங்குவளைப்பூக்கள் என்று மயங்கி முகத்திற்கருகில் சுற்றிச்சுற்றித் திரியும் வண்டினங்களைக் கண்டவர்கள் நீல நூலைக்கொண்டு வலைவலையாய் பின்னிய முகமூடிபடாமோ என்று எண்ணுவார்கள். அவள் தனது இடதுகாதில் நீலச்சாயமேற்றிய தந்த ஓலைச்சுருளைத் தரித்திருக்தநுமன்றி, மகிழம்பழம் போன்ற மூன்று முத்துக்களாற் கட்டப்பட்ட வாளிகளையும் காதுகளில் அணிந்திருந்தாள். அவளுடைய வலதுகாதுமீதே அலங்காரமாய்த் தாழம்பூவின் உள்மடல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவளது நெற்றியில்இடப்பெற்ற கஸ்தூரிப்பொட்டு, தனதுசொத்தின் மீது மன்மதன் வைத்த அரக்கு முத்திரைபோல் விளங்கிற்று. கதிரொளிவீசுங் கல்லிழைத்த நெற்றிச் சுட்டி யொன்று தங்கச்சங்கிலியில் கோக்கப்பெற்று அவளது வகிர்வழியாய் நெற்றிநடுவில் தொங்கவிடப் பட்டிருந்தது. அசட்டையாய்க் கட்டப்பெற்றிருந்த மையால் அவளது கூந்தல் அவிழ்ந்து அலைந்து கிடந்தது.

இவளுடன் கூடவந்த தாம்பூலத் தட்டேந்தும் பூவைக்கோ, குவளையை ஒத்த கண்ணும், முல்லையரும்புபோன்ற பல்லும், வாகைப்பூமாலைக்கொப்பான புஜமும், தாமரைமலர்க்கு நிகரான உள்ளங்கையும், சண்பகவிதழுக்குச் சரியான நிறமும் இயல்பாகவே வாய்ந்திருந்தன.

அப்புறம், சதீசன்மீதுள்ள விசுவாஸத்தால் ஸரஸ்வதிதேவியுடைய அன்பு அழைக்க, ஆவல் ஆதரிக்க, இச்சை இழுக்க, கண்கள் கலக்க, மனம்

மாணிக்க, புன்னகை பூஜிக்க, மாலதி குதிரையை விட்டிறங்கி ஆச்ரமத்தினுட் சென்று வெகுதூரந் தலை தாழ்த்தி நமஸ்காரஞ் செய்யவே, தேவிமாரும், அவளை ஆதரவுடன் வரவேற்று ஆலிங்கநஞ்செய்து ஆஸநத்தில் அமரப்பண்ணி, கண்ணியமாயும் அன்புடனும் வெகுநேரம் அவளோடு ஸம்பாஷித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது, மாலதி "நான் மஹாபாக்கியவதி" என்று மனத்தில் பெருமை பாராட்டிக்கொண்டு, "ததிசர் சிரஸ்ஸில் கைகூப்பி நமஸ்கரிக்கின்றார்" என்று விநயத்துடன் விண்ணப்பஞ் செய்தாள். மாலதியினுடைய நாகரிகம் பெற்ற நடையுடைபாவனைகளாலும் ஸரஸமான ஸம்பாஷணைத் தாலும் தேவிமார் இருவருக்கும் அவளிடத்துப் பலமான மனப்பற்று உண்டாயிற்று.

இவர்கள் மூவரும் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில், உச்சிக்காலம் வந்துவிட்டது. உடனே ஸாவித்ரீதேவி மாத்தியான்ன ஸ்நாநத்திற்காகச் சோணநதத்திற்குச் சென்றாள். அத்தருணத்தில், மாலதியானவள் குறிப்பால் பரிஜனங்களை வெளியிலனுப்பிவிட்டு, ஸரஸ்வதீதேவியினுடைய பூமெத்தையின் கிட்டநெருங்கி "தேவி, தங்களுடன் தனிமையில் பேசவேண்டிய விஷயம் ஒன்றுளது. ஆதலின் சிறிது நேரம் தயைசெய்து கவனத்துடன் செவி சாய்த்தருளக் கோருகிறேன்" என்று விஞ்ஞாபனஞ் செய்தாள். ஸரஸ்வதீ தேவியோ, தந்திரந் தூது ஏதாவதிருக்கலாமென்று எண்ணியும் என்ன சொல்லிவிடுவளோ என்று திகிலடைந்து, தனது இட

கையை மார்பின்மீது அமர்த்திப் பட்டுத்தாவணி யை இழுத்து வக்ஷஸ்தலத்தை மூடி அடுத்திருந்த ஒரு கொடியைப் பிடித்துக்கொண்டு அப்பூப்படுக் கையினின்றும் மெதுவாய் எழுந்திருந்து, மதுரமான குரலுடன் பின் வருமாறு பகரலுற்றாள்—“ ஸகி மாலதி, ஏன் இவ்வாறு பேசுகின்றாய்? நன்கு மன மிருத்திக் கேட்பதற்கு நான் யாவள்? இஃதிருக்கட் டும். இப்பொழுது இந்தச் சரீரத்திற்கும் இந்தப் பிராணனுக்கும் எனக்குந்தான் என்ன ஸம்பந்தம்? ஆப்த நண்பர்கள் அருகில் வந்துவிட்டால், அப்பொ ழுதே அவர்களுக்கு இவைகளெல்லாவற்றிலும் ஓர் உரிமை அவர்களெதிர்பாராமலிருக்கையிலேயே ஏற்பட்டுவிடுகிறதல்லவா? நீதான் எனது ஸஹோதரி; நீதான் எனது தோழி; நீதான் எனது நம்பிக்கைக் குரியவள்; நீதான் எனது ஆவி; உலகத்தில் என் னுடைய உற்ற பந்துக்களெல்லாம் நீதான். ஆனது பற்றித், தோழி, மேன்மையுள்ளதோ தாழ்மை யுள்ளதோ எவ்விதக் காரியத்திலும், எனது இச் சரீரத்தை உன்னிஷ்டப்படி நீ உபயோகிக்கத் தடை கிடையாது; நிச்சயந்தான். மாசற்ற என் மனம் உனது சொற்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றது. நான் பிரீதியால் உனது அபிப்பிராயத்தை அனுஸ ரித்து நிற்கும் அடிமையாக ஆய்விட்டேன். ஆதலால் பொற்கொடியே, உன் உள்ளத்திலுள்ளதை ஒளிக்கா மல் வெளியிடுவாயாக.”

இவ்வாறு ஸரஸ்வதிதேவி சொன்னபின், மாலதி “தேவி, சப்தாதி விஷயங்கள் இனிமையாயிருக்கும்

மாதிரியும், பஞ்சேந்திரியங்கள் அவைகளில் பாய்ந்து செல்லும் விதமும், புது யௌவனம் புத்தியை மயக்கும் ரீதியும், மனம் மிக்க சஞ்சலமாயலையும் நிலைமையும் தங்களுக்கு நன்றாயத் தெரிந்தது தானே. அனங்கனது அட்டூழியம் அகிலருமறிந்ததன்றோ. ஒருவன் தன் மனத்திலுள்ளதைத் தெளிவாய் வாய்விட்டுப் பேசுகையில், அதற்குக் காரணம் அவனது மூடத்தனம் அல்லது சாபல்லியம் இல்லாவிடில் தூதத்தொழில் என்று நினைப்பது முற்றிலும் தவறு. ஒரு வேலைக்காரனுக்குத் தன் எஜமானனிடத்தில் உண்மையில் ஆழ்ந்த பக்தி அமைந்திருக்குமேயாயின், அவன் தன் எஜமானனுக்காக எத்தகைய காரியமுஞ் செய்யத் தயங்கமாட்டான். ஆகையால், தாங்கள் என்மீது பழி சுமத்தலாகாது. அம்மா, தங்களைப் பார்த்தது முதல் ததீசரிடத்தில் பூவம்பனது வம்பு வளர்ந்து வருகின்றது. திங்களிழைக்கும் தீங்கோ ஓங்கிநிற்கின்றது. தென்றல்காற்று காட்டுங்கொடுமையோ கூறமுடியாதது. கவலையும் துயரமும் அவரைக் கவர்ந்துவிட்டன. அவருக்கு உறக்கமென்பது ஒரு போதுங் கிடையாது. தேவி, இங்ஙனமிருக்கத் தங்களிடம் நான் எதை எவ்வாறு தெரிவிப்பேன். ஒரு விதத்திலும் விண்ணப்பஞ்செய்ய இயலாதவளாயிருக்கின்றேன். பாருங்கள்—தங்களுக்கு ஒத்த புருஷன் ததீசர்தாமென்று சொல்வேனானால், இது தற்புகழ்ச்சியாய்த் திருகிறது; அவர் நன்னடத்தையை யுள்ளவரென்று சொல்லப்புகில், இது தற்கால ஆரம்பத்திற்குத் தகாதது; அவர் தீரபுருஷனென்றால், இது இப்

பொழுதுள்ள நிலைமைக்கு ஏற்காதது; அவர் ஸௌபாக்கியம் பெற்றவர் என்பேனெனில், இது தங்களாலாகவேண்டிய விஷயமாகின்றது; அவர் உறுதியான பிரீதியுள்ளவரென்றால், இது ஒரு ஸாமர்த்தியப் பேச்சு; அவருக்குத் தங்களிடத்தில் பணிவுடன் நடக்கத் தெரியுமென்றால், இது அவரது பிரபுத்தனத்திற்குப் புறம்பானது; அவர் ஜீவிதகாலம் முற்றிலும் தங்களுக்கு அடிமையாயிருக்க அபிலாஷைப்படுகிறாரெனில், இது வஞ்சகன்பேசும் வார்த்தை; அவருடைய வீட்டிற்குத் தாங்கள் தான் இனி எஜமானி என்றால், இது கேவலம் ஓராசைவார்த்தை; தாங்கள் எவ்வளவோ புண்ணியஞ்செய்து இவரைப் பர்த்தாவாக அடைகிறீர்கள் எனில், இது எஜமானிடத்தில் அபிமானத்தாற் சொல்லுஞ் சொல்; தாங்கள் தான் அவருக்கு யமன் எனின், இது விரும்பத்தகாத மொழி; தாங்கள் அவரது குணங்களை அறியவில்லையே எனில், இது தங்களை அவமதித்துப் பேசும் பேச்சு; தாங்கள் கனவில் வெகுதடவை ததீசரிடத்தில் தயைகாட்டியிருக்கிறீர்கள் என்றால், இது அத்தாட்சியில்லாத அவலப்பேச்சு; ததீசர் தமது பிராணனைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறாரெனில், இது சுத்தமே திகிலடைந்தவன் வேலை; தாங்கள் அவ்விடம் வரவேண்டுமென்றால், இது கட்டளையிடுவதாய் முடிகிறது; தாங்கள் தடுத்தபோதிலும் அவர் இவ்விடம் வராமலிரார் எனின், இது மிக்க இழிவான செய்கை; எனவே, தங்களிடம் எவ்வாறு பேசவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. இதைச் செவியுற்றபின் இனி ஆக

வேண்டிய விஷயத்தில் முழுப்பொறுப்பையும் தாங்கள்தாம் வஹிக்கவேண்டும்" என்று மனம் திறந்து பேசிவிட்டு மௌனமாயிருந்தனள்.

பின்பு ஸரஸ்வதீதேவி பிரீதியால் கண்கள் மலர, "அடி தேன்மொழி, இதோ நான் உன் சொற்படி நடக்க ஸஜ்ஜமாயிருக்கிறேன். இந்தா என்பிராணன்; ஏற்றுக்கொள்" என்று சொல்லவே, மாலதி "தேவி, இனி தங்கள் உத்திரவுப்படியே நடப்பேன். தாங்கள் தாராளமாய்த் தயவு காட்டிவிட்டீர்கள். கூடிய சீக்கிரத்தில் ததீசரை இங்கு அழைத்துவருகிறேன்" என்று கூறிவிட்டு, மனமகிழ்ச்சியுடன் ஸரஸ்வதீதேவியைத் தெண்டனிட்டுக் குதிரைமேல் ஏறி விரைவாய்க்குதிரையை நடத்திக்கொண்டு, சோணநதத்தைக் கடந்து சென்றாள்.

ஸாவித்ரி நீராட்டஞ் செய்து திரும்பிவந்தபின், ஸரஸ்வதீ தோழமையால் நடந்த விஷயங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் அவளிடம் தெரிவித்தாள். பிறகு அச்சம் அதிகரித்து ஆநந்தம் பூரித்து மனம் தத்தளிக்க, பாக்கிப் பகல் ஸமயத்தை ஒரு கற்பகாலத்தைப்போல் கழித்தாள்.

அந்திப்பொழுது வந்தது. ஆதித்தன் அஸ்தமித்தான். சற்று நேரத்திற்குள் சந்திரன் உதித்தான். முன்னிருட்டு நீங்கிற்று.

அத்தருணத்தில், ஸரஸ்வதீதேவி, நெற்றிப்புறத்தில் சுட்டி தரித்துக்கொண்டு தன்னந்தனியாய் வெண்பட்டு மெத்தைபோல் மிருதுவான சோணநதத்தின் அழகிய மணல் மேடையில் உட்கார்ந்து, கபோ

லங்களில் பெருகும் வியர்வை ஜலத்தைப் போக்கத் தனது கையை விசிறிபோல் வீசிக்கொண்டும், குளிர்ச்சிக்காக ஒரு தாமரைத்தண்டை 'இவளது ஹிருதயத்திற்குள் ததீசரைத் தவிர்த்து வேறு யாரும் பிரவேசிக்கக் கூடாது' என்று தடுப்பதற்காக மன்மதன் போட்ட அவனது பிரப்பங்குச்சியோ இது என்று எண்ணும்படி மார்பில் தரித்துக்கொண்டும் ததீசனுடைய வரவை எதிர்பார்த்தவண்ணமாகவே யிருந்தாள். அந்நேரத்தில் பளிங்குபோல் விளங்கும் அவளது கன்னத்தில் சந்திரன் பிரதிபிம்பித்திருப்பது, "ஓ புன்னகைபூத்தபூவாய், இதோ பிடித்துக்கொண்டு வந்தேன் உனது உள்ளத்திற்கிசைந்த உத்தமனை" என்று சந்திரனே நேரில் காதோடு சொல்லவந்தாற் போல் தோற்றிற்று. அக்காலையில் ஸரஸ்வதீதேவி தன் மனத்தில் இவ்விதம் சிந்திக்கலானாள்—"நான் யார். ஸரஸ்வதியன்றோ. நானே இவ்வண்ணம் காமனது கூத்திற்காளாகி தன்னிலை குலைந்து தவிக்கின்றேனே! என்ன விந்தை! இங்ஙனமெனில், இயற்கையாகவே மனவுறுதியற்ற மற்ற மங்கையர்கள் இம்மதனால் என்னபாடு, ஐயோ கஷ்டம், படுவார்களோ."

இந்தப் பிரகாரம் ஸரஸ்வதிதேவி சிந்தித்துக் கொண்டிருக்குந் தறுவாயில், ததீசன் மனக்களிப்புற்று மார்பில் மணமெழுஞ் சந்தனம் பூசி, குளிர்ச்சி நிமித்தம் தாமரைத்தண்டு தரித்து, சந்திரன் முன்னிழுக்க, தென்றல் பின்னிருந்து தள்ள, மாலதியுடன் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

வந்ததும், ததீசன் ஸாவித்ரீதேவி இருவரும்

இனிமையாய்க் கொஞ்சநேரம் ஸம்பாஷித்துவிட்டுக் காதல், காலம், சீலம் இவைகளுக்கு ஏற்றவாறு கூடிக் குலாவினர். நட்பும் நம்பிக்கையும் நன்ருய் வேரூன்றிய பின், ஸரஸ்வதீதேவி தனது வரலாற்றைத் ததீசனோடு விரித்துரைத்தாள். இவர்கள் இருவரும் இம் மாதிரி இன்பமுற்றிருக்க, அனேக வருஷகாலம் ஒரு தினம்போல் சென்று விட்டது.

அப்பால்,ஸரஸ்வதீதேவி வினையின் பயனுய்க் கர்ப்பம் தரித்தாள். ஸரியான காலத்தில் ஸகல லக்ஷணமும் பொருந்திய ஆண்குழந்தை பிறந்தது. அப்பொழுதே "இவனுக்கு ரஹஸ்யங்களோடுகூடி எல்லா வேதங்களும் ஸகல சாஸ்திரங்களும், ஸர்வ கலைகளும் எனது அனுக்கிரஹத்தால் தானகவே தோன்றக்கடவது" என்று அக்குழந்தைக்கு ஸரஸ்வதீதேவி வரமளித்துவிட்டு,கமலாஸனனது கட்டளைப்படி ஸாவித்ரீ தேவியுடன் பிரமலோகம் ஏகினுள்.

ததீசனே ஸரஸ்வதீதேவி போனவுடன் இடியால் தாக்குண்டவன்போல் தாபந் தாங்கமாட்டாமல், இந்தச் செல்வக் குழந்தையை எடுத்துக்கொண்டு, பார்க்கவ குலத்தினனும் பிராமணப் பெண்ணிடத்துப் பிறந்தவனுமான தன் பிராதாவினுடைய மனைவியான அக்ஷமாலை அம்மாளிடம் காப்பாற்றும்படி ஒப்பித்து விட்டுத் தான் தவம் புரியக் கானகமேகினுன்.

அக்ஷமாலை அம்மாளுக்கும் அப்பொழுதுதான் பிள்ளை பிறந்திருந்தமையால், அந்த அம்மாள் இவ்விரு குழந்தைகளையும் சிறிதும் பேதமில்லாமல் வளர்த்து

வந்தாள். ஸரஸ்வதீகுமாரனுக்கு ஸாரஸ்வதன் என்றும், அக்ஷமாலைபுதல்வனுக்கு வத்ஸன் என்றும் பெயர்களிடப்பட்டன. இவ்விரு சிறுவர்களும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் மிக்க ஸஹோதர வாஞ்சையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஸாரஸ்வதனுக்கு அவனது அன்னையின் அனுக்கிரஹத்தால் யௌவநாரம்பத்திலேயே வித்தைகள் அனைத்தும் ஸ்வயமாகத்தோன்றி விளங்கின. கொஞ்சகாலத்திற்குள் ஸகல வித்தைகளையும் ஸாரஸ்வதன் தனது உயிர்த்தோழனும் பிராதாவுமாகிய வத்ஸனுக்குக் கற்பித்துவிட்டு, அவனுக்கு விவாஹமுஞ் செய்துவைத்து, அங்குத்தானே பிரீதிகூடம் என்னும் பெயருடன் ஒரு வசதியும் ஏற்படுத்திக் கொடுத்து, தான் மாத்திரம் தலையில் ஜடையும் அரையில் மரவுரியும் மௌஞ்சியும் தோளில் மான்தோலும் கையில் புரசுதண்டமும் ஜபமாலையுமாய், தவம் புரியும் தந்தையின் அந்திகம் சென்றனன்.

பின்பு, நாராயணனது சரணாரவிந்தத்திலிருந்து கங்காப்ரவாஹம் பெருகியதுபோல், இந்த வத்ஸனிடத்து நின்றும், புகழும் புனிதமும் வாய்ந்து, மஹாராஜாக்களாலும் மதிக்கப்பெற்று, மஹர்ஷிகளும் மானிக்கும்படி நேர்மையுடன் ஒரு வம்சம் நெடுகப் பெருகி நீடூழிகாலம் வளர்ந்து வந்தது.

இந்தக் குலத்திலுதித்தவர்கள் தாம் வாத்ஸ்யானர்கள் என்னும் கீர்த்திபெற்ற கிருஹஸ்தர்கள். இவர்களோ ரிஷிகளைப்போல் வஞ்சனைக்கு அஞ்சியும், பாபத்திற்குப் பயந்தும், கூட்டத்திற்குக் கூசியும்,

வெளிவேஷத்தைவெறுத்தும், அசட்டுப்பிடிவாதத்தை அறவே ஒழித்தும், அவதூருண வார்த்தையை அகற்றியும், கண்டவிடங்களில் உண்டுதிரியாமலும், பொருமையைப் பெருமலும், காமாதிகளைக் கைவிட்டும், பிறரிடத்தில் பிச்சை கேட்காமலும், அண்டினவர்களை ஆதரித்தும், சித்தசுத்தி மெத்தப்பொருந்தியும், நடத்தையின் நேர்மை நன்ருயமைந்தும், பழக்கத்தில் பண்பும் வழக்கத்தில் வாய்மையும் உண்மையில் உறுதியும் எல்லாரிடமும் இரக்கமும்பெற்றும் வாழ்ந்து வந்தார்கள். அன்றியும், இவர்கள் வேதாத்யயனஞ் செய்து வைதிக கர்மங்களை முறைப்படி அனுஷ்டித்து வந்தார்கள். வேத வேதாங்கங்களில் எவரும் எந்த ஸம்சயத்தையும் இவர்களைக் கேட்டே தீர்த்துக் கொள்ளுவார்கள். ஸகல சாஸ்திரங்களுடையவும் உட்கருத்தையும் மர்மத்தையும் இவர்கள் தாம்வெளிப்படுத்த வேண்டும். மேலும், இவர்கள் கவிதையில் கைதேர்ந்தவர்கள், உபந்யாஸத்தில் உவமையற்றவர்கள், ஸரஸ ஸம்பாஷணத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்கள், அழகிய பரிஹாஸம் அறிந்தவர்கள், ஆட்டம் பாட்டு வாத்தியம் இவைகளில் ஆழ்ந்த ஞானமுடையவர்கள், பரம்பரைக் கதைகள் கிரம்பவும் தெரிந்தவர்கள், தயாகுணம் தாராளம் வாய்ந்தவர்கள்பெரியோர்களின் மதிப்பைப்பெரிதும் பெற்றவர்கள், பொறுமையைப்பூஷணமாயுடையவர்கள், கடுமையைக்கனவிலுங் கண்டறியாதவர்கள், குற்றங்குறைகள் சற்றுமில்லாதவர்கள், உள்ளும் புறமும் ஒன்றுபோலிருப்பவர்கள்.

இவ்வாறு பேரும் பெருமையும் பெற்று வாத்

ஸ்யாயனவம்சம் வளர்ந்தோங்கி வருங்காலத்தில் நாள்கள் வருஷங்களாகவும் வருஷங்கள் யுகங்களாகவும் மாறிவரக் கலியுகத்தில் வெகு ஸம்வத்ஸரஞ் சென்றபின், பெரியோர்களிடத்தில் பணிவுடைய குபேரன் என்னும் அந்தணர் அவதரித்தார். இவருக்குப் புருஷோத்தமனது புஜங்கள்போல் பெருமை வாய்ந்த அச்சுதன், ஈசானன், ஹரன், பாசுபதன் என்னும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களுள் பாசுபதனுக்குக் கடல்போல் அடக்கமும் ஆழமும் அமைந்த அர்த்தபதி என்னும் ஒரே குமாரன் ஜனித்தான். அர்த்தபதியோ ஏகாதசருத்ரர்களைப்போல் பரிசுத்தர்களான பிருகு, ஹம்ஸன், சுசி, கவி, மஹீதத்தன், தர்மன், ஜாதவேதஸ், சித்ரபானு, திரியக்ஷன், அஹிதத்தன், விச்வரூபன் என்கிற பதினொரு புதல்வர்களைப் பெற்றான். அவர்களுள் சித்ரபானுவுக்கு ராஜதேவி என்னும் பிராமணப் பெண்ணினிடத்து பாணன் பிறந்தான்.

பாணன் பாலனாயிருக்கும் பொழுதே, முன்வினையின் கொடுமையால் தனது அருமைத்தாயை இழந்துவிட்டான். அவனது பிதாவே அதிக அன்புடன் தாயும் தந்தையுமாயிருந்து பாணனைப் பாதுகாத்து வந்தார். பாணனும் தனது கிருஹத்தில் மனமகிழ்ச்சியுடன் வளர்ந்து வந்தான்.

பாணனுக்கு ஏறக்குறைய பதினான்காம் வயது ஆவதற்குள், தகப்பனார் உபநயனஞ் செய்து வேத வேதாங்கள் அனைத்தையும் படிப்பித்து விரததீக்ஷையும் முடித்து சுருதிஸ்மிருதிகளில் சொல்லியிருக்கும் பிராமணருக்குரிய ஸகல புண்யகர்மங்களையும் அவ

னுக்கு நடத்திவைத்து, தனது மத்திம வயதிலேயே அகால மரணமடைந்தார்.

பாணனோ இவ்விதம் இளம்பருவத்திலேயே தாய் தந்தை இருவரையும் இழந்து பெருந்துயரத்திற்கா ளாகி, இராப்பகலாய் மனம் நொந்து எரிய, வெருகஷ்டத்துடன் தனது வீட்டில் கொஞ்சநாள் வஸித்தான்.

காலக்ரமத்தில் சோகவேகம் தணியத்தொடங்கிற்று. பாணனை ஸரியாய்க்கண்டித்துக் காப்பாற்றப் பெரியோர்கள் இல்லத்தில் இல்லாமையால், சுதந்தரமாய்த் தன்னிஷ்டப்படி நடக்க அவனுக்கு இடமேற்பட்டது. பாலப்பருவமாகையால் அவன் மனத்தில் ஆவல்கள் பலவாறுக உதித்தன. வாலிபப் பருவத்திரைம்பமாதலின் அவனதுமனம் வன்மையும் உறுதியுமிழந்து தத்தளித்துத் தடுமாறி நின்றது. எனவே, பாணன் சிறுபிள்ளைத்தனமாய்ப்பல தப்புவழிகளிலும் இறங்கி ஊரூராய் சுற்றித்திரியலானான். இவனோடு ஸரிவயதுள்ள சில ஸ்நேஹிதர்களும் இக்காரியத்தில் இவனுக்குப் பின்பலமாயிருந்தார்கள். அவர்கள் யாரெனில்—பாணனது பிதாவிற்குச் சூத்ரஸ்த்ரீயினிடத்துப் பிறந்த சந்திரஸேனன் மாத்ருஷேணன் என்னும் இரு ஸஹோதரர்கள், தேசபாஷாகவி ஈசானன், ருத்ரன் நாராயணன் என்னும் இரு நேசர்கள், வாரபாணன் வாஸபாணன் என்கிற இரண்டு பண்டிதர்கள், ஸ்வயமாக ஸங்கீதக்ருதிகள் செய்யும் வேணீபாரதன், ப்ராக்ருத பாஷையில் கவிதை எழுதும் வாயுவிகாரன், அநங்கபாணன் ஸூசீபாணன் எனும் இரண்டு கட்டியக்காரர்கள், சக்ரவாகிகை என்னும் பிக்ஷுணி, மயூரகன் என்னும்

விஷவைத்தியன், தாம்பூலம் மடித்துக் கொடுக்கும் சண்டகன், வைத்திய குமாரன் மந்தாரகன், புஸ்தகம் வாசிக்கும் ஸுதிருஷ்டி, சாமீகரன் என்னும் தட்டான், ஸிந்துஷேணன் என்னும் ரத்னவியாபாரி,* கோவிந்தகன் என்கிற கணக்குப்பிள்ளை, சித்திரமெழுதும் வீரவர்மன், விக்ரஹம் வார்க்கும் குமாரதத்தன் எனும் சிற்பி, சீமுதன் எனும் மிருதங்கக்காரன், ஸோமிலன் கிருஹாதித்யன் என்னும் இரண்டு ஸங்கீதவித்வான்கள், குரங்கிகை என்கிற ஸைரந்த்ரீ,† புல்லாங்குழல் ஊதுபவரான மதுகரன் பாராவதன் என இருவர், தர்துரகன் என்னும் ஸங்கீதவாத்தியார், கேரளிகை என்கிற கால் பிடிப்பவள், தாண்டவிகன் என்னும் வாலிப நட்டுவன், ஆகண்டலன் என்ற சூதாடி, பீமகன் என்னும் முடிச்சுமாறி, சிகண்டகன் என்கிற கூத்தாடி, ஹரிணிகை என்னும் ஆட்டக்காரி, ஸுமதி என்னும் வைராகி, வீரதேவன் என்னும் ஜைனன், கதைகள் சொல்லும் ஜயஸேநன், வக்ரகோணன் என்கிற சைவன், கராளன் என்ற மந்திரவாதி, லோஹிதாக்ஷன் எனும் கம்பளத்தான், ரஸவாதஞ் செய்யும் விஹங்கமன், நகாரா அடிக்கும் தாமோதரன், இந்திரஜாலங் காட்டும் சகோராக்ஷன், தாம்ரசூடன் என்னும் துறவி.

---

* ஸம்ஸ்கிருதத்தில் 'ஹைரிக' என்றிருக்கிறது. ஹைரிகன் என்றால் தட்டார்களின் தலைவன் என்று சிலரும், திருடன் என்று வேறு சிலரும் சொல்வதுண்டு.

† ஸைரந்த்ரி என்பது அன்னியர்வீட்டிலிருந்துகொண்டு அவ்விடத்திய ஸ்திரீகளுக்கு அலங்காரம் செய்துவரும் வேலைக்காரிக்குப் பெயர். (விராடநகரத்தில் வசித்த திரௌபதியைப்போல)

பாணன், வேதியர்களுக்கு வேண்டிய ஸகல விபவங்களும் தனக்கு வம்சவழியாய்க் கிடைத்திருந்தும் தனது கிராமத்தில் கல்விப்பயிற்சி இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தும், இவற்றைப் புறக்கணித்து விட்டு, மேற்கூறியவர்களோடும் வேறு சிலரோடும் கூடி, தேசங்களைச் சுற்றிப்பார்க்கவேண்டுமென்கிற பேரவாவுடன் தறிதலையாய்ப் பிசாசு பிடித்தவன் போல் திரிந்துகொண்டு, மஹான்கள் பார்த்துப் பரிஹாஸம் பண்ணும்படி தாழ்ந்த நிலைமையில் விழுந்து விட்டான்.

இவன் இப்படிச் சுற்றித்திரியும் பொழுது, பெரிய பெரிய அரண்மனைகளை அடைந்து, அவ்விடங்களில் நடக்கும் நேர்மையுள்ள நடவடிக்கைகளை நன்கு கவனித்து வந்தான். விசேஷமுள்ள வித்யாபீடங்களை அணுகி, அங்கு நடைபெறும் வித்யாப்ரசாரங்களை மனமிருத்தி அறிந்துகொண்டான். குணவான்களான பெரியோர்களது கூட்டத்திற்கூடி, அவர்களது பேச்சுத் திறமையைக் கருத்துடன் கிரஹித்துவந்தான். நாகரிகம் வாய்ந்த ரஸிகர்களின் கோஷ்டியில் சென்று சேர்ந்து, அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ள புத்திசாதுரியத்தைக் குறிப்பாக உணர்ந்து கொண்டான். ஆதலின், அவனது வம்சத்திற்குரிய வித்வத்தனம் அப்பொழுது திடீரெனத் தோன்றி வெளிவந்து விளங்கிற்று.

பின்பு வெகுகாலங்கழித்து, பாணன், வாத்ஸ்யாயன வம்சத்தார் வஸிக்கும் பிரீதிகூடம் என்னும் தனது ஜன்மபூமிக்கு வந்து சேர்ந்தான். அவ்விடத்

தில் தனது தாயாதிகளும் நண்பர்களும், இப்பொழுதாவது பார்க்க நேர்ந்ததே என்று சந்தோஷத்தாலும் நேசப்பான்மையாலும் தன் வரவைக் குதூஹலத்துடன் கொண்டாட, பாணன் தனது பால்ய ஸ்நேஹிதர்களுடைய மத்தியிலிருந்துகொண்டு, மோக்ஷஸுகமனுபவிப்பவன்போல் பரமாநந்தத்துடன் வாழ்ந்து வந்தான்.

ஸ்ரீபாணபட்டருடைய கிருதியாகிய ஹர்ஷ சரிதத்தில்
முதல் உச்சுவாஸம் முடிவு பெற்றது.

ஸ்ரீ:

இரண்டாம் உச்சுவாஸம்.

ஆழமர்ங் கிணற்று ளிறங்கிநீர் பருத மாற்றலற் றவர்மன மகிழத்
தாழவே புகுந்து தண்கோணர்ந் துதவுந் தாம்போடு சேர்ந்தமட்
தடம்போ
லாழிசே ராச ரவைபுக வறியா தலமரு மவர்மனங் களித்து
வாழவே புதவித் துதவுவ ரவர்க்கு மனமகிழ் சிறந்தநல் லவரே.

என்றுடைத் திருவை யேற்றங் கெழின்மரை மலர்க்கே ராக
நின்றுநன் குதவுங் காணீர் நீள்பக லியாவர்க் கேனு
நன்றுதீ தெண்ணுராகி நயந்துத வுவதே நல்லோர்க்
கோன்றுயர் கோள்கை யாது மென்பது முண்மைப் பாலே.

வெகுகாலங் கழித்துப் பாணன் தனது கிராமத்திற்கு வந்தமையால் பந்துக்கள் அனைவரையும் நேரில் காணவேண்டுமென்று அவா மேலிட, ஒவ்வொருவருடைய வீட்டிற்கும் சென்றுகொண்டிருந்தான்.

அங்கு, யாகங்களிலுள்ள ஹவிர்பாகங்களை நேராகவே பெற்றுக்கொள்ள நினைத்து அக்கினிகளே வந்திருக்கின்றனவோ என்று எண்ணும்படி அவ்வளவு தேஜஸ்ஸுள்ள மாணுக்கர்கள் நெற்றியில் திருநீறு தரித்து எப்பொழுதும் உரத்த தொனியில் வேதாத்தியயனஞ் செய்துகொண்டிருந்தார்கள். அந்தக் கிருஹங்களின் தலைவாயிற்படிக்கு எதிரிலுள்ள தோட்டக்கால்களில் சிறிய பாத்திகள்கட்டியாகத்திற்கு அவசியமான ஸோமலதை பயிராக்கப்பட்டுப் பச்சைப்பசேல்

என்றிருந்தது. மேலும், முற்றங்களில் புரோடாசத்திற்குரிய சாமையரிசி மான்தோலில் உலர்த்தப்பட்டிருந்தது. (வாயிற்கதவுக்கு ஸமீபத்தில்) சிறுகன்னிகைகள் புல்லரிசியைக்கொண்டு பலி வைத்திருந்தார்கள். மாணவர்கள் தர்ப்பக்கட்டுக்களையும் புரசின் ஸமித்துக்களையும் தூய்மையுடன் கொணர்ந்து (அந்த வீடுகளின் மோசனங்களிலும் தட்டிகளிலும்) வைத்திருந்தார்கள். (தாழ்வாரங்களின் ஓரங்களில்) சிறு விறகுகளும் முட்டான் போடுவதற்குள்ள சாண உருண்டைகளும் காணப்பட்டன. யாகத்திற்குத் தேவையான பால் தயிர் நெய் முதலியவைகளின் பொருட்டு அக்கினி ஹோத்திரப் பசுக்கள் முற்றங்களின் தொழுவங்களிலுள்ள உயர்ந்த மேடைகளில் நிறுத்தப்பட்டிருப்பதால், அவைகளின் குளம்புகள்பட்டு ஆங்காங்குப் பள்ளங்கள் விழுந்திருந்தன. சில யதிகள் கமண்டலுபாத்திரஞ் செய்வதற்காக ஒரு புறத்தில் களிமண்ணைப் பிசைந்து கொண்டிருந்தார்கள். யாகவேதியில் நாட்டவேண்டிய முளைகளை உத்தேசித்துக் கொண்டுவரப்பட்ட அத்திக்கிளைகள் ஒரு மூலையில் குவிக்கப்பெற்றிருந்தன. வைச்வதேவம் என்னுங் கிரியை முடிந்தபின் பிண்டங்கள் உசிதப்படி ஓரிடத்திலிடப்பட்டிருந்தன. இவ்வீடுகளினின்றுங் கிளம்பும் ஹோமதூமத்தால் அடுத்துள்ள மரங்களின் தளிர்கள் கறுத்துக் கிடந்தன. அன்றியும், சிறுவர்கள் அங்குத்துள்ளிக் குதித்தோடுகின்ற கன்றுகளோடு பக்ஷமாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கிருஷ்ணவர்ணம் பெறப்பெறும் அனேக ஆட்டுக்குட்டிகள் அங்

குமிங்கும் ஓடித்திரிவது, அவ்விடத்தில் பசுபந்தமென்னும் விதி விடாமல் நடைபெற்றுவருவதை விளக்குவதாயிருந்தது. அங்குள்ள கிளிகளும் மைனாக்களும் வேதம் முதலாயவற்றை எப்பொழுதும் கேட்டுக்கொண்டே வருவதால், தாங்களும் மனப்பாடம் பண்ணி மறந்தவிடங்களில் மாணாக்கர்களுக்கு உதவி புரிந்து உபாத்தியாயர்களுக்கு ஒழிவு நேரம் உண்டாக்கிக் கொடுத்தன. சுருங்கச்சொல்லின், அந்தக் கிருஹங்கள் வேததேவதை தவம்புரியும் ஆச்ரமங்கள் போலவே விளங்கின.

இவ்விதம் பந்துக்களுடன் ஸந்தோஷமாய்ப் பாணன் தனது கிருகத்தில் வஸிக்கும்பொழுது வெகு கடுமையான வேனிற்காலம் வந்தது. மல்லிகையைத் தவிர்த்து மற்ற மலர்கள் அனைத்தும் தாபம் தாங்கமாட்டாமல் வாடி வதங்கி உதிர்ந்துவிட்டன. வெயிலின் வெப்பம் கன கடுமையுடனிருந்தமையால், பகல் முழுதும் பூங்காவில் பொழுதுபோக்க அனைவருக்கும் ஆவல் அதிகரித்தது. வெளியிலிறங்கி வெளிச்சத்தைப்பார்க்கக்கண்கள்கூசவே அந்தப்புரத்தில் சந்தனக்குழம்பு பூசி அமைதியுடன் படுத்துறங்கிய அங்கனைமார் அந்திப்பொழுதில் ஆறுகளில் நீராடியபின், அநங்கன் அவர்களுடைய குளிர்ச்சி பொருந்திய கூந்தல்களில் குடிகொண்டிருந்தான். நள்ளிரவும் நதிஜலமும் நாளடைவில் குறுகிவந்தன. பாதிரிப்பூவாசனை வாய்ந்த ஜலத்தையும் அவ்வாறுள்ள காற்றையும் ஏற்றுக்கொள்ள எல்லோருக்கும் அபிலாஷை ஆவிர்ப்பவித்தது. தாமரையைத் தாக்கும் பனிமீது சினங்

கொண்டவன் போல் கதிரவன் இமயமலையைக் குறி வைத்துக்கொண்டு பிரயாணஞ் செய்தான்.

அப்பொழுது வெக்கைபொறுக்கமாட்டாமல் கபோதங்கள் கலங்கிக் கதறின. பறவைகள் வாய்பிளந்து வருந்தின. மதஜலம்பொழியும் மதங்கஜங்கள் மலையின் தாழ்வரையில் மலைத்துநின்றன. வெயில்பட்டு வெளிச்சம் மிகுந்த ஸ்படிகக் கற்பாறைகளை நீரின் பெருக்கமென நினைத்துப் பெரிய எருமைக்கடாக்கள் கொம்புகளாலே குத்திக்கொண்டிருந்தன. முள்ளம்பன்றிகள் குழிகளிலேயே பதுங்கிக்கிடந்தன. பூமியில் புழுதி உமிக்காந்தல்போல் உஷ்ணமேற்கக் கோழி முதலியவை அதில் காலடி வைக்கமுடியாமல் கஷ்டப்பட்டன. தண்ணீர் வற்றிச் சேறுஞ்சகதியும் சேஷமாயிருக்கும் குட்டைகளில் கெண்டைமீன்கள் கரையிலுள்ள மருதமரத்தின்மீதிருந்து அலறும் அழுகுரலன்றிற் பக்ஷிகளுடைய தொனியைக் கேட்டுத் திடுக்கிட்டுப் புரண்டு மல்லாந்து கிடந்தன.

அன்றியும், தண்ணீர்ப் பந்தல்களின் மேற்கூரைகளை முற்றிலும் பிரித்தெறிந்தும், சிறிய சாலைக்கற்களைச்சரமாரியாய் வாரியிறைத்தும், தூசையுந்துப்பையும் வாரியெடுத்து வானத்திற் சுழற்றியும், உச்சிகாலத்தில் நடமாடும் கானல்நீரில் நீந்துவதுபோல் நீளப்பரவியும், முள்ளிலவங் காய்கள் வெடிக்க அவைகளினின்று புறப்படும் பஞ்சுகளை நூலாக நெடுக இழுத்தும், 'இனி நீரெல்லாம் வற்றிவிடும்' என்று கோடைகாலமே ஓர் அறிக்கை வெளியிடுகிறதோ என்று அனைவரும் ஐயமுற்று அஞ்சும்படி பட்டுப்போன மூங்கிற்

காட்டைப் படீர் படீர் என்று வெடிக்கச் செய்தும், உலகத்தையே உயிருடன் உறிஞ்சிவிடச் சக்திவாய்ந் தும் பேய்க்காற்று எங்கும் வீசிற்று.

அப்பொழுது காடுகளில் பெருந்தீ பிடித்துப் பூமி யில் புல் மரம் செடி கொடி யாவும் எரிந்து சாம்பரா யின. பாதபங்களில் பதுங்கியிருந்த பக்ஷிகளும் ஆகாயத்தில் பறந்துசென்ற பறவைகளும், அக்கி னியாலும் புகையாலும் ஆவிதுறந்தன. சூடு தாங் காது தவிக்கும் மலைப்பாம்புகள் குகைபோல் வாயைத் திறந்து பெருமூச்சு விடுகையில், இக் காட்டுத்தீ ஆயிரக்கணக்காய்த் துருத்திகள் வைத்து ஊதினாற் போல எங்கும் பரவி எல்லாவற்றையும் தின்று ஏப்பம் விட்டது.

இவ்வாறு வெகு கொடூரமான கோடைகாலத்தில் ஒருநாள் பிற்பகலில் பாணன் தனது கிருஹத்தில் போஜனஞ் செய்துவிட்டு உட்கார்ந்திருக்கையில், பாணனது ஸஹோதரனை சந்திரஸேநன் வந்து சொன் னதாவது—"நாற்கடல் சூழும் நாநிலத்திற்கு அதிபதி யும், அரசர் அனைவரும் அடிபணியும்வண்ணம் ஏகச்சத் ராதிபதியுமான மஹாராஜாதிராஜ ஸ்ரீ ஹர்ஷமஹாராஜ னது பிராதாவாகிய கிருஷ்ணன் என்பவர், முன்னரே தங்களுக்குப் பரிசயமுள்ள ஒருமனுஷியனைத் தங்களி டமனுப்பியிருக்கிறார். அந்த மனிதன் வெகுதூரம் வழிநடந்து வந்து வாயிற்படியில் நிற்கின்றான்."

இதைக் கேட்டதும், பாணன் 'சீக்கிரத்தில் அவ னை அழைத்து வா' என்று சொல்ல, சந்திரஸேநன் உடனே அந்தத் தூதனை அழைத்து வந்தான்.

நெடுந்தூரம் நடந்து வந்திருப்பதால், அந்தத் தூதுவனுடைய முழந்தாள்கள் இரண்டும், வீங்கியும் ஸ்தம்பித்தும் இருந்தன. அவன் நல்ல ஒட்டுச்சல்லடம் ஒன்று போட்டுக்கொண்டு அதன்மீது மெழுகுசீலை கொண்டுள்ள அரைக் கச்சையைக் கட்டியிருந்தான். அவன் போர்த்திருந்த பழைய மேல்வேஷ்டி, கட்டியிருந்தமுடிச்சு அவிழ்ந்து முதுகில் தொங்கிக்கொண்டிருந்தது. அநேக கடிதங்களை கொஞ்சம் இடம்விட்டு விட்டு ஒருகயிற்றில் இறுகமுடிந்து, நெற்றியில் தொங்குமாறு அப்பத்திரிகைமாலையை அவன் தனது தலையில் சுற்றிக் கட்டியிருந்தான்.

கடிதம் எடுத்துவரும் அந்தத் தூதன் கொஞ்ச தூரத்தில் வரும்பொழுதே, "அப்பா, யாதொரு கைம்மாறுங் கருதாமல் உலகத்தோர் அனைவருக்கும் உற்ற பந்துவாயிருக்கும் ஸ்ரீமான் கிருஷ்ணன் க்ஷேமத்துடனிருக்கின்றாரா" என்று பாணன் வினவ, 'க்ஷேமந் தான்' என்று தூதன் மறுமொழி கூறி நமஸ்கரித்து கொஞ்ச தூரந்தள்ளி யுட்கார்ந்தான்.

சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு, "ஐயா, எங்கள் எஜமானர் அனுப்பிக்கொடுத்த திருமுகம் இது" என்று சொல்லி அத்தூதன் ஒரு கடிதங்கொடுக்க, பாணன் அதை ஆதரவுடன் வாங்கித் தானே பிரித்து வாசிக்கலானான்—"மேகலகனிடத்தில் நான் சொல்லியிருக்கும் வாய்மொழியைக் கேட்டுணர்ந்த பிற்பாடு, புத்திமானான தாங்கள் காலவிளம்பஞ் செய்யலாகாது; செய்தால் காரியம் கெட்டுவிடும். இவ்வளவுதான் தெரிவிக்க வேண்டிய ஸாராம்சம். மற்றையவெல்லாம் ஒரு

வருக்கொருவர் செய்து கொள்ளும் வழக்கப்படியுள்ள விசாரிப்பு வார்த்தைகளே.''

பாணன் கடிதத்தின் கருத்தை உணர்ந்து, பரிஜனங்களை அனுப்பிவிட்டு, வாய்மொழி என்ன என்று கேட்கவே, மேகலகன் அடியில் வருமாறு தெரிவிக்கலானன்—''மேதாவியான தங்களிடம் எங்களெஜமானர் சொல்லச் சொன்னதாவது— ஒரே வம்சத்தில் பிறப்போ, ஒரே ஜாதியிலிருப்போ, ஒரேயிடத்தில் வஸிப்போ, கூடவே வளர்தலோ, அடிக்கடி காணுதலோ, ஒருவருக்கொருவர் பிரீதியுண்டென்று கேள்விப்படுதலோ, மறைவில் நின்று உபகாரஞ் செய்தலோ, ஸ்வபாவம் ஒன்றாயிருத்தலோ நேசப்பான்மைக்குக் காரணம் என்பது தங்களுக்குந் தெரிந்த விஷயந்தானே. தங்களுக்கும் எனக்கும் இவ்வித காரணங்களுள் யாதொன்றுமில்லை. தங்களை நான் நேரில் பார்த்தவனுமல்லன். ஆயினும் என்மனம் நெருங்கிய பந்துவைப்போல் தங்களை நேசிக்கின்றது. இது சந்திரனுக்கும் ஆம்பலுக்குமுள்ள நட்புத்தான். தங்களைப்பற்றிச் சக்ரவர்த்தியிடம் அயோக்யர்கள் பலவாறு அவதூறு கூறியிருக்கின்றார்கள். வாஸ்தவத்திலோ அவ்வாறு கூறக் கொஞ்சமேனும் இடமில்லை. ஆம்; ஒரு மனிதன் எவ்வளவு நேர்த்தியுடன் இருந்தாலும் அவனுக்கும் நண்பரும் பகைவரும் நடுநிலைமையிலுள்ளவரும் ஏற்படாமலிருப்பதில்லை. தாங்கள் சிறிதுகாலஞ் சித்தத்தைச் சிறுபிள்ளைத்தனத்தில் செல்ல விட்டிருந்தமையால், அதைப் பிடித்துக்கொண்டு பொறாமைக்காரன் எவனோ ஒருவன் தங்களுக்குத்தகாதவிதஞ் சிலபடாப்பழி

களைச் சுமத்திவிட்டான். மற்றவர்களும் அவைகளை யே நம்பியும் பேசியும் வருகிறார்கள். பகுத்தறியுந் திறமையில்லாதாரின் மனப்போக்கு, நீர்போல் நிலை யற்றுப் போனவழியே போவது இயல்புதானே. பலபெயர்களும் பலதடவைகளில் இவைகளையே வற் புறுத்திக் கூறுகையில், சக்ரவர்த்திக்கும் உறுதி ஏற்படத்தானே வேண்டும். அவர் என்ன செய்வார். நானோ வாஸ்தவமறிய விரும்பித் திரவிசாரணை செய்த தால், தங்களது உண்மை நிலைமையை உணர்ந்து கொண்டேன். தங்களைப்பற்றிச் சக்ரவர்த்திப் பெரு மானிடமும் 'இளம்பிராயத்தில் சிறுபிள்ளைத்தனம் பெரும்பாலும் எவரையும் ஏமாற்றி இறக்கத்தில் இழுத்து விடும்' என்று விண்ணப்பஞ் செய்திருக்கி றேன். சக்ரவர்த்தியாரும் 'ஆம்' என்று அநு தாபஉணர்ச்சியுடன் அங்கீகரித்திருக்கின்றார். ஆகை யால் தாங்கள் வீணில் காலம் தாழ்த்தாது உடனே அரண்மனைக்கு வரல்வேண்டும். சக்ரவர்த்தியைக் காணாமல் தாங்கள் காய்ப்பில்லா மரம்போல் பர்துமத் தியில் வஸிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. தாங்கள் பணிந்து நடப்பதிலுள்ள தொந்தரையைச் சிந்தித்து வருந்தியோ, சீமான்களிடம் நெருங்க அஞ்சியோ வராமலிருக்கக்கூடாது. மற்ற மன்னவர்களைப் போல் நமது சக்ரவர்த்தியைக் கருதாதீர்கள். ஸகல ஸுகங் களையும் தாம் மாத்திரம் அனுபவித்துக் கொண்டும், யாசகர்களுக்கு இரக்கவும் இடங்கொடாமலும், மா றாக அவர்களைச் சில ஸமயங்களில் துன்பப்படுத்தியும், அண்டினோரை ஆதரியாமல் அவர்களது ஆவியைப்

போக்கியும், இவ்விதம் அடாத செயல்களை விடாது நடத்தும் அரசர்களும் அனேகர் இருக்கின்றனர். ஆனால் நமது சக்ரவர்த்திப்பெருமானோ அவர்கள் கோஷ்டியில் சேர்ந்தவரல்ல. இவர் நருகன், நளன், நஹூஷன், அம்பரீஷன், தசரதன், திலீபன், நாபாகன், பரதன், பகீரதன், யயாதி இவர்களை விட மேம்பாடு பெற்றவர். அமிருதம்போல் குளிர்ச்சியும் மகிழ்ச்சியுங் கொடுக்கக் கூடியவர். இவர் பார்க்கும் பார்வையிலும், பேசும் பேச்சிலும், இருக்கும் இருப்பிலும, அஹங்காரமென்னும் ஆலகாலவிஷம் அணுவளவும் அமைந்திராது. அபிமானமென்னும் ஜன்னிபிறந்து அங்கங்களை அசைத்து முறுக்கி நடப்பவர் இவரல்லர். மதம் பிடித்து வாய்கோணி வசைச்சொல் சொல்லும் வழக்கம் இவருக்குக் கிடையாது. மேலும் இவர் குற்றமற்ற ஸாதுக்களைத்தான் ரத்தினங்களென மதிப்பவரேயன்றி, வெறுங் கற்கண்டங்களை ரத்தினங்களென மதியார். இவருக்கு முத்துப்போல் வெண்மை பொருந்திய குணங்கள் தாம் அலங்காரம் என்கிற எண்ணத்தைத் தவிர்த்துப் பாழும் நகைச் சுமைகளில் அவ்வாறு எண்ணமே கிடையாது. *தானஜலம் பெருகும் நற்கர்மங்கள் தான் உற்றதுணை யென்று இவருக்குத் தோன்றுமே யல்லாது, அவ்விதமுள்ள யானைகள் அவ்வாருகத் தோன்றுவதேயில்லை. இவர் எல்லாவற்றையும் விட முன்னேற்றம் பெற்று நிற்கும் புகழைப்பாராட்டுவதை ஒழித்து, இந்தப் புல்லுயிரை ஒருபோதும்

---

*. தானஜலம்—கொடுக்கும்பொழுது வார்க்குந்நீர், யானையின் மதஜலம்.

பொருட்படுத்துவதேயில்லை. *கரம் பிடித்த திசைகளில் இவருக்கு ஸுகநுகர்ச்சியே தவிர, பத்நிகள் என்னும் தோற்பாவைகளில் அல்லவே அல்ல. இவர் †குணமேறிய வில்லேயே தமக்குத்துணைப்பலம் என்று கருதுவதை விட்டுப் பிண்டத்திற்கு அண்டி நிற்கும் போர்வீரர்களே அப்படிக் கருதுவதே கிடையாது. மேலும், இவர் தம்மை மித்திரர்களுக்கும், பிரபுத்தனத்தைப் பணிவிடை செய்பவர்க்கும், படிப்பைப் பண்டிதர்களுக்கும், ராஜலக்ஷ்மியைப் பந்துக்களுக்கும் ஐசுவரியத்தை ஏழைகளுக்கும், ஸகல சொத்தையும் பிராமணர்களுக்கும், மனத்தை நற்செய்கைகளின் நினைவிற்கும், ஆயுளைத் தர்மத்திற்கும், சரீரத்தை அஞ்சாமைக்கும், பூமியைக் கத்தி முனைக்கும், வேந்தர்கூட்டத்தை விநோதத்திற்கும், எதிராளியை வீரச்செயலுக்குமாகவே உபயோகித்துவருவது வழக்கம். மேலான ஸகல ஸுகங்களையுந்தரும் இவரது சேவடிநிழல் அற்ப புண்ணியமுள்ளோருக்கு அகப்பட மாட்டாது''

இந்தப் பிரகாரம் மேகலகன் இயம்பியபின், பாணன் சந்திரஸேநனை ''மேகலகனைக் கூட்டிக்கொண்டு போய்ப் போஜனாதிகள் செய்வித்து, வந்த சிரமந்தீருமாறு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும்'' என்று ஆஜ்ஞாபித்து, மேகலகனை அவனுடன் அனுப்பினான்.

மேகலகன் போனபின்பு, பகல் முடிந்து ஸூரியன் அஸ்தமிக்கவே, பாணன் ஸந்தியாகாலத்தில் அநுஷ்

---

* கரம்—கப்பம், கை.

† குணம்—நாண்கயிறு, நற்குணம்.

டிக்க வேண்டிய நித்திய கர்மங்களை முடித்து, போஜனமுஞ் செய்துவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண்டு தனிமையில் இவ்வண்ணஞ் சிந்திக்கலானான்.—

"நான் என்ன செய்வேன். வேந்தர் பெருமானோ என்னைப்பற்றி வேறுவிதமாய் நினைத்திருக்கின்றார். கபடமின்றி உறவு கொண்டாடும் கிருஷ்ணனோ இவ்வாறு சொல்லியனுப்புகிறார். அண்டி நிற்பது அவ்வளவு எளிதல்ல. பணிந்து நடப்பதோ வெகு சிக்கலுள்ளது. ராஜாங்கமோ மிக்க மேன்மையுங் காம்பீர்யமும் பொருந்தியது. அங்கு எனக்கு என் பெரியோர்கள் மூலம் செல்வாக்குண்டோ, அதில்லை. வம்சபரம்பரையாக எங்களுக்கு அங்கே போக்குவரத்துத் தானுண்டோ, அதுவுமில்லை. முன் செய்த உபகாரத்தை முன்னிட்டுக்கொண்டு போகலாமென்றாலோ, அப்படி ஒன்றும் நேர்ந்ததில்லை. பாலியத்தில் அண்டிப் பழகி அதனால் ஏற்படும் ஸ்நேஹந்தானுண்டோ, அதுவுங் கிடையாது. குலப்பெருமையோ இல்லை. முன்னமே கண்டு தாக்ஷிண்யம் சம்பாதிக்கவுமில்லை. புத்திசாதுர்யத்தை வெளிப்படுத்தி வசமாக்கிவிடலாமென்றாலோ, அவ்வித யோக்யதை எனக்கில்லை. மிக்க படிப்பாளி என்று காட்டி ஆசையைக் கிளப்பிவிடலாமெனிலோ, இதற்கும் இடமில்லை. அன்னியர்கண்டு ஆதரிக்கும்படி ஆகிருதியிலும் அழகில்லை. பல்லைக்காட்டித் தொண்டுபுரிந்து பக்ஷந்தேடுந் திறமையோ அடியோடு கிடையாது. புலவர்களின் கோஷ்டியில் புகுந்து புதுமையுடன் பேசி எல்லோரையும் ரஸிப்பிக்கும் வல்லமையும் வாய்த்ததில்லை. பணத்தை வாரியிறைத்து

வசப்படுத்தவோ என்றால் ஆகாது. மன்னவரின் மன திற்கிசைந்த மனிதர்களோடு பரிசயமோ எனக்கு ஏற்படட்டதில்லை. ஆதலின், நான் எவ்வாறு போவேன்? போகவேண்டிய விஷயமோ இன்றியமையாததாய்த் தீர்ந்திருக்கிறது. எப்படி யிருந்தாலும் புறப்பட்டு விடுகிறேன். லோககுருவாகிய முப்புரமெரித்த முக் கண்ணனே அங்கே எனக்கு எவ்விதத்திலும் நன்மை புரிந்து காப்பாற்றி யருள்வாராக.'' என்று ஆலோ சித்துப் புறப்படத் தீர்மானித்தான்.

மறுநாள் பாணன் விடியற்காலத்திலேயே எழுந்து நீராடி வெண்பட்டாடை உடுத்து, ஜபமாலை தரித்துப் பிரஸ்தானகாலத்திற்குரிய வேதஸூக்தங்களையும் மந்திர பதங்களையும் அனேகம் ஆவர்த்தி உருவிட்டு, பரமேச்வரனுக்குப் பாலபிஷேகஞ் செய்து தூபம் தீபம் கந்தம் புஷ்பம் நைவேத்தியம் முதலியவை ஸமர்ப்பித்து பூஜையை முடித்துவிட்டு, அக்னியில் ஆரம்பத்தில் எள்ளைக்கொண்டு ஆஹுதி செய்து பிறகு ஜ்வாலைகள் பிரதக்ஷிணமாய்வீச நெய்யினால் ஹோமித்து, தனது ஆஸ்தியை அநுசரித்து அந்த ணர்களுக்குத் தனத்தை அளித்து, கிழக்கு முகமாய் நின்ற உயர்ந்த பசுவை வலம்வந்து, வெளுத்த சந்த னம் பூசி, வெள்ளைப்பூமாலை அணிந்து, வெள்ளை வஸ் திரந் தரித்து, கோரோசனை தடவிய இளம் அருகம் புல்லின் நுனியில்கோத்த விஷ்ணுக்ராந்தியின் பூ வைக்காதின்மீது அலங்காரமாய் வைத்து, குடுமியில் கடுகுகளைச் செருகி, வெள்ளைவஸ்திரம் தரித்து மற் றொரு மஹா ச்வேதைபோல் விளங்கும் தன் பிதாவின்

தங்கையான மாலதியம்மாள் பெற்றெடுத்த தாயைப் போல் ப்ரேமையுடன் ப்ரயாணத்திற்குரிய மங்களங் களைச் செய்ய, பந்துக்களான கிழவிகள் ஆசீர்வதிக்க, வயது சென்ற வேலைக்காரிகள் கொண்டாட, தான் அடிபணிந்த பெரியோர்கள் ஆமோதிக்க, தன்னால் நமஸ்கரிக்கப்பட்ட குலமுதியோர்கள் உச்சிமோப்ப, அப்பொழுது உண்டான நற்சகுநங்கள் புறப்பாட்டில் உத்ஸாஹத்தை ஊட்ட, சோதிடர்கள் சொற்படி நக்ஷத்திர ப்ரீதிசெய்து, தாழ்வாரத்தில் பச்சைப் பசுஞ் சாணங்கொண்டு மெழுகிச்சுத்தஞ்செய்த பூமி யில் ஸ்தாபிக்கப்பட்டதும் கழுத்தில் வெள்ளைப்பூமாலை சுற்றியிருப்பதும் மாவுகலந்த ஆட்டின்பாலில் ஐந்து விரல்களையும் தோய்த்துக் கோலம்போடப்பட்டிருப்ப தும் புதிய மாவிலைக்கொத்துச் செருகியிருப்பதுமான பூர்ணகும்பத்தைப் பார்த்துவிட்டுக் குலதேவதைகளை அடிபணிந்து, பந்துக்களான பிராமணர்கள் கையில் பூவும் பழமும் ஏந்தி அப்ரதிரதம் என்னும் மந்திரஞ் சொல்லிக்கொண்டே பின்தொடர, நல்ல முஹூர்த் தத்தில், முதன் முதலில் வலதுகாலை எடுத்துவைத்து ப்ரீதிகூடத்தினின்றும் புறப்பட்டான்.

முதல் நாளில், கோடையின் கடுமைகொண்டு மரங் களில் இலையும் பூமியில் ஜலமும் இல்லாமையால் நிற்க நிழலோ குடிக்கத் தண்ணீரோ அகப்படாமல் வரு பவர்களை வருத்திவிடுகிறதும், வழிநடப்போர் உள்ளே நுழையும்பொழுது நமஸ்கரித்துப் போகும்படி முன் வரிசையிலுள்ள மரங்களில் சண்டிகாதேவியின் உரு வம் செதுக்கப்பட்டிருப்பதும், செந்நாய் முதலிய

துஷ்டப்பிராணிகள் தாகந் தாங்கமாட்டாமல் நாக்களை வெளியில் தொங்கவிட்டுக்கொண்டு அங்குமிங்கும் ஸஞ்சரிக்கும் நிலைமையிலுள்ளதும், தேனீக்களை ஓட்டிவிட்டுத் தேனடைகளை எடுத்து நக்குங்கரடிகளாலும் கருங்குரங்குகளாலும் நிறையப்பெற்றதும், காட்டுத் தீ பற்றி எரிந்தவிடங்களில் தண்ணீர் முட்டான்கள் தாராளமாய் முளைத்திருப்பதுமான சண்டிகாவனம் என்னும் காட்டைக் கடந்து மல்லகூடம் என்கிற கிராமத்தை அடைந்தான்.

அவ்விடத்தில் தனக்குப் பிராதாவும் நண்பனும் தனது மனம்போன்றவனுமான ஜகத்பதி என்பான் வேண்டிய ஸத்காரங்களைச் செய்யவே, வெகு ஸௌக்கியமாய் அன்று அங்கே வஸித்துவிட்டு, மறுநாள் புறப்பட்டு கங்கையைத்தாண்டி யஷ்டிக்ரஹகம் என்னும் பெயருடன் கூடியதும் காட்டிலுள்ளதுமான ஒரு சிறு கிராமத்தில் இரவைக் கழித்தான். மறுதினம் மணிதாரம் என்கிற பட்டணத்திற்குச் சமீபத்தில் அஜிரவதி என்ற ஆற்றங்கரையில் இறங்கியிருந்த பாளயத்தை அடைந்து, ராஜமாளிகைக்குச் சிறிது தூரத்திலேயே ஒரு விடுதியில் வந்திறங்கினன்.

பின்பு பாணன் ஸ்நாநம் போஜனம் முதலியவற்றை முடித்துக்கொண்டு சற்று நேரம் சிரமபரிஹாரஞ் செய்துவிட்டு, சக்ரவர்த்திக்கும் சாப்பாடு முடிந்திருப்பதாக அறிந்து, பகலில் ஒரு ஜாமப்பொழுது பாக்கியிருக்கையில் மேகலகனுடன்கூடி ஆங்காங்குள்ள அரசர்களின் பாசறைகளையும் பார்த்துக்கொண்டே, மெல்ல மெல்ல ஆஜாரவாயிலுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கு ஒருபுறத்தில், பட்டங்கட்டக் கொண்டு வந்தவைகளும், பேரிகை ஏற்றுவதற்காக நிற்கின்ற வைகளும், புதிதாய்ப் பிடித்தவைகளும், கப்பமாக வாங்கியவைகளும், பரிசாக வந்தவைகளும், யானைபிடிக்குமிடத்திலிருந்து அதிகாரிகள் அனுப்பியவைகளும், முதன் முதல் பார்ப்பதற்காகக் கொண்டுவந்தவைகளும்,மற்ற அரசர்கள் தூதர்களை அனுப்புகையில் கூட அனுப்பியவைகளும், சேரிகளின் தலைவர்கள் காணிக்கையாக வைத்தவைகளும், யுத்தவேடிக்கை பார்க்க வரவழைக்கப் பட்டவைகளும், கொடுக்கப்படுகின்றவைகளும், இழுக்கப்படுகின்றவைகளும், அவிழ்த்துவிடப் படுகின்றவைகளும், ஜாமப்படி நிறுத்தப்பட்டவைகளுமாக ஆயிரக்கணக்கான யானைகள், 'த்வீபங்கள் அனைத்தையும் ஜயிக்க எண்ணங்கொண்டு ஆங்காங்கு அலைகடலில் அணைகட்டுவதற்காக ஸகல மலைகளையுங் கொண்டுவந்து ஒன்ருய்க் குவித்துவைத்திருக்கின்றனரோ' என்று தோன்றுமாறு நின்றன.

மற்ருெரு புறத்தில், குதிரைகள், ராஜலக்ஷ்மி நர்த்தனமாட மிருதங்கம் வாசிப்பனபோல் தங்களுடைய குளம்புகளை அடிக்கடி பூமியில் தட்டிச் சப்தமெழுப்பியும், 'முழங்காலில் வேகமில்லையே' என்று மானினங்களைப் பரிஹஸித்துச் சிரிப்பனபோல் வாயோரங்களில் நுரையைப் பெருகவிட்டுக் கொண்டும், உள்ளங்களித்து உண்டாகுங் கனைப்பினுல் 'உச்சைச்ரவஸ்' என்னும் இந்திரனது குதிரையைப் போட்டி போட அழைப்பன போலவும், அலங்காரமாக இருபுறமும் சாமரங்கள் வரிசையாய்க் கட்டியிருப்பதால்

கதிரவன் குதிரைமீது கடுங்கோபம்பூண்டு பறந்து பாய இறகுகளை விரித்து நிற்பன போலவும் காணப் பட்டன.

வேறோரிடத்தில், அனுப்பப் பட்டவைகளும், அனுப்பப்படுகின்றவைகளும, அனுப்பித் திரும்பி வந் தவைகளும், 'இவ்வளவு யோஜனைதூரம் இவைகள் சென்றிருக்கின்றன' என்று கணக்குப்பண்ணி எழு திய எழுத்துக்களைப்போல் விளங்கும் சோகிகளாலா கிய ஸரங்களைக்கொண்டு அலங்கரித்த முகமுடைய வைகளும், காதுகளின் கிட்டச் செவந்த சிறிய சாமர ங்கள் ஆபரணங்களாய் அமையப்பெற்றவைகளும், எப்பொழுதும் 'கலீர் கலீர்' என்று ஒலிக்குந் தங்கத் தகட்டுமாலை கட்டியவைகளும், பஞ்சவர்ணமுள்ள கம் பளிக்கயிற்றினாற் கட்டி காதோரங்களில் தொங்க விடப்பட்ட பிடரிமயிரையுடையவைகளுமான கபில நிறமுள்ள ஒட்டகங்கள் ஏராளமாயிருந்தன.

பிறிதொரு ஸ்தலத்தில், பலவகை ரத்தங்கள் பதி க்கப்பெற்றவையும், முத்துஸரக் குஞ்சங்கள் தொங் குபவையும், பவழக்கால்களுள்ளவையும், கோடை காலக் கொடுமையையும் பகலவன் பிரதாபத்தையும் போக்கடித்து இவ்வுலகத்தையே சந்திரலோகம் போ லவும் பகலையே நிலவு நிறைந்தது போலவும் ஆகாசத் தையே நுரைநிரம்பியது போலவும் செய்கின்றவை யும், இந்திரனது ஸம்பத்தையும் இகழ்ந்து நகைப் பன போலிருப்பவையுமான வெண்கொற்றக் குடை கள் வைக்கப்பட்டிருந்தன.

சந்திர கிரணங்கள்போல் வெண்மையும் நுண்மை

யும் வாய்ந்து, நான்கு திசைகளிலும் நாணற்காடு பூத்திருப்பதுபோலவும் ஆகாசம் முடியத் தாமரைத் தண்டு நூல்கள் தங்கிநிற்பது போலவும் செய்யத்திறமுள்ள சாமரங்கள் வேறொரு பக்கத்தில் விளங்கின.

யானைகளின் செவிகளுக்கு ஆபரணங்களான சங்குகளும், விருதுக்கொடிகளும், மயிற்றோகைக் குடைகளும், வஸ்திரங்களும், பட்டாடைகளும, மரதகம் பத்மராகம் இந்திரநீலம் கருடப்பச்சை புஷ்பராகம் என்கிற ரத்தினங்களும், ஒவ்வொரு பாகத்தில் சேர்த்துவைக்கப் பட்டிருந்தன.

மேலும், அந்த அரண்மனைவாயிலில் அனேகம் சிற்றரசர்கள், உள்ளே போக ஸமயம் வாய்க்காமல், சக்ரவர்த்தியைப் பார்க்கவேணுமென்று ஆசைகொண்டு வெளியிலேயே நான்கு புறமும் நின்றுகொண்டிருந்தார்கள். இவர்களுள் சிலர், வெட்கத்தால் தலை தாழ்த்திக் காற் கட்டைவிரலால் பூமியில் கோடுகிழித்துக் கொண்டிருந்தனர். வேறுசிலர், முத்துமாலையின் மத்தியிலுள்ள இந்திர நீலக்கல்லின் கறுத்தகாந்தி பரவவே, சக்ரவர்த்தியின் கோபத்தைத் தணிப்பதன் பொருட்டுக்கழுத்தில் கத்தியைக் கட்டிக்கொண்டிருப்பவர்போல் தோன்றினர். மற்றுஞ்சிலர், அவர்களுடைய மூச்சுக்காற்றின் வாசனைக்கு வசப்பட்டவண்டுக்கூட்டம் முகத்தினருகில் மொய்த்துக்கொண்டிருந்தமையால் ராஜலக்ஷ்மியையிழந்த துயரத்தால் தாடிவளர்க்கத் தலைப்பட்டவர்போல் காணப்பட்டனர். இவர்களோ சக்ரவர்த்தியால் ஜயிக்கப்பட்டவர்களாயிருந்தும், வெகுமானிக்கப்பட்டவர்களைப்போல் வேறொருவ

ரையும் விரும்பாமல் இவரையே தஞ்சமாகப்பற்றிநிற்ப வர்கள். இவர்கள் அனைவருமே, அநேகம் மன்னவர்கள் பின்தொடர்ந்துவர சிற்சில ஸமயங்களில் வெளியே வருபவரும் உள்ளே ப்ரவேசிப்பவருமான வாயிற்காப் போர்களை நேரில் வினவ நடுங்கி, அவர்களுடன் கூடவே வரும் மனிதர்களை அடுத்து "ஐயா, இன்றைத் தினம் எங்களுக்குப் பேட்டி கிடைக்குமா? போஜனம் முடிந்தபின் பூபதி காட்சி தந்தருள்வாரா? கொலு மண்டபத்தை விட்டு வெளியே வருவாரா?" என்று மனந்தளராமல் பின்னேயும் பின்னேயும் ப்ரச்னஞ் செய்த வண்ணமாகவே யிருந்தார்கள். வேறு சில முடிமன்னர்கள், சக்ரவர்த்தியின் பிரதாபத்திற்கும் அன்பிற்கும் ஈடுபட்டுத் தமது தேசங்களினின்று இவ் விடம் வந்து சக்ரவர்த்தியின் பேட்டிக்குக் குறிப்பிட் டகாலத்தை எதிர்பார்த்து நின்றார்கள்.

தவிரவும், பௌத்தர். ஜைனர். சைவர், பிக்ஷுக் கள், ப்ரம்மசாரிகள், பற்பல தேசத்திய ஜனங்கள், ஸமுத்ரக் கரைகளிலுள்ள காடுகளில் வஸிக்கும் மிலேச்சஜாதியார், பற்பல தேசங்களினின்று வந்தி ருக்கும் தூதர் என்ற இவர்களனைவரும் ஆங்காங்கு உட்கார்ந்திருந்தனர்.

இந்த இடத்தைப் பார்த்தால், பிரமதேவர்கள் பிரஜைகளை ஸ்ருஷ்டிக்கும் ஸ்தலமோ என்றும், மூன்று லோகத்திலுமுள்ள ஸாராம்சத்தை எடுத்துப் புதி தாய் ஏற்படுத்திய நான்காவது உலகமோ என்றும், ஆயிரக்கணக்கான க்ருதயுகங்களைக்கொண்டு அமைக் கப்பெற்றதோ என்றும், லக்ஷக்கணக்கான சுவர்க்க

லோகங்களின் சிறப்புகொண்டு சிறப்பிக்கப்பட்டதோ என்றும், கோடிக்கணக்காய் ராஜலக்ஷ்மிகள் வந்து தங்கும் வஸதியோ என்றும் தோன்றிவிடும். இதன் அருமை பெருமைகளை நூற்றுக்கணக்காக மஹாபாரதங்கள் எழுதினாலும் எழுதிமுடியாது.

பாணன் அவ்விடம் போனதும் வியப்புற்று இவ்வாறு எண்ணலானான்—“ஆஹா! இத்துணை ஜனங்களையும் ஸ்ருஷ்டிக்கப்போதிய அளவு பஞ்சபூதங்கள் கமலாஸநர்களின் கையில் எங்ஙனமிருந்தன! பரமாணுக்கள் தானாகட்டும் எவ்வாறு முடிந்து விடாதிருந்தனவோ! ஆயுளும் காலமும் அவஸாநமற்றவையா! வடிவங்களுக்கும் ஒரு முடிவுதான் கிடையாதா!”

மேகலகனை “ஐயா, புண்ணியவானே, க்ஷண காலம் தாங்கள் இவ்விடத்திலேயே இருந்தருளுக” என்று பாணனோடு சொல்லிவிட்டு, அவ்விடமுள்ள வாயிற்காப்போர்களின் பரிசயம் ஏற்கனவே தனக்கிருப்பதால் தடையின்றி உட்புறம் சென்றான்.

சொற்ப நேரத்திற்குள், உயரமுள்ளவனும், இடுப்பில் இரத்தினமுகப்புள்ள தங்கத்தகடு அரைக்கச்சையைப் பூட்டியிருப்பவனும், ஹிமாலயத்தின் கற்பாறை போல் விசாலமான மார்பும் பரமசிவனது வாஹநவிருஷபத்தின் திமில்போல் தடித்த தோளுமுடையவனும், ஓடித்திரியும் ஐம்பொறிகளென்னும் மான்களைக்கட்ட வைத்திருக்கும் கயிறோ என்று நினைக்கும்படி மார்பில் ஒரு முத்துஸரம் சாத்தியிருப்பவனும், ‘ஸூர்ய குலத்திலோ அல்லது சந்திரவம்சத்திலோ எங்கள் சக்ரவர்த்தியைப்போல் யாராவது இருந்ததுண்டா?

காதோடு சொல்லுங்கள்' என்று கேட்பதற்காக சூரியனையும் சந்திரனையும் வரவழைத்திருக்கிறானோ என்று தோன்றும்வண்ணம் காதுகளில் இரண்டு ரத்னகுண்டலங்களை அணிந்திருப்பவனும், ஒருகையில் பெரியபெரிய முத்து வைத்திழைத்த பிடியுள்ள பட்டாக்கத்தியும் மற்றொன்றில் மெருகிடப்பெற்று மழமழப்புடன் மின்னற்கொடிபோல் பிரகாசிக்கின்ற தங்கப் பிரம்பும் உள்ளவனும், சுத்தமான அங்கியும் வெளுத்த தலைப்பாகையும் தரித்திருப்பவனும், பொன்னிறம் வாய்ந்தவனும், அஹங்காரப்பட அதிகாரமிருந்தும் மிக்க வணக்கமும் குளிர்ந்த பார்வையும் பொருந்தியவனுமான ஒரு மனிதன் கூடவே பின்னடிவர, மேகலகன் உட்புறமிருந்து வெளிவந்து, கூடவந்தவனைக் குறிப்பிட்டு பாணனோடு "ஐயா, இவர் வாயிற்காப்போர்களின் தலைவர். சக்ரவர்த்திக்குக் கண்ணுக்குக் கண்ணாயிருப்பவர். பாரியாதரன் என்று இவருக்குப் பெயர். நன்மையை விரும்பும் தாங்கள் இவரிடம் அருளுடன் கண்ணியமாய் ஒழுகுக" என்று உரைத்தான்.

பின்னர், பாரியாத்ரன் பாணனை நெருங்கி நமஸ்கரித்து, இனிய குரலோடு "ஐயா, வாருங்கள். உள்ளே போகலாம். சக்ரவர்த்தியைக் காணலாம். சக்ரவர்த்தியார் தங்களிடம் கருணை கூர்ந்திருக்கின்றார்." என்று தெரிவித்தான்.

பாணனோ இதைக்கேட்டதும் "சக்ரவர்த்தியார் கருணை காட்டியருளுமாறு நான் என்ன பாக்கியம் செய்தேன்!" என்று சொல்லிக்கொண்டே, வாயிற்காப்போன் வழிகாட்ட அவனுடன் உட்சென்றான்.

போகும்பொழுது, வநாயு கம்போஜம் பரத்வாஜம் ஸிந்து பாரஸீகம் என்ற தேசங்களினின்று கொண்டு வரப்பட்டவைகளும், சிவந்தவைகளும், கறுத்தவைகளும், வெளுத்தவைகளும், பொன்னிறம் பொருந்தியவைகளும், பச்சைநிறம் வாய்ந்தவைகளும், கவுதாரிநிறம் கலந்தவைகளும், நாலுகால்களும் முகமும் மாத்திரம் வெளுத்து பஞ்சகல்யாணியெனப் படுபவைகளும், கடைக்கண் வெளுத்துக் கருவிழி விரிவுடன் நன்றாய்க் கறுத்திருப்பவைகளும், கிருத்திகா நக்ஷத்திரங்களைப்போல் நெருங்கி விளங்கும் புள்ளிகள் நிறைந்தவைகளுமான அரசரின் அன்பிற்குரிய அனேக குதிரைகள் நிறுத்தியிருந்த லாயத்தைக் கண்ணுற்றான்.

இந்தக் குதிரைகளின் முகம் துடைந்து விட்டாற்போல் விழல் சதை விழாமல் நீண்டும், காதுகள் அதிகம் நீளாமலும், குரல்வளை வட்டமாகச் செவ்வனே பொருந்தியும், கழுத்து யூபஸ்தம்பம் போல் அடி பெருத்து மேலே போகப்போகச் சிறுத்து நீண்டு சிறிது வளைவு பெற்றும், பிடரி தடித்து வளர்ந்தும், மார்பு பாழுஞ்சதை பற்றாமல் ஒழுங்காய் வெளிவந்தும், முழங்கால்கள் உருவி விட்டாற்போல் வெற்று மாம்ஸமற்று நேராய்நின்றும், வயிறு அதிகம் விரைந்து செல்லும்பொழுது அறுந்துவிடுமோ என்று அஞ்சினாற்போல் நரம்புகளேயில்லாமல் வட்டவடிவத்தில் அமையப்பெற்றும், சப்பைகளிரண்டும் நடுவில் நன்றாய்ப் பிளவுபட்டு விளங்கிக்கொண்டும், வால் பூமியிலிடித்துக்கொண்டும், குளம்புகள் வட்டமான இரும்புப்பட்டை போல் வன்மை பொருந்தியும் இருந்தன.

தவிரவும், இருபுறமும் கட்டுமுளைகளை அடித்து அவைகளில் குதிரைகளின் முகக்கயிறுகள் இழுத்து இறுகக் கட்டப்பட்டிருந்தன. பின்புறம் ஒருகாலில் கயிறு பூட்டி முளையில் இழுத்துக் கட்டியிருந்தமையால் அந்தக் கால் கொஞ்சம் நீள, அக்குதிரையின் உடல் ஏற்கனவே நீண்டிருப்பினும் இன்னுமதிகம் நீளமுள்ளதுபோல் காணப்பட்டது. நூல்களை மடித்தும் பல விதமாய்ப் பின்னியும் உருண்டைகள் போட்டும் பலவாறாக அக்குதிரைகளின் கழுத்தில் கட்டி அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

சில குதிரைகள் தாங்கள் மென்ற அருகம் புற்களின் சாறுபட்டுச் சொறசொறப்பு எடுத்த அவயவங்களைத் தினவு தீர அடிக்கடி பற்களால் கடித்துச் சுழித்தும், கண்களைக் கொஞ்சம் மூடியும், மெதுவாய் வாலை வளைத்து அசைத்தும், மாற்றி மாற்றி ஒவ்வொரு காலைத் தூக்கிக்கொண்டு அந்தக்காலின் களைப்பை ஆற்றும்பொழுது உடலின் பாரம் மற்ற மூன்று கால்களில் மாத்திரம் உறைக்கின்றமையால் சப்பைகள் சிறிது சரிந்து தளர்ந்தும், ஏதோ தியானிப்பவைபோல் உறக்கத்திலிருந்தன.

வேறு சில குதிரைகள் புற்கட்டுக் கொண்டுவருவதைப் பார்த்துவிட்டு அதில்பேரவாவினாலும் ஸந்தோஷத்தாலும் அடிக்கடி மெதுவாய் ஹூங்காரஞ் செய்துகொண்டும், லாடம் பூமியில் தட்டி சப்தமுண்டாகுமாறு தமது குளம்புகளால் கட்டுத்தரையைப் பிராண்டிக்கொண்டும், புற்களின் பொருட்டுத் துடித்து நின்றன. மேலும், இவைகள், புற்களைத் தின்பதிலுள்ள

பேராசையினால் பொறுமை பூண்டு ஒன்றோடொன்று தள்ளிக் கலகஞ்செய்ய, அப்பொழுது குதிரைக் காஸாரிகளான சண்டாளர்கள் கோபங்கொண்டு அதட்டவே, கருவிழிகள் சுழல மருண்டு நின்றன. இந்த லாயத்தின் மேற்பாகத்தில் விதானங்கள் கட்டியிருந்ததுந் தவிர, முன்பாகத்தில் இஷ்டதேவதையை வைத்துப் பூஜையும் நடந்திருந்தது.

இந்தக் குதிரைலாயத்தின் நிலைமையைக் கண்டவுடன் பாணனுக்கு வியப்புந்திகைப்பும் உண்டாயின. கொஞ்சதூரம் உட்சென்றபின் இடதுகைப்பக்கத்தில் ஆகாசம் அளாவி நிற்கின்றதும், சுற்றிலும் வாழைத் தோட்டமுள்ளதும், வண்டுகள் பின்தொடர ஆறு போல் மதஜலம் விழுந்து நிறைந்ததும், மகிழம்பூ வாஸனையைப்போல் உள்ள வாஸனையை எங்கும் பரவ விடுகிறதும், தூரத்திலிருப்பதால் தெளிவாய்த் தெரியாததுமான ஒரு மண்டபம் நிற்பதைப் பார்த்துப் பாணன் "ஐயா, இந்த மண்டபத்தில் சக்ரவர்த்தியார் என்ன செய்வது வழக்கம்" என்று பாரியாத்திரனை வினவவே, "ஐயா, இது தர்பசாதன் என்னும் பட்டத்து யானைகட்டும் மண்டபம். இந்த யானையை நமது சக்ரவர்த்தி வெளித்தோன்றும் தமது மனமென்றும், ஜாதி வேறான ஆத்மா என்றும், புறமே நிற்கும் ஆவி என்றும் பாராட்டுவார். மேலும் சக்ரவர்த்தியாருக்கு வீரச்செயலில் உற்ற தோழனும் இதுதான்" என்று பாரியாத்திரன் பதிலுரைத்தான்.

பின்னர், "ஆம். தர்பசாதனைப்பற்றிச் செவியுற்றிருக்கிறேன். அதைக்காண எனக்குக் குதூஹலம்

அதிகரிக்கின்றது. பிழையில்லையாகில், என்னை அவ்விடம் அழைத்துக்கொண்டு போக வேண்டுகிறேன்" என்று பாணன் சொன்னதைக் கேட்டதும், பாரியாத்திரன் "ஐயா, அப்படியே ஆகலாம். யாதொரு பிழையுமில்லை. வாருங்கள்" என்று கூறிப் பாணனை அவ்விடம் அழைத்துக்கொண்டு போனான்.

அவ்விடம் சென்று பாணன் கொஞ்சம் அகன்றிருந்தே தர்பசாதனைப் பார்த்தான். இதன் கம்பீரமான கர்ஜனையைக்கேட்டு மேகமுழக்கமென மயங்கி, வானத்தில் சாதகப்பறவைகளும் பூமியில் மயில்களும் கொண்டாடிக் குதூஹலித்துக் கோலாஹலம் செய்தன. இதன் உடலில் நெருக்கமாய்த் தேன் துளிநிறமுள்ள புள்ளிகள் நிறைந்திருந்தன. இது, நான்காம் பருவம் நீங்கி ஐந்தாம் பருவத்தில் புகும் ஸமயமாகையால் அதற்காக மங்களவாத்தியம் வாசிப்பதுபோல் காதில்கட்டிய சங்குகளை ஒலிப்பித்தும், காதுகளை நாகரா அடிப்பதுபோல் அடித்துக்கொண்டுமிருந்தது. இந்தயானை ஒருகாலைத் தூக்கிக்கொண்டு மற்ற மூன்று கால்களை மாத்திரம் ஊன்றி, பெரிதான தனது தேகத்தை அடிக்கடி ஆட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், தனது பாரந் தாங்கமாட்டாமல் இப்பூமி ஒருகால் வெடித்து விடுமோ என்று நினைத்துத் தனது பாரத்தை உதறிக் குறைத்துவிட யத்தனிப்பது போல் தோன்றும். "இது இவ்வளவு யுத்தங்களில் ஜயம் பெற்றது." என்று எண்ணிக் கணக்கிட்டு வரைந்த கோடுகளோ இவை என்று நினைக்கும்படி மத்திய பாகத்தில் பல மடிப்புக்கள் விழுந்திருக்கும்

தனது தடித்த தும்பிக்கையை இந்த யானை ஆகாசத்தில் உயர்த்தும்போது, திக்கஜங்களை யுத்தத்திற்கு அழைப்பதுபோலவும், நேராய் நீட்டுகையில் திசைகள் அனைத்திற்கும் ஒரு தாழ்ப்பாள் இடுவது போலவும் புலப்படும். இது, ஒரு தந்தத்தின்மீது வாழை மரங்களையும் மற்றொன்றின்மீது தாமரைத் தண்டுகளையும் தனது துதிக்கையால் விடாமல் எடுத்து வைத்துக்கொண்டிருந்தது. இதன் தந்தங்களினின்று எங்கும் பரவும் வெண்மையான காந்தியைக் கண்டால், அது குளங்களிலிறங்கி விளையாடுகையில் தான்பறித்துத்தின்ற ஆம்பல்களை வெளிவிடுவதுபோலவும், தும்பிக்கையை உயரத்தூக்கும் பொழுது இதன் சிவப்பான தாழ்வாய்க்கட்டையைப் பார்க்கையில், அது தான் பக்ஷித்த செந்தாமரைப் பூக்களைப் புறமே வர்ஷிப்பதுபோலவும், இயற்கையாகவே பிங்களவர்ணமான இதன் கண்களைக் கண்ணுற்றால் அது கமலஸரஸ்ஸுகளில் தான் குடித்த தேனைக் கண்வழியாய்ப் பெருகவிடுவது போலவும் தோன்றக் கூடும். பனிக்கட்டிகளைப் பெரிய முத்துவடிவத்தில் கடைசல் பிடித்து அவைகளைக் கோத்து அதன் கும்பஸ்தலத்தில் சாத்தியிருந்த ஒரு மாலை, யானைகள் அனைத்திற்கும் இதுதான் அதிபதி என்று கட்டிய பட்டம்போலவும், இதன் நீண்ட வால் அரசியலிற்குரிய கவரி போலவும் விளங்கின. இது, அடிக்கடி காதுகளை அடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால், தனது தந்தத்தில் வஸிக்கும் ராஜலக்ஷ்மியைப் பக்தியுடன் வீசுவதுபோலிருக்கும். இது, நல்லவாஸனை

பொருந்திய மதஜலத்தைப் பெரிதும் பெருகவிடுவதுடன், தனது துதிக்கையை உயர்த்தி 'பூ' என்று ஊதி நாலுபுறமும் ஜலத்திவலைகளையும் வாரியிறைத்துக்கொண்டு நிற்பது, திக்விஜயகாலத்தில் இது குடித்த ஆறுகளை வெளிப்படுத்துவதுபோல் தோன்றும். வேறு கஜங்களின் பேரிகையை அடிக்கையில் கொஞ்சநேரம் சிறிதும் அசையாமல் கேட்டுவிட்டு உடன் உடலை வளைத்து முறுக்கி அசைத்துப் பெருமூச்சு விடுவதைப் பார்க்கையில், வேறு யானைகள் உலகத்தில் இருப்பதே தனக்கு அவமானமென்று இது நினைப்பதுபோலவும், யுத்தமில்லாமல் இவ்வாறு வீணில் கட்டப்பட்டிருக்குந் தன்னையே தான் அங்கலாய்ப்பதுபோலவும் யாரும் நினைப்பார்கள். இது, உண்பதற்காகப் போட்டிருக்கும் எதையும் அசட்டையாய் எடுத்துத் தூரத்தில் எறிவதைக் கண்டு வெகுண்டு யானைப்பாகர்கள் அலற, அதற்கு வழிப்பட்டு மதத்தால் கண்களின் மூன்றிலொரு பாகத்தை மூடிக்கொண்டே சிலவற்றை வாயில் இட்டுக்கொண்டிருந்தது. இளந் தளிர்களையும் கொத்துப் பாசிகளையும் தாமரைத் தண்டுகளையுங் கொண்டுவந்து இந்தமண்டபத்தில் பரப்பி வேனிற்காலத்திற்கு ஏற்றவாறு வேலைக்காரர்கள் சிதோபசாரஞ் செய்திருந்தார்கள். மேலும், இந்த யானையினிடத்து வீரமும், தீரமும், அழகும், அமைதியும், உருவமும், பருவமும், வன்மையும், நன்மையும், பெருமையும், பொறுமையும், மதமும் மானமும், உறுதியும், ஊக்கமும், சினமும், மனமும், நன்கு பொருந்தியிருந்தன.

இந்த யானையைக் கண்டதும், பாணனுக்கு இவ்விதம் எண்ணமுண்டாயிற்று—"இதைப் படைக்கப் பிரமதேவர் பருவதங்களைத்தான் பரமாணுக்களாகக் கைக்கொண்டிருக்கவேண்டும். ஐயமில்லை. அன்றேல், இவ்வாறு உயர்வும் பருமையும் உண்டாக வழியிராது. இஃது என்ன விந்தை—விந்தியமலைக்குத் தந்தங்களும், ஆதிவராஹத்திற்குத் தும்பிக்கையும் முளைத்திருக்கின்றனவே!"

இவ்வண்ணம் வியந்து சிந்தித்து நிற்கும் பாணனைப் பார்த்துப் பாரியாத்திரன் பகர்ந்ததாவது—"ஐயா, கேளுங்கள், நமது சக்ரவர்த்தியாரோடு போர் புரிந்து தோற்றுப் பதியிழந்த பகைவர் பலரும், கானகம் புகுந்து காலங்கழிக்கையில் மீண்டும் தமது பதவியைப் பெற மனோராச்சியஞ்செய்து சதுரங்கபலத்தை மனக்கற்பனையால் பாவித்துக்கொண்டிருக்க, நமது தர்பசாதனின் நினைவு திடீரென வரவே, மனமழிந்து திடுக்கிட்டு நிற்பார்கள். ஐயா, இப்பொழுது சக்ரவர்த்தியைப் பேட்டி காணத் தருணமன்று: மற்றொரு ஸமயம் மறுமுறையும் தாங்கள் தர்பசாதனைப் பார்க்கலாம். வாருங்கள்."

இவ்விதம் வாயிற்காப்போன் சொல்லவே, பாணன், தனது பார்வையை அந்த யானையினின்று மிக்க பிரயாஸையுடன் திருப்பி, பாரியாத்திரன் காட்டும் வழியே சென்று, ஆயிரக்கணக்காய் வேந்தர்கள் வீற்றிருக்கும் மூன்றுக்கட்டுக்களைக் கடந்து, நான்காங் கட்டில் ஹர்ஷ சக்ரவர்த்தி, போஜனம் முடிந்தபின் சிறிதுநேரம் சந்தடியில்லாமல் இளைப்பாறுவதின் பொ

ருட்டுக் கொலுமண்டபத்திற்கு முன் ஒரு தாழ்வாரத்தில், தந்தத்தால் கால்கள் வைத்து முத்துச் சிப்பிகளைப் பலகைபோல் இணைத்து செய்ததும் சந்தனச் சாறுகொண்டு கழுவியதும் பனித்திவலைபோல் சீதளமுமான ஸோபாவின் ஓரத்தில், தனது சரீரபாரம் கையில் ஏறுமாறு ஒரு கையை மடித்துவைத்துக் கொண்டு சிறிது சரிந்து உட்கார்ந்திருக்கக்கண்டான்.

அவ்விடத்தில் அரசர்பெருமானுக்கு ஸ்வல்பம் அகலவே மேடையில், உயர்ந்தும், தங்கநிறம் வாய்ந்தும், கசரத்துப் பழக்கத்தால் பிரிந்து விரிந்து வலிமை பெற்ற அவயவங்கள் அமைந்துமுள்ள குலபரம்பரையாய் ஊழியஞ் செய்துவரும் மெய்காவலாளர் உருவிய கத்தியுங்கையுமாய்த் தங்கத்தூண்களைப்போல் அசையாமல் நின்றனர். அரசருக்கு அருகாமையில் அன்பிற்குரிய அனேக அறிஞர்கள் அமர்ந்திருந்தார்கள். விளிம்புகளில் கெம்பும் மற்ற விடங்களில் இந்திரநீலக்கல்லும் வைத்து இழைத்த பெரிய பீடத்தின்மீது இடதுகாலைக் கலிகாலத்தின் தலையில் வைப்பதுபோல் வைத்திருக்கும் சக்ரவர்த்தியைக் கண்டால், காளியஸர்ப்பத்தின்படத்தின்கண் கால்வைத்திருந்த கண்ணனே இவர் என்று எவரும் எண்ணுவர். மேலும், அந்தப் பாதபீடத்தில் ஸூரியன் பிரதிபிம்பித்திருப்பதைப் பார்த்தால், வானத்தின் மீதே தாண்டிச்செல்ல அனுமதி பெறுவதற்காகச், சூரியனே சக்ரவர்த்தியின் காலில் விழுந்து கெஞ்சுகின்றானோ என்கிற எண்ணம் எவருக்கும் உண்டாகாமலிராது. நகங்களின் ஒளி பரவுகையில் 'பட்டமஹிஷி'

என்று பூமிக்குப் பட்டங்கட்டியிருப்பதுபோல் தோன்றும். அனேக அரசர்கள் அடிபணியுங்கால் அன்னவருடைய மகுடங்களிலுள்ள பத்மராகக் கற்களின் காந்தி புகுந்து செவந்தனவோ என்று எண்ணும் வண்ணம் மிகச் செவந்த இரு சரணங்களிலும் சக்ரவர்த்தித் தன்மைக்கு அறிகுறிகளாகிய பத்மரேகை, சங்கரேகை, மீனரேகை, மகரரேகை என்ற ரேகைகள் விளங்கின. முட்டுக்கள் அழகாய் அமையப் பெற்றுத் தடித்து இரத்தவோட்டம் நன்றாயிருப்பதால் தளதளப்புடன்கூடிய இவருடைய துடைகளிரண்டும், இரண்டாய்ப் பிரிந்தோடும் காந்திப்ரவாஹம் போலவும், இவரது ஹிருதயத்திலுள்ள பூமிபாரத்தைத் தாங்க நாட்டிய இரண்டு மாணிக்கத்தூண்கள் போலவும் விளங்கின. இவர் வெகு இலேசான நூல் கொண்டு நெய்ததும், அமிழ்த நுரைபோல் வெண்மையுள்ளதுமான வெண்பட்டாடையை அரையில் உடுத்து, அதன்மீது கல்லிழைத்த மேகலையைப் பூட்டியிருந்ததுந்தவிர, புட்டாப் போட்ட மெல்லிய ஒரு வஸ்திரத்தை மேலே தரித்துமிருந்தார். அமர்க்களத்தில் அனேகந்தடவைகளில் யானைகள் தங்களுடைய தந்தங்களைக்கொண்டு குத்தியிருப்பதால் தழும்பு விழுந்து வழவழப்புடனிருக்கும் இவரது மார்பு, கைலாஸ மலையின் ஸ்படிகக் கற்பாறைபோல் விசாலமாய் விளங்கிற்று. ‘வாணீதேவிக்கு வதனம், மஹாலக்ஷ்மிக்கு மார்பு’ என்று பிரித்து எல்லை கட்டிப் போட்டிருக்கும் நூலோ இது என்று தோன்றும்படி, கழுத்தில் மிக்க ஒளி வீசும் ஒரு முத்துமாலையை

அணிந்திருந்தார். நாற்கடல் சூழ்ந்த இப்பூமிக்குக் கன்மதில் போன்றவையும் மார்பினிடம் லக்ஷ்மி குடி புகும்பொழுது மங்களத்தின்பொருட்டுத் தோரணங் கட்ட நாட்டியிருக்கும் இரண்டு ரத்தினத்தூண்கள் போன்றவையுமான இவருடைய புஜங்களிற் பூட்டியிருக்கின்ற பாஜிபந்துக்களில் பதித்த இரத்தினங்களின் ஒளி அடர்ந்து நீளப்பரவுவதைப் பார்ப்பவர்கள், விஷ்ணுவை விட ஒரு விசேஷமேற்படுவதற்காக வேறு பல கைகள் புதிதாய் முளைக்கின்றனவோ என்றும், மாணிக்கமலை மணிமயங்களான இறகுகளை விரித்து மாண்புடன் நிற்கின்றதோ என்றும் நினைக்கக்கூடும். இவரது செவ்விய அதரம், கௌஸ்துப மணியே தனது ஸஹோதரியான லக்ஷ்மியை முத்தமிட விரும்பி முகத்தின் ஓரவயவமாய் இவ்வுருவம் பெற்று நிற்கின்றதோ என்னும் எண்ணத்தை உண்டாக்குவதாயிருந்தது. இவர் தமது நண்பர்களுடன் ஸரஸமான பரிஹாஸ வார்த்தைகளாடிக்கொண்டு புன்முறுவல் புரிகையில் பரவும் பற்களின் தவளமான ஒளி, முகமென்னும் சந்திரனது நிலவுபோலவும் இயற்கையில் திரிதலுள்ள ராஜலக்ஷ்மிக்கு நல்வழிகாட்டும் வெளிச்சம் போலவும் விளங்கிற்று. இவரது முகமாகிய கமலத்தின் மத்தியிலுள்ள கர்ணிகை போன்ற நாஸிகை சிறிது வணங்கியிருப்பதை, மூச்சுக் காற்றின் வாஸனையை அனுபவிக்கத் தானே கொஞ்சங்குனிந்து நிற்பதாகவே கூறலாம். இவரது வெள்ளை விழியின் காந்தி பால்போல் பரவியிருந்தது. கண்ணாடிபோல் கன்மஷமில்லாது

துலங்கும் இவரது கன்னத்தில் சாமரம் வீசுபவள் பிரதிபலிப்பது, இவருடைய வதனத்தில் வஸிக்கும் வாணீதேவியை நினைப்பூட்டுவதாயிருந்தது. தலையின் முன்பாகத்தில் அணிந்த சூடாமணியின் கிரணம் பரவவே, சென்னி செந்நிறம்வாய்ந்து விளங்கிற்று. காதுகளில் தரித்திருந்த மணி குண்டலங்களின் நுனியிலிருந்து வீணையின் தந்திக்கம்பிபோல் கதிரொளி நீள வீசுவதையும், அப்பொழுது காதுகளின்மீது அலங்காரமாய் வைத்த புஷ்பங்களில் அமர்ந்த வண்டுகள் இசைபாடுவதையும் பார்த்தால், வண்டுகள் வீணை வாசித்து ஸப்தஸ்வரங்களின் உண்மையை அரசருக்குக் கற்பிப்பன போலத் தோன்றியது. இவர் மலர்ந்த மல்லிகைப் பூமாலை ஒன்றைச் சிரத்தில் சூடியிருந்தார். உச்சியில் தரித்திருந்த சுட்டியிலுள்ள முத்துக்களின் வெளுத்த காந்தியும் மரகதங்களின் நீலவொளியுஞ் சேர்ந்து இவரது மேனியில் பரவும் காட்சி, ப்ரயாகையினின்று கங்கையும் யமுனையும் தாமாகவே வந்து அபிஷேகஞ் செய்வனபோல் தோன்றிற்று. இவருக்கு விருப்பமில்லாவிடினும் கட்டாயப்படுத்தி ஸிம்மாஸனத்தில் ஏற்றிவிடவேணுமென்று நினைத்தவைபோல் லக்ஷணங்கள் அனைத்தும் இவருடைய எல்லா அவயவங்களையும் பிடித்துக் கொண்டிருந்தன. இவரது சரீரகாந்தியைப் பார்த்தால் இவர் தேஜஸின் பரமாணுக்களாலேயே ஸிருஷ்டிக்கப்பட்டாரோ என்று தோன்றும். உவமையற்று விளங்கும் இவரதுமேன்மை மனத்திற்குமெட்டாதது. இம்மேன்மையை வெறுங் குணங்களாலோ, அன்றி

வரத்தாலோ, அல்லது ஆசீர்வாதத்தாலோ, இல்லையேல் தர்மத்தாலோ, அன்றேல் முகக்களையினுலோ, இவை அன்றெனில் பாக்கியத்தாலோ, எவரும் அடைந்துவிட முடியாது. இத்தகைய மேன்மையை இலக்ஷ்மி தேவியும் பிறரிடத்தில் பார்த்திராள். ஸத்யமென்பது, தன்னை ஸகலராஜாக்களும் விட்டுவிடவே, இவரை அண்டிக் காப்பாற்றுவதாக உறுதிமொழி வாங்கிக்கொண்டு இவரிடத்திலேயே நிலைபெற்றது. இவர் மற்றவர்களுக்கு நம்பிக்கை பிறக்குமாறு கபடமற்று மனம் விட்டு மதுவொழுகப் பேசுவார். காவ்யங்களை எடுத்துக்கொண்டு அமிழ்தம் பொழியுமாறு சபையில் பிரஸங்கிப்பார். கருணைபுரிகையில் கணக்கில்லாப் பொருளைக் களிப்புடன் அளிப்பார். முன்னம் நடந்த யுத்தவிஷயம் ப்ரஸ்தாவத்திற்குவந்தால் அப்பொழுது இவரது கண்ணோட்டம் கத்தியின்மீது விழுவது வழக்கம். புருவஆட்டம், அரைக்கண்ணோட்டம், சோம்பல் முறித்தல், விரலைச்சொடுக்கல், கைகளை ஒன்றோடொன்று கோத்தல், உள்ளங்கையை மல்லாத்தி வாயை மூடல், கொட்டாவிவிடல், காரணமின்றி நகைத்தல் முதலிய சிருங்கார நடவடிக்கைகளால் கல்மனத்தினரையுங் கவருஞ் சக்திவாய்ந்த விலைமாதர் வெகுபேர், மார்பில் மகிழம்பூ மாலையுடன் முக்தாஹாரமும் அணிந்து, நெற்றியிலிட்ட சாந்துப்பொட்டு வியர்வையால் அழிய, இவரது அருகாமையில் நின்றிருந்தனர். இவர் தமது ஸ்பரிசத்தால் கைகள் வியர்த்து நடுங்கவே தம்முடைய கால்களைக் கைகளிலிருந்து நழுவவிடும் கால் பிடிப்பவளைப் புன்சிரிப்புடன் வீணைவாசிப்பதற்குரிய

கருவியினுல் தலையில் தட்டிக்கொண்டிருந்தார். இவரைப் பற்றில்லாதவர் என்று பொருள்களும், அண்டி நிற்கத்தகாதவர் என்று தோஷங்களும், அடக்கியாளும் வன்மையுள்ளவர் என்று ஐம்பொறிகளும், அணுகக்கூடாதவர் என்று கலியும், ரஸம் தெரியாதவர் என்று ஏழு வ்யஸனங்களும், * அஞ்சுங்குணமுடையவர் என்று அபகீர்த்தியும், மனமறியக் கூடாதவர் என்று மன்மதனும், ஸ்திரீலோலர் என்று ஸரஸ்வதியும், பேடி என்று பிறமாதர்களும், பெரிய முனிவர் என்று யதிகளும், சொற்படி நடப்பவர் என்று நட்பாளர்களும், வேலைக்காரர் என்று விப்பிரர்களும், உற்றதுணை என்று எதிராளிவீரர்களும் எண்ணுவார்கள். இவர் ஸேனையில் சந்தனுவையும், ஜயத்தில் பீஷ்மரையும், வில்லில் த்ரோணரையும், அம்பு பயன் பெறுவதில் அச்வத்தாமாவையும், †மித்திரப்ரீதியில் கர்ணனையும், பொறுமையில் தர்ம புத்திரரையும், யானைபலத்தில் பீமனையும், பெரிய போரை நடத்துவதில் அர்ஜுனனையும் விட மேம்பாடு பெற்றவர். இவர் நன்மை, கல்வி, பெருமை, கருணை, ஆண்மை, சிறப்பு, நேர்மை, இவைகளுக்கு இருப்பிடமாய் விளங்கினார். அன்றியும், இவர் அழகில் அநங்கனைப்போலவும், ஐசுவரியத்தில் அமரேசுவரனைப் போலவுமிருந்தார். இவருடைய மனத்தில் ஆழமும் தெளிவும் அமர்ந்திருந்தன. இவருக்கு ஸுந்திரமானவடிவம்

---

* ஏழுவ்யஸனங்களாவன :— ஸ்திரீயிச்சை, சூதாட்டம், வேட்டையாடல், குடி, கடுந்தண்டனை, கடுமையுள்ள பேச்சு, தகாதவழியிற் செலவு. † மித்திரன்:—சூரியன், நண்பன்.

வாய்ந்திருப்பினும், இவரை அடுத்துச் செல்ல எவரும் அச்சமுறுமலிரார்.

பாணன் இந்தப் பார்த்திவனைப் பார்த்ததும் மனத்தில் ஸந்தோஷம், அச்சம், ஆசை, திருப்தி இவைகள் உண்டாக, மேனியில் மயிர் சிலிர்க்க, கண்களினின்று ஆநந்தக்கண்ணீர் சொரிய, அகலவே நின்று ஆச்சரியத்துடன் இவ்வாறு சிந்திக்கலானான்,— "இந்த ஹர்ஷசக்ரவர்த்தியின் பிறப்பன்றோ சிறப்புப் பெற்றது. இவர் பெயரைச் சொன்னாலும் பாவம் போகுமே. என்ன தேஜஸ்ஸு. அகண்ட பூமண்டலத்திற்கும் இவர் அதிபதி. இவருடைய நடவடிக்கை பண்டைக்காலத்திய எந்த அரசனிடமுங் காணப்படவில்லையே! இவராலல்லவா இந்தப் பூமி நல்லரசுபெற்றது. சிறு பிள்ளைப் பருவத்திலும் இவருடைய நடத்தை புண்ணியத்தோடு முரண்பட்டதல்ல. பணச்செருக்கால் பண்டிதர்களைப் பரிபவப்படுத்தும் இயல்பு இவரிடத்திலில்லை. தன்னினத்தாரைத் தாங்கி நிற்பவர் என்றே இவரைப் பற்றிப் பேசுவார்கள். குற்றவாளிக்கு அடாதபடி கடுந்தண்டனை விதிப்பதில் இவரது மனஞ்செல்லாது. இவரது பொருளாதாரவழிகளில் வழு என்பதே கிடையாது. இவரைப் பார்ப்பது பயனற்றுப் போகமாட்டாது. இவர் பொருளைக்கொண்டு தன்னலம் பாராட்டுவதில்லை. ஆச்சரியம்! ஆச்சரியம்!! என்ன ராஜாங்கம்! தேவர்களுக்கும் இவ்வாறு அமைந்திராது. மேலும், இவர் கொடுப்பதற்குத் தக்கபடி வாங்கிக்கொள்ள அவ்வளவு யாசகர்கள் இவ்வுலகத்திலேயே இல்லை.

இவரது புத்திக்கேற்றவாறு படிக்கச் சாஸ்திரங்கள் போதா. இவர் கவிதை செய்யப்புகின் அதற்குப் போதியவண்ணம் வாக்குக் கிடைத்தலரிது இவரது மனவலிமை முழுவதும் வெளிப்படுமாறு நெருக்கடியான ஸம்பவங்கள் எற்பட முடியா. இவரது ஊக்கத்திற்கு உற்றவாறு செய்யவேண்டிய காரியங்களே இல்லை. இவருடைய புகழ், தாராளமாய்ப் பரவத் திசைகள் போதா இவர் காட்டும் அன்பு முழுவதையும் மனத்தில் பாராட்டும்படி அவ்வளவு ஜனங்கள் படைக்கப்படவில்லை. இவருடைய குணங்களைக் கணக்கிட எண்ணிக்கை அகப்படாது இவரது புத்திநுட்பம் வெளிவருமாறு கலைகள் இல்லை. அன்றியும், இவரது ஆளுகையில் சூது. வஞ்சனை, சண்டை, சச்சரவு, வறுமை முதலிய எவ்வகைத் தோஷத்தையும் காண இயலாது.' உலகமே அமைதியில் அழுந்தியிருக்கின்றது. பெரியோர்களிடத்திலும், பிராமணர்களிடத்திலும் எவருமே ஆதரவு காட்டுகிறார்கள்."

இவ்வாறு எண்ணிக்கொண்டே பாணன் அரசரது அருகில் சென்று வலதுகையை உயர்த்தி ஆசி கூறினான். அப்பொழுது, கொலுமண்டபத்திற்கு ஸ்வல்பதூரம் வடக்கில், யானை காப்போன் அடியில் வருமாறு பாடலுற்றான்.—

"மலைவாய்ச் சுழலுறு மாக்கய முனியே
தலைதாழ்த் தடங்குக சஞ்சலம் விடுகவிச்
சிங்கத் துகிரேன வளைபே
ரங்தச மொல்லுவ தன்றுநின் னடைக்கே."

அரசரோ அப்பாட்டைச் செவியுற்றதும், மலை

யின் குஹையில் சிங்கத்தின் கர்ஜனைபோல் மிகக் கம்பீரமான ஸ்வரத்தில் "இவர்தாமா அந்தப்பாணன் என்பவர்" என்று கேட்கவே "ஆம்! உத்தரவுப் படிதான். இவர்தாம் அவர்" என்று பாரியாத்திரன் மறுமொழி கூறினான்.

அப்பொழுது சக்ரவர்த்தி, முகத்தைத்திருப்பித் தனது பின் பக்கத்திலுட்கார்ந்திருக்கும் அன்பிற் குரிய மாளவராஜ குமாரனைப்பார்த்து "இவர் பெரிய விடபுருஷர்" என்று பாணனைப் பற்றிச் சொல்லவே, மாளவராஜ குமாரனும் மற்ற அரசர்களும் விஷயம் இன்னதென்று புரியாமல் மௌனமாயிருந்தார்கள்.

சிறிதுநேரஞ் சென்றபின், பாணன் இவ்வண்ணம் அரசரோடுவிண்ணப்பஞ்செய்யலானான்"சக்ரவர்த்திப் பெருமானே, ஏன் இவ்வாறு உத்தரவு பிறக்கவேண் டும்? உண்மை தெரியாதவனும் எதையும் நம்பாதவ னும் ஸ்வய புத்தியில்லாமல் அயலார் சொற்படியே நடப்பவனும் உலகநடையை அறியாதவனும் பேசுவது போல் தாங்கள் இவ்வாறு பேசலாமா? உலகத்தின் போக்கும்வாக்கும் வரம்புமீறிப் பலதிறத்திலுமுள்ளன வன்றோ? பெரியோர்களெனில் விஷயங்களை ஆர அமர விசாரித்து உண்மை நிலைமையை உணர்ந்து கொள்ள வேண்டாவோ? ஸாமானிய மனுஷ்யனைப் போல் என்னைத் தாங்கள் வேறு விதமாக நினைப்பது தகாது. நான் பிராமணகுலத்தில் ஜனித்தவன். என் பெரியோர்கள் வைதிககர்மங்களை வழுவாது நாடத்தி வந்த வாத்ஸ்யாயனர்கள். காலந்தவறாமல் முறைப்படி எனக்கு உபநயநம் முதலியன நடந்திருக்கின்றன.

வேதங்களையும் வேதாங்கங்களையும் நன்றாய்க் கற்றிருக்கின்றேன். இயன்றவரையில் சாஸ்திரங்களையும் படித்திருக்கின்றேன். விவாஹம் செய்து ஸரியானபடி கிருஹஸ்தனாகவும் ஆய்விட்டேன். இந்நிலையில் என் மீது விடத்தனத்தை எவ்வாறு சுமத்தலாம்? பொதுப் படையாய்ப் பேசாமல் குறிப்பாய் ஏதாவது இவ்வித தப்பிதத்தை எவராலேயாவது எடுத்துக்கூறமுடியுமா? இம்மை மறுமை இரண்டிற்கும் விரோதமில்லாத சிற் சில தவறுதல்கள் எனது சிறுபிராயத்தில் நேர்ந்ததுண்டு. அவற்றைநான் ஒளிக்கவில்லை. அதைநினைத்து என் மனம் இப்பொழுது வேண்டியபடி வருந்துகின்றது. தாங்கள் புத்ததேவரைப்போல் மன அமைதி பெற்று, மனுவைப்போல் வர்ணாச்ரமதர்மங்களைப் பாதுகாத்து, தர்மராஜரைப்போல் தக்கபடி தண்டனைகள் விதித்து இப்பூமண்டலம் முழுவதையும் ஒரே கொடைநிழலில் ஆண்டுவருமிக்காலத்து, எல்லாத் துன்பத்திற்குமிடந்தரும் தீச்செயலை அஞ்சாதுநடத்த மனத்தினால் சிந்திக்கவும் எவனாவது துணிவானா? மனுஷியர்களைப்பற்றிய விஷயம் நிற்கட்டும். தங்களது மஹிமையைக்கண்டு வண்டுகள் கூடப் பயந்தனபோல் * மது அருந்துகின்றன. சக்ரவாகப் பறவைகளும் பெண்டீரைப் பின் பற்றி நடப்பதில் வெட்க முறுவன போலும். வானரங்களும் நடுங்கியே தமது சேஷ்டைகளைச் செய்கின்றனவென்று சொல்லப்படலாம். புலி முதலாய துஷ்டப்பிராணிகளும் பச்சாத்தாபப்படுவன போல் புலாலைப் புசிக்கின்றன. பிரபுவே, எவ்விதத்

* மது—தேன், கள்.

திலும் சிறிது காலத்திற்குள்ளேயே எனது சீலம் தங்களுக்குத் தெரியவராமலிராது. அன்னியர்களின் மன நிலைமையை உள்ளபடி உணரும் சக்தி மேதாவி களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ளதன்றோ.''

இவ்வாறு பாணன் கூறவே, அரசர் "நாம் இவ் வண்ணம் கேள்விப்பட்டிருந்தோம்" என்று சொல்லி விட்டு மௌனத்துடனிருந்தாரேயன்றி, பாணனோடு பேசுதலோ உட்கார ஆஸனங்கொடுத்தலோ வேறு மரியாதைகளை நடத்தலோ யாதொன்றும் செய்ய வில்லை. ஆனால், அமிருதவர்ஷம் போல் பாணன் மீது விழும் அவரது குளிர்ந்த பார்வை அவருள்ளத்தில் ததும்பும் அன்பைச்செம்மையாய் வெளிப்படுத்திற்று.

அப்பொழுது அந்திநேரமாய்விட்டபடியால் சக்ரவர்த்தியார், அரசர் அனைவரையும் அனுப்பிவிட் டுத் தாம் உட்புறஞ்சென்றார். பாணனும் அவ்விடமி ருந்து புறப்பட்டுத் தனது விடுதிக்கு ஏகினான்.

சூரியன் அஸ்தமய பர்வதத்தின் சிகரத்திலிறங் கவே, மஞ்சள் வெயில் பூமியில் பரவச் செவ்வானம் தோன்றிற்று. சிறிதுநேரத்திற்குள் சூரியன் அஸ்த மயபர்வதத்தின் காவிகலந்த அருவியில் குளித்தவன் போல் செவந்தமேனியுடன் மறையலானான். காடுகளில் மான்கள் அதனதனிருப்பிடஞ் சென்று அசைபோட் டுக்கொண்டு படுத்திருந்தன. ஆற்றங்கரைகளில் சக்ரவாகப்பேடைகள் கேட்போர் மனமுருகுமாறு வருந்திக் கூவின. வீட்டுத் தோட்டங்களில் பாத்தி கட்டி அந்திப்பொழுது நீர் இறைக்கப்பெற்ற மரங் களின்மீது உட்கார்ந்து ஊர்க்குருவிகள் 'கீச்சுக் கீச்சு'

என்று ஒரே கூச்சல் போட்டுக்கொண்டிருந்தன. தோட்டங்களில் காக்கைகள் மரங்களில் கட்டியிருந்த தத்தம் கூடுகளுக்குள் வந்துசேர்ந்தன. குரங்குகளும் தங்களது சேஷ்டையை விட்டுவிட்டு மரங்களில் மருவியிருந்தன. கோட்டான்கள் பெரிய பெரிய மரங்களின் பொந்துகளினின்று வெளிக்கிளம்பத் தொடங்கின. சிறு குளங்களில் படுத்துறங்கும் அன்னப் பேடைகளின் மதுரமான தொனி வரவரக் குறையத் தலைப்பட்டது. பகல் முழுவதும் மேய்ச்சல் தரையில் மேய்ந்துவிட்டு மாலையில் பால்சுரக்கத் திரும்பிவரும் பசுக்களைக் கன்றுகள் ஆவலுடன்ஓடிப் பசியார ஊட்டத்தொடங்கின. பிக்ஷுக்கள் கமண்டலுஜலத்தால் கைகால்களைச் சுத்தஞ் செய்துகொண்டு, மடங்களில் தொழத் தொடங்கினர். தீக்ஷிதர்கள் வேதியில் தர்ப்பங்களைப் பரப்பி அக்கினியை ஜ்வலிக்கச்செய்து கையில் யாகபாத்திரமேந்தி ஹவிஸ்ஸுகளை ஹோமஞ் செய்தார்கள். ஸந்தியாவந்தனஸமயத்தில் முனிகள் அர்க்கியப்ரதானம் பண்ணின ஜலத்தின் திவலைகளோ இவைகள் என்று எண்ணும்படி வானத்தில் நக்ஷத்ரங்கள் நிறைந்து விளங்கின. கிழ எருமையின் நிறம் போல் மிகக்கறுப்பான முன்னிருட்டு, மெல்ல மெல்லப் பருத்து ஆகாயத்தையும் அளாவிக்கொண்டு, ஸந்தியாகாலத்தில் செவ்வானத்தால் காணும் வெளிச்சத்தையும் விழுங்கிவிட்டது. விளக்குக் கொளுத்தப் பட்டுக் கொழுந்துவிட்டெரியும்போது, அதன் ஜ்வாலையைப்பார்ப்பவருக்குச் சூரியன் அக்கினிக்குள் இருந்துகொண்டு இருட்டை அதட்டியோட்டுவதற்காகத் தன

துவிரலேவெளியில் நீட்டியிருக்கின்றானோ என்றுதோன்றிவிடும். கோபுரவாயிற்கதவுகளை அடைப்பது அப்போது உண்டாகும் சப்தத்தால் எளிதில் எல்லோருக்கும் தெரியவந்தது. குழந்தைகள் பாட்டிமார் சொல்லுங் கதையைக் கேட்டுக்கொண்டே படுக்கையில் ஸுகமாய்ப் படுத்து உறங்கத் தலைப்பட்டன. மன்மதன் வில்வளைத்து நாணேற்றிஉலகத்தோர் அறவே மதி இழக்குமாறு கணைகளை வாரிச்சொரியத் தொடங்கினான். தாஸிமார் தாய்க் கிழவிகளின் சொற்படி ஆபரணமணிய ஆரம்பித்தனர். அலங்காரஞ் செய்யும் வேலைக்காரிகள் புதிய நாட்டுப்பெண்களை அலங்கரித்து அவரவரது அரைகளில் ஒலிக்கும் ஒட்டியாணங்களைப் பூட்டினர். அப்பொழுது தனது விடுதிக்கு வந்த பாணன் இவ்வண்ணம் ஆலோசிக்கலானான்—“ஹர்ஷசக்ரவர்த்தியார், மிக்க தாக்ஷிண்யமுள்ளவர் என்றே நினைக்கின்றேன். ஆகையாலன்றோ அவர் என்னுடைய சிறு பிராயத்திய தவறுதல்களைப்பற்றிக் கோபங்கொண்டிருந்தும் மனத்தில் என்விஷயமாக அன்பு பாராட்டுகின்றார். என்னைப்பற்றிச் சக்ரவர்த்தியாருக்குச் சுத்தமே வெறுப்பு மாத்திரம் இருக்குமாயின், பேட்டி காணும்படி தயை செய்யவுமாட்டாரன்றோ. என்னைத்திருத்திக் குணவானாகச் செய்யவே அவர் முயலுகின்றார். பிரபுக்கள் தமது ஸம்ரக்ஷணையிலுள்ளவர்களை நல்வழிப்படுத்த வாய் திறந்து யாதொன்றுஞ் சொல்லாமலே தக்கவாறு அவர்களை நடத்தும் மாதிரியைக் கொண்டே அவர்களுக்குப் புத்தி புகட்டிவிடுகின்றார்களல்லவா. என்னை ஆதரிக்க

வில்லை என்று வருந்தி மஹாகுணவானான சக்ரவர்த்தியைப் பற்றி வெவ்வேறுவிதமாய் யான் எண்ணுதல் முற்றிலும் தகாதது. எனது தோஷத்தைச் சிந்தனை செய்யாத என்னையன்றோ யான் நிந்திக்க வேண்டும். எனது வாஸ்தவஸ்திதி காலக்கிரமத்தில் சக்ரவர்த்தியாரின் மனத்திற்படும்படி யான் எவ்விதத்திலும் நடந்துகொள்வேன்.''

இவ்விதம் பாணன் தீர்மானித்துக்கொண்டு, பாளயத்தினின்றும் புறப்பட்டு, தன் நண்பர்களுடையவும் உறவினர்களுடையவும் வீடுகளில் வஸித்து வந்தான்.

சிறிது காலஞ்சென்றதும், பாணனது மெய்யான ஸ்வபாவம் அரசருக்கு வெளிப்பட்டது. அவரது மனமும் கலக்கம் நீங்கித் தெளிவு பெற்றது. பாணன் மீண்டும் அரண்மனைக்கு வந்து அரசரைக் கண்டு அவரது ஆணைப்படி அவ்விடமே தங்கியிருந்தான்.

கொஞ்ச நாட்களுக்குள்ளேயே பாணன்மீது அன்பும், ஆதரவும், தயையும், நம்பிக்கையும்ஏற்பட்டமையால் சக்ரவர்த்தியார் பாணனோடு வேடிக்கையும் விநோதமுமாய்ப் பழகி வந்ததுந் தவிர, விசேஷமாகப் பொருளையும் உதவிப் பாணனது மஹிமை வெளிப்படுமாறு மிக்க மதிப்புடன் நடத்திவந்தார்.

ஸ்ரீ பாணபட்டருடைய கிருதியாகிய ஹர்ஷ சரிதத்தில்
இரண்டாம் உச்சுவாஸம் முற்றுப்பெற்றது.

மூன்றாம் உச்சுவாஸம்.

சாதுக் குபகரிக்கத் தாமரையாட் காவிசும்
போதும் வழியா வுலவிவாக்—காதலுடன்
மேவும் புகழமையு மேலோர் கதைகேட்க
யாவன் மனமிசையா தாம்.

மழைபொழியப் புவியெங்குங் குளிர்ந்து நாட்டின்
மன்பதைகட் குணவினுக்காம் பொருள்கண் மல்கித்
தழைவதெனத் தாரணியோர் முன்னே செய்த
தவப்பயனுற் றம்முடைய நாட்டைத் தாங்குங்
குழைவுறுநன் மனத்தினையுங் குழமித் தம்மைக்
குவலயத்தோர் போற்றுதனத் தினையுங் கொண்ட
விழைவுறுநல் லாசர்பிறந் தாண்டு வாழ்வர்
மேதினியீ ரவர்பெருமை விளம்பு வீரோ.

இவ்வாறு அரசாது அபிமானம் பெற்ற பாணன் மாரிக்காலம் முடியும் வரையில் அரசருடன் கூடவேயிருந்தான். பிறகு சரத்காலம் வந்தது.

அப்பொழுது கார்முகிற் கூட்டங்கள் காணக் குறைந்தன. இந்திரன் வில்லுகள் நில்லாது கழுவின. மின்னற்கொடிகள் மெல்லவே மறைந்தன. சாதகப் பறவைகள் வாதையிற்பட்டன. தவளைகளெல்லாம் தவித்துப்போயின. மயில்கள் யாவும் மதமழிந்து நின்றன. அன்னங்கள் அனைத்தும் அகமகிழ்ந்து கூவின. வானம் கழுவிய கத்திபோல் துலங்கிற்று வெண்மதியும் வெயிலோனும் ஒளியேற்று விளங் கினர். வான்மீன்கள் முழுவதும் வாலிபம் பெற்றன. உருகிய வைடூரியத்தின் நிறம் நீரில் நிறைந்தது. மலை

மல்லியும் கடம்பும் மலரற்று மங்கின. செந்தாமரைப் பூக்கள் செவ்வனே செழித்தன. ஆம்பலும் செங்கழு நீரும் அழகாய் மலர்ந்தன. கருநெய்தல் தேனைக் கனமாய் பொழிந்தது. முல்லைமலர் நல்லமணம் முற்றிலும் வீசிற்று. கருநொச்சிற் பூக்களால் கங்குல் குளிர்ந்தது. ஏழிலைப் பாலைப்பொடி காற்றோடு கலந்தது. குதிரைகள் ஆராத்திமங்களங் கொண்டன. களிறுகளும் காளைகளும் கொழுத்துக் கிடந்தன. சகமதில் சகதிகள் சற்றே குறைந்தன. ஆறுகளில் புது மணற்றிட்டுகள் தோன்றின. சாமைகள் முற்றிச் சற்றுப் பசுமையுற்றிருந்தன. நாடெங்கும் நாணல்கள் நன்றாகப்பூத்தன. திருமாலுந் துயில் துறந்து பள்ளிவிட்டருளினன். அப்பொழுது, பாணனும் பந்துக்களைப் பார்க்க விரும்பித் தனது கிராமத்திற்கு மறுபடியும் புறப்பட்டுச் சென்றான்.

கிராமத்தில் சென்று பாணன் தனது கிருஹத்திலிருந்ததும், பாணனது பந்துக்கள், இவனுக்கு அரசரிடமிருந்து கிடைத்த வெகுமானத்தைக் கேள்வியுற்று அடங்கா மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டே பாணனைப் பார்க்கவந்தார்கள். வந்தவர்களில் முறைப்படி சிலரைப் பாணன் நமஸ்கரித்தான்; சிலர் பாணனை நமஸ்கரித்தார்கள். சிலரை இவன் உச்சிமோப்ப, சிலர் இவனை உச்சிமோந்தார்கள். இவன் சிலரைத் தழுவினான்; சிலரால் இவன் தழுவப்பட்டான். இவன் சிலரை ஆசீர்வதித்தான்; இவனைச் சிலர் ஆசீர்வதித்தார்கள். இவ்விதம் மிக்க மனக்களிப்புடன் பந்துக்களின்மத்தியில் விளங்கியபாணன்,

வேலைக்காரர் பரபரப்புடன் கொண்டுவந்த ஆஸநங்களில் பெரியோர்கள் உட்கார்ந்த பின்னர்த் தானும் ஓராஸநத்தில் அமர்ந்தான்.

பந்துக்கள் அனைவரும் நல்வரவேற்றுத் தக்கபடி தன்னை உபசரிக்கவே, பாணன் மிகவும் ஸந்தோஷம் அடைந்து அவர்களோடு இவ்வண்ணம் வினவலாஞன்—"நீங்கள் எல்லாரும் ஸௌக்கியமாயிருக்கிறீர்களா வேதியர்கள் மகிழுமாறு வேள்விகள் தடையின்றி நடைபெறுகின்றனவா? மந்திரம் வழுவாது முறைப்படி ஹோமஞ்செய்யும் ஹவிஸ்ஸுகளை அக்கினிகள் அங்கீகரிக்கின்றனவா? மாணவர்கள் காலந் தவருது ஓதுகின்றனரா? தினந்தோறும் வேதபாடம் விடாமல் நடக்கிறதா? கல்பம் சிரௌதம் இவைகளில் தொன்றுதொட்டேயுள்ள ஊக்கம் எப்பொழுதும் போலவே குறையாமலிருக்கிறதா? ஒருவருக்கொருவர் போட்டியும் பொருமையுக் தூண்ட, வியாகரண சாஸ்திரத்தில் விஷயங்களை எடுத்து விவரணஞ் செய்யும் வழக்கம் முன்போலவே நடக்கிறதா? மற்றக் காரியங்களை யெல்லாம் ஒழித்து வெகுநாளாய் நடாத்திவரும் மீமாம்ஸாசாஸ்திர ஆராய்ச்சி இப்பொழுதும் நிகழ்ந்து வருகின்றதா? அன்னிய சாஸ்திரங்கள் அனைத்திலும் குதூஹலத்தைக் குறைக்கும் பெருமை வாய்ந்த வேதாந்த சாஸ்திரவிசாரம் முன் மாதிரியாகவே நடந்துவருகிறதா? அமிருதம்பொழியுமாறு அழகாய்ப் புதிய புதிய காவியங்களை எழுதுவதும், பழைய காவியங்களைத் திறமையுடன் விமர்சிப்பதும் இன்றளவும் ஸரிவர நடைபெறுகின்றனவா."

இவ்வாறு பாணன் வினவியதும், அவர்கள் பதிலுரைத்ததாவது—"ஐயா பாணா, யாகாக்கினிகள் ஒருபுறம் உற்ற துணையாயிருக்க, நாங்கள் எப்பொழுதுங் கல்விப்பயிற்சியிலேயே காலங் கழித்துவருவதால் ஸந்தோஷத்திற்குக் குறைவு ஏது? மேலும், நமது ஹர்ஷபூப்தி ஏகச்சக்ராதிபதியாய் உலகத்தைக் காப்பாற்றும்பொழுது, எங்களுடைய கிருஹகிருத்தியம் நடப்பது எம்மாத்திரம்? எல்லாவிதத்திலும் நாங்கள் சௌக்கியமாகத் தானிருக்கிறோம். அதிலும் விசேஷித்து இப்பொழுது தாங்கள் சோம்பலைவிட்டு அரசரை அணுகி அவரால் ஆதரவுடன் ஆஸநத்தில் அமர்த்தப்பட்டிருப்பதைக் காண எங்களது மனக்களிப்பு மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஏதோ எங்களாலானவரையில் ஸ்திதியையநுஸரித்துக் காலந்தவறாமல் அந்தணர்க்குரிய அகிலகர்மங்களையும் அனுஷ்டித்து வருகிறோம்."

இவ்வாறு அவர்கள் மொழிந்தபின், பாணன் ராஜஸமீபத்தில் நடந்த வரலாறுகளைப் பற்றியும், அப்பொழுது நினைவிற்குவந்த சிறுபிராய விளையாட்டுக்களைக்குறித்தும், தங்கள் பெரியோர்களின் சரித்ரவிஷயமாகவும் வெகுநேரம் மகிழ்ச்சியுடன் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தான். உச்சிக்காலம் வரவே, எழுந்து அப்பொழுது செய்யவேண்டிய காரியங்கள் அனைத்தையும் செவ்வனே செய்து முடித்தான். போஜனம் ஆனபின் பாணனை அவனுடைய பந்துக்கள் முன்போலவே சூழ்ந்து கொண்டார்கள்.

அந்த ஸமயத்தில் புஸ்தகம் வாசிக்கும் ஸுதிருஷ்டி

போஜனம் முடிந்தவுடன் அவ்விடம் வந்து சேர்ந்தான். இவனோ, புண்ட்ரதேசத்தில் நெய்த வெண்பட்டு இரண்டை அரையிலும் மேலிலுந் தரித்திருந்ததுந் தவிர, ஸ்நாநம் முடிந்தவுடன் நமஸ்கரித்துத் தான் எடுத்த தீர்த்த மிருத்திகையையும் கோரோசனையையும் ஒன்றாய்ச் சேர்த்துக் குழைத்து அதனால் நெற்றியில் பொட்டும் இட்டிருந்தான். நெல்லிக்காய்த் தைலம் தேய்த்ததால் கருமையும் மினுமினுப்புமுள்ள கூந்தலை அழகாய்த் தழையக்கட்டி, அதன்மீது பூமாலையை நெருக்கமாய்ச் சுற்றியிருந்தான். இவன் அடிக்கடி தாம்பூலம் உபயோகிப்பதால் அவனது அதரம் சுத்தமாயும் பளபளப்புடனுமிருந்தது. இவன் ஒரு சலாகையில் மை எடுத்துக் காந்தி வீசுமாறு கண்களில் தீட்டியிருந்தான். மொத்தத்தில் இவனது வேஷம், அடக்கமும் கௌரவமும் பொருந்தி விளங்கிற்று.

வந்தவன் ஸ்வல்பம் அகலவே இட்டிருந்த பிரப்பந்தடுக்கில் உட்கார்ந்தான். கொஞ்சநேரஞ் சென்றதும், ஸுதிருஷ்டி, கையில் கொண்டுவந்த ஓலைச்சுவடியின் கட்டுக்கயிற்றை அவிழ்த்துப் புஸ்தகத்தைச் சிக்கு நாற்காலியில் வைத்துவிட்டு, காலையில் வாசித்து முடிந்த விடத்திற்கு அடையாளமாகப் போட்டிருந்த ஒரு சிறு ஏட்டைக் கழற்றிவைத்து, சில ஏடுகளைப் புஸ்தகத்தினின்று பிரித்தெடுத்துக் கையிலேந்திக் கொண்டு, தனது பின்புறத்தில் அடுத்துட்கார்ந்திருந்த மதுகரனும் பாராவதனும் குழல் ஊதி ஒத்துக் கொடுக்க, இனிமையான கமகஸ்வரத்தில் கேட்போர்

மனம் கவருமாறு வாயுபுராணத்தைப் படித்தான்.

ஸுதிருஷ்டி இப்படிக் காதிற்கினிதாய் ஸங்கீதத்தோடு வாயுபுராணத்தைப் படிக்கும்பொழுது, சிறிது தூரத்திலிருந்த ஸூசீபாணனெனும் கட்டியக்காரன் அப்படிப்புத் தொனியையே அனுஸரித்து,

"முனிவரிசைத் தோதுவதான் முன்பிருது நூலி
னவிபேரிதா னுனிலத்தி னன்ற—யினிது
பாவுவதாற் பாவனமாற் பன்னுமிப்புராணம்
ஹநுஷ சரிதச் சமம்."

"ஒத்துவழி நிற்பதனு லோரிசைப்பாத் தோன்றுவதா
னத்தாள மன்றுடைத்தா னல்லபரி—சுத்த
பாதமுறை யர்லோர் பகர்கண்ட் மாலித்
தருபணவன் றேசச் சமம்."

என்ற இரண்டு செய்யுள்களை இனிய குரலில் கம்பீரமாய்ப் பாடினுன்.

அப்பொழுது பாணனது சிறிய தகப்பனுரின் பிள்ளைகளான கணபதி, அதிபதி, தாராபதி, ச்யாமளன் என்னும் நான்கு ஸஹோதரர்களும், பாணனோடு இந்த விஷயத்தை இம்மாதிரி பேசவேண்டுமென்று ஏற்கனவே தங்களுக்குள் ஒரு ஸங்கேதஞ் செய்துகொண்டிருந்தமையால், இதைக் கேட்டதும் புன்சிரிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இவர்கள் பிரமதேவருடைய நான்கு முககமலங்களைப்போல் வேதாப்பியாஸம் செய்வதுகொண்டு பரிசுத்தி பெற்றவர்கள்; வியாகரண சாஸ்திரத்தில் விருத்தி, ந்யாஸம், ஸங்கிரஹம் என்னும் கிரந்தங்களை நன்குய்ப்படித்துச் சரியான சப்தங்களைப் பிரயோகிக்கத் தெரிந்தவர்கள்;

முற்காலத்திய ராஜரிஷிகளின் கதையை நன்கு அறிந்தவர்கள்; இதிஹாஸம் அனைத்தையும் அறிந்திருப்பதுடன் மஹா பாரதத்தில் விசேஷபரிசயஞ் செய்தவர்கள்; மஹாவித்வான்கள்; மஹாகவிகள்; அழகிய செய்யுட்களைக் கேட்பதில் அவாவுள்ளவர்கள்; மஹா புருஷர்களின் வரலாறுகளைத் தெரிந்து கொள்வதில் மிகவும் குதூஹலங் கொண்டவர்கள்; பேசுந்திறமை பெற்றவர்கள்; எந்த ஸபையிலும் முந்தி நிற்பவர்கள்; வயது சிறிதாயினும் கியாதி பெரிதும் வாய்ந்தவர்கள்; தபஸ்ஸிலும் தேஜஸ்ஸிலும் மிக்க மேன்மை பெற்றவர்கள்; மனத்திலும் தோற்றத்திலும் மாண்புடையவர்கள்.

இவர்களுக்குள் ச்யாமளன் என்பான் பாணனுக்கு உயிர்த்தோழன். இவன் மற்ற மூன்றுபேரும் சாடையாய்த் தூண்ட, பாணனோடு கூறியதாவது—"முன்பு புரூரவஸ் என்னும் அரசன் அந்தணரது பொருளில் ஆசை வைத்தபடியால் ஆயுஸ்ஸை இழந்தான். நஹுஷன் பிறன்மனைவியைக் காமுற்று மலைப்பாம்பாய் மாறினான். யயாதி பார்ப்பனக் கன்னிகையை மணந்து பதிதனானான். ஸுத்யும்னன் பெண்ணாகவே தீர்ந்தான். ஸோமகன் கடுகளவும் கருணையில்லாமல் பிராணிகளைக் கொலைபுரிந்து வந்தான். மாந்தாதா பாதாள லோகத்தில் போர்புரிந்து பிள்ளை பேரன்மார்களோடு மாண்டுபோனான். புருகுத்ஸன் தவத்திலிருந்தும் நர்மதாநதியில் தகாதகாரியஞ் செய்தான். குவலயாச்வன் * புஜங்கபரிசயத்தால் † அச்வதரகன்னியையும் அங்கி

---

* புஜங்கன் = விடபுருஷன். புஜங்கம் = பாம்பு.

† அச்வதரகன்னிகை = அச்வதரன் எனும் ஸர்ப்பராஜனின்

கரித்தான். மஹாபுருஷனாகிய ப்ருது சக்ரவர்த்தி பூமியை வெட்டியும் கொட்டியும் நிரைவித் துன்பப் படுத்தினான். ந்ருகன் பிராமண சாபத்தால் ஓந்தி யாய்த் திரிந்தான். ஸௌதாஸன் சாபத்தால் ராக்ஷஸ னாய் மாறி உலகத்தையே வருத்தினான். சூதில் மனஞ்செலுத்தவே, நளனைக் கலி கவர்ந்துகொண் டான். ஸம்வரணன் ‡மித்திரன் மகளிடம் கோழைத் தனங் காட்டினான். தசரதன் மங்கை மயக்கத்தால் மரணமுற்றான். கார்த்தவீர்யன் பிராமணனையும் பசு வையும் வருத்தியதால் பிராணனை இழந்தான். மருத் தன் பெரிய யாகஞ்செய்யத் தொடங்கியும், முடிவில் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் பிடிக்காதவ னாய்த் திரிந்தான். சந்தனு அதிமோகங்கொண்டு கங் கை பிரிந்ததும் கானகத்தில் கதறினான். பாண்டு காட்டில் வஸிக்கையில் பெண்டீர்மயக்கம் பெரிதுமேற அப்பொழுதே ஆவி துறந்தான். தர்மபுத்திரன் ¶ குரு பயங்கொண்டு உள்ளம் நடுங்கி, உண்மையைக் கை விட்டான். இவ்வாறு, ஆலோசிக்குமிடத்து பழைய மன்னவர்களது மாண்பு மாசுமறுவில்லாமல் காண்ப த்ரிது. நமது ஹர்ஷசக்ரவர்த்தியாரைப் பற்றியோ யாதொரு குற்றமுங் குறையும் கூறமுடியாது. இவரு டைய நடத்தைகள் அனைத்தும் ஆச்சரியங்களாகவே

பெண்ணாகிய மதாலஸை, பெண் கோவேறு கழுதை.

‡ மித்ரன் = சூரியன், அவன் மகள் தபதீ; மித்ரன் = ஸ்நேஹிதன்.

¶ குருபயம் = குருவாகிய த்ரோணரிடமிருந்து பயம்; குரு = அதிகமான, பயம் = பீதி.

காணப்படுகின்றன—இந்திரன் பர்வதங்களின் பக்ஷங்களை அறுத்ததுபோல் இவரும் பகைவர்களான அரசர்களின் *பக்ஷங்களை முறித்து, அவர்களை அசையா வண்ணம் அமர்த்தினார். மஹாவிஷ்ணு ஆதிசேஷன் மீது க்ஷமையை வைத்தது போலவே இவரும் அடி பணியும் அனேக அரசர்களிடம் †க்ஷமையை வைத்தும், அவர் கடலைக்கடைந்து இலக்ஷ்மியைக் கைப்பற்றியதுபோல ஸிந்துதேச மன்னவனை முறியவடித்து ராஜலக்ஷ்மியைக் கைப்பற்றியும் விளங்குகிறார். ஸுப்பிரமணியரைப்போல் இவரும் பகைவர்களை வெல்லுங் காலத்தில் தமது ‡சக்தியை வெளிப்படுத்துகிறார். லோகநாதனைப்போல் இவரும் ஆங்காங்கு ¶திக்பாலகர்களை ஏற்படுத்தியிருக்கின்றார். தமது பொக்கிஷத்தில் இவர் பிராமணர்களுக்கும் பங்கு ஏற்படுத்தியிருக்கின்றார். இவருடைய ஒவ்வொரு நடத்தையும் இவ்வண்ணம் மேன்மையும் விந்தையும் பொருந்தியதாக விளங்குகின்றது.

ஆகையால், மஹா புண்ணியவானான இவருடைய பெரியோர்கள் தொடங்கி இவருடைய சரித்திரத்தை கிரமமாய்க் கேட்க விரும்புகிறோம். இப்புண்ணிய சரிதையைக் கேட்க ஆவல் எங்களுக்கு வெகு காலமாகவே உண்டு. காந்தம் இரும்பை இழுப்பது

* பக்ஷங்கள்=இறகுகள், சேர்ந்தவர்கள்.

† க்ஷமை=பூமி, பொறுமை.

‡ சக்தி=ஓர் ஆயுதம், வலிமை.

¶ திக்பாலகர்கள்—திசைகாக்கும் இந்திரன் முதலாயவர்கள், தேசத்தை ஆளும் அரசர்கள்.

போல் பெரியோர்களின் நற்குணங்கள் அற்பர்களின் ரஸமறியாக் கன்னெஞ்சத்தையும் இழுத்து விடுகையில், இயல்பாகவே ஸரஸமான மஹான்களின் மெல்லிய மனத்தை இழுத்து விடுகிறதென்பது சொல்லாமலேயே அமையுமன்றோ. இரண்டாம் பாரதம் போலுள்ள இவரது சரிதையைக் கேட்க எவனுக்குத் தான் குதூஹலம் ஏற்படமாட்டாது? ஆதலின், இச்சரிதத்தைத் தாங்கள் சொல்லவேண்டும். ஏற்கனவே பரிசுத்தமான இப்பார்கவகுலம் இம்மஹா புருஷரது சரிதையைக் கேட்பதால் பின்னும் மிக்க பரிசுத்தியைப் பெற்றதாகுக.''

இதைக் கேட்டதும், பாணன் சிரித்துக்கொண்டு சொன்னதாவது:—''நீங்கள் சொல்வது யுக்திக்குப் பொருந்தியதல்ல. உங்களுடைய எண்ணமும் ஆவலுங் கைகூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஒருவனுக்கு ஒரு விஷயத்தில் விருப்பம் மேலிடுகையில், 'இது இயலும், இது இயலாது' என்கிற விசாரணேயே போய்விடுகிறது. அன்னியர்களின் குணங்களில் அன்பும் வேண்டியவர்களின் சரிதையைக் கேட்க ஆவலும் அதிகரிக்கவே, மஹான்களின் மதிகூட மயக்கமுற்று விவேகத்தை விட்டு விலகி நிற்பதாகவே நினேக்கின்றேன். ஆலோசித்துப் பாருங்கள்—அணு அளவுள்ள இச்சிறுவனது மனமெங்கே? உலகமெங்கும் பரவிநிற்கும் சக்ரவர்த்தியாரது சரிதை எங்கே? அரசரின் அளவு கடந்த குணங்களே அற்பத்தொகையுள்ள என்னுடைய வார்த்தைகளால் வர்ணிக்கமுடியுமா? இச்சரிதையைக்கூற எல்லாம்அறிந்த ஈசுவரனு

லும் இயலாது. இதைச் சொல்லப் புகின், வியாழபக வானும் கோழையாய்த் திருவான்; வாணிதேவியும் வாட்டமடைய நேரிடும். இங்ஙனமிருக்க, நம்போலி யர்க்கு நாட முடியாதென்பதை நவிலவும் வேண்டு மோ? பதினாயிரம் வருஷம் பகரினும் இப்பார்த்திவ னது சரிதை முழுவதும் பகரமுடியுமா? அவரது சரித்திரத்தில் ஏதோ ஒரு அம்சம் கேட்கவே உங்க ளுக்கு விருப்பமெனில், இதோ நான் சொல்லத் தயாராகவே இருக்கிறேன். ஏதோ நாலக்ஷரம்படித்த என் நாவும் வேறு எங்கேதான் உபயோகப்படப் போகிறது? கேட்பவர்களோ நீங்கள். சொல்ல வேண்டியதோ ஹர்ஷசரிதம். வேறு என்ன வேண் டும். ஆனால் இப்பொழுதோ பகல் போய்விட்டது. அந்திப்பொழுதில் செந்நிறம் வாய்ந்த கிரணங்களு டன் ஸூரியனும் மலைவாயில் விழுந்தழுவாயிலிருக்கின் றான். ஆதலின், நாளைத்தினம் தெரிவிக்கின்றேன்.''

இவ்வாறு பாணன் கூறவே, அவர்களும் 'அவ் வண்ணமே ஆகலாம்' என்றார்கள்.

அப்பொழுது, மதுக்குடித்த * மாளவிகளின் கவுள்போல் கபிலநிறங்கலந்த வெயிலுடன் பகற்காலம் முடிவடைந்தது. ஆகாயவீதியை அந்தகாரம் சூழ்ந் தது. நியமத்துடன் விளங்கும் தீக்ஷிதர்களின் பத்நி கள் மௌன விருதம் பூண்டு அக்கினிஹோத்ர சாலை யில் அக்கினிகளை மூட்ட, அப்பொழுது கிளம்பும் புனிதமான புகை வானோங்கி வளர்ந்தது. சாமைப்பயி ரின் பசுந்தாளைத் தின்ன முன்னிலிட்டுவிட்டு ஹோம

* மாளவிகள்—மாளவதேசஸ்திரீகள்.

தேனுக்களைக் கறந்துகொண்டிருந்தார்கள். தீக்ஷிதர்கள் யாகாக்கினியில் ஹவிஸ்ஸை ஹோமஞ்செய்தார்கள். மாணுக்கர்கள் மான்தோலும் சடையும் தரித்து பரிசுத்தமான ஆஸநத்திலமர்ந்து, ஜபம் செய்து கொண்டிருந்தார்கள். யோகிகள் பிரமாஸநத்தில் இருந்துகொண்டு தியானம் பண்ணினார்கள். சில போக்கிலிப்பையன்கள், கூட்டம் கூடி, அனேக மாணுக்கர்கள் தங்களைப் பின்பற்ற ஓடிவருமாறு தாளம் கொட்டிக்கொண்டும், வயது சென்றமையால் வலிமையிழந்து சுறுசுறுப்பற்ற வேத வாத்தியாரின் விருப்பத்திற்கேற்ப கிரந்தங்களில் மறந்துபோன பாகங்களைச் சொல்லிக்கொண்டும், ஸந்தியா ஸமயத்தைக் கவனியாது விட்டார்கள். கொஞ்ச நேரத்திற்குள் நல்ல ஒளியுடன் நக்ஷத்திரங்கள் தோன்றின.

பாணனும் சோணநதஞ் சென்று ஸந்தியா வந்தனஞ் செய்துவிட்டு, தனதிருப்பிடம் வரவே, முன் போலவே நண்பர்களும் உறவினர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். பாணனும் ராத்திரி ஒரு யாமம் வரையில் அவர்களுடன் விநோதமாகவே பேசிக்கொண்டிருந்தான். பிறகு கணபதி என்னும் தம்பியின் கிருஹத்தில் படுக்கை போட்டிருந்தமையால் அவ்விடம் சென்று படுத்தான். மற்றவர்களோ கண்களை மூடிக்கொண்டிருந்தும் தூக்கம் வாராமல், 'எப்பொழுது ஸூரியன் உதிக்கப்போகின்றான்' என்று, ஆவலுடன் விடியற்காலத்தை எதிர் பார்த்துக்கொண்டே வெகுப் பிரயாஸையுடன் அவ்விரவைக் கழித்தார்கள்.

பின்பு இராத்ரியின் நாலாவது ஜாமத்தில் விழித்து எழுந்து, அக்கட்டியக்காரன் அடியில் வரும் இருபாக்களைப் பாடினான்.

படுக்கைவிட் டெழுந்த பாய்மாத் தன்பின்
பதங்களைப் பின்னே நீட்டியும் பருமது
கெலும்பையுங் கீழிரு சப்பை தம்மையுந்
தாழ்த்தலா லுடலை நீட்டியுங் கோடிய
துனிகழுத் தொடுமுகத் தினையுரத் தினிதாச்
சேர்த்தியுந் தூசொடு சேர்ந்தபுல் லுளையினை
யலைத்தும் புல்லுண வருந்து மாசையி
னடிக்கடி மூக்கொடு வயிற்றினை யசைத்து
மென்மேலக் கனைத்துமே தினியைக்
கீண்டுகின் றதுகாண் குளம்பினிற் கிளைத்தே.
குளம்பிற் கிண்டிக் கூப்பிய காதொடு
நிற்குமக் குதிரை நீண்டதன் னுடலின்
பிற்பா கத்தினைச் சுருக்கியு மிடையின்
பாகத் தொடுமுகம் படியத் திருப்புவான்
கழுத்தை வளைத்துங் காற்றின் வலியாற்
பனித்துளி சிந்தியு மசைந்தும் பாங்கா
யிருக்கும் பிடரி மயிரா லடிக்கப்
படுகிற தொடுகண் படுபொழு தாயதாங்
கலக்கமார் செந்நிறக் கண்ணிமை யிடத்தி
லுமிதவி டாயதா முணவுப் பொருட்டே
சொட்டியு மசைகடைக் கண்ணை
வட்டுநேர் குளம்பிற் சொரியுமான் மகிழ்ந்தே.

இதைச் செவியுற்றதும், பாணன் நித்திரைவிட் டெழுந்து, முகங் கழுவி, ஸந்தியாதேவியைத் தொழுது, ஸூரியன் உதிக்கவே தாம்பூலம் தரித்து

அவ்விடத்திலேயே இருந்தான். அதனிடையில், பாணனது உற்றாரும் உறவினரும் அவ்விடம் வந்து, பாணனைச்சுற்றி உட்கார்ந்து கொண்டனர். பாணனும் பூர்வபீடிகையால் அவர்களது அபிப்ராயத்தை அறிந்து கொண்டு அவ்வண்ணமே ஹர்ஷசரிதத்தைக் கூறத் தொடங்கினான்.

ஸ்ரீ பாணபட்டருடைய கிருதியாகிய ஹர்ஷ சரித்திரத்தின்
முதற்பாகமாகிய பட்டபாணசரிதம் முற்றுப்பெற்றது.

அரும்பத விளக்கம்.

கோஷ்டி = ஸபை—கூட்டம்.
ஸப்தரிஷிகள் = மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் என்ற எழுமுனிவர்.
குண்டிகை } = விரதமுள்ளவரின் ஜலபாத்திரம்.
கமண்டலு }
பஸ்மதாரணம் = திருநீறு தரித்தல்.
கிருஷ்ணாஜிநம் = மான்தோல்.
பலாசம் = புரசு.
அவனி } = பூமி.
தரணி }
இந்து = சந்திரன்.
சாகோபசாகமாய் = கப்புங்கிளையுமாய்.
அங்குசம் = மாவெட்டி.
திரிகரணங்கள் = மூன்று ஸாதநங்கள்.
அம்புஜம் = தாமரைப்பூ.
புரந்தரன் = இந்திரன்.
பராகம் = பொடி.
பதாதி = காலாள்.
சிகை = குடுமி.
துரகம் = குதிரை.
ஸத்காரம் = பூஜை.
ஆகர்ஷித்து = இழுத்து—கவர்ந்து.
அங்கனைமார் } = ஸ்திரீகள்.
அபலைகள் }
அங்குரித்தது = முளைத்தது.
பல்லவம் = தளிர்.
பஞ்சபாணன் = மன்மதன்.
சப்தாதி விஷயங்கள் = சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய ஐந்து.
வக்ஷஸ்தலம் = மார்பிடம்.
ஸௌபாக்கியம் = நல்ல அதிருஷ்டம்.
கபோலம் = கவுள்—கன்னம்.
மௌஞ்சி = முஞ்சப்புற்கயிறு.
அந்திகம் = ஸமீபம்.
காமாதிகள்—காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறு.
வேதவேதாங்கங்கள்—வேதங்கள் நாலு, வேதாங்கங்கள் ஆறு.

ஸம்வத்ஸரம்=வருஷம்.
சுருதிஸ்மிருதிகள்=வேதம், தர்மசாஸ்திரம் ஆகியவை.
பிக்ஷுணி=பௌத்த மதப்படி துறவியான ஸ்திரீ.
வியவங்கள்=செல்வங்கள்.
வித்யாபீடங்கள்=கல்வி ஸ்தாபனங்கள்.
ஸோமலதை=யாகத்திற்கு உபயோகமுள்ள ஓர் கொடி.
புரோடாசம்=மாவினாற்செய்த ஹோமத்திரவியம்.
யதிகள்=ஸன்யாஸிகள்.
யாகவேதி=யாகமேடை.
வைச்வதேவம்=அன்னசுத்தியை உத்தேசித்துச் செய்யும் ஒரு கர்மம்.
தூமம்=புகை.
பசுபந்தம்=ஒரு யஜ்ஞம்.
கபோதம்=புறா.
மதங்கஜம்=யானை.
பாதபங்கள்=மரங்கள்.
சத்திரம்=குடை.
அபிமானம்=கர்வம்.
பிரஸ்தானம்=புறப்படுதல்.
ஸூக்தங்கள்=இருக்குகள்.
பிங்களவர்ணம்=பொன்நிறம்.
சீதோபசாரம்=குளிர்ச்சிக்குரிய ஏற்பாடு.
கர்ணிகை=தாமரைப் பூவினுள்ளிலுள்ள காய்.
விப்பிரர்=பிராமணர்.
அமரர்=தேவர்.
பரிபவம்=அவமானம்.
ஸம்பவம்=காரியம்.
சீலம்=ஒழுக்கம்.
வாஸ்தவஸ்திதி=உண்மை நிலைமை.
கல்பம்=யாகாநுஷ்டாநத்தைத் தெரிவிக்கும் ஸூத்ரக் க்ரந்தம்.
சிரௌதம்=யாகத்தின் அனுஷ்டான முறையை அறிவிக்கும் வேதபாகம்.
மிருத்திகை=மண்.
பதிதன்=விழுந்தவன், பாபி.
பூர்வபீடிகை=முதலிற்செய்த குறிப்பு.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	5	வீரி	விரி
1	10	ப்ருமம	ப்ரம்ம
2	7	முனி	முனிவர்
3	6	தனது	தமது
5	1	பிராம்மணை	பிராம்மணரே
5	24	முடிகின்றது	முடிகின்றன
13	20	குடிமி	குடுமி
13	23	கருப்பகிற் சந்தனக்	கறுப்பகிற்
16	9	முழுங்தாள்	முழந்தாள்
18	6	உட்கடந்து	உட்சென்று
21	8	மனது	தமது
22	15	அமமை	அம்மையார்
25	4	ஜன்மாந்திர	ஜன்மாந்தர
25	21	இறக்கை	இறகு
25	26	ஆணு	ஆணும்
26	7	கொடை	குடை
26	12	இவனும்	அவனும்
28	11	ளுடையவும் மனத்தை	ளுடைய மனத்தையும்
32	4	யத்தெரிந்ததுதானே	யத் தெரிந்தவைதாமே
32	23	கின்றேன்	க்கின்றேன்
32	27	புருஷனை	புருஷரை
33	10,14	தாங்கள்தான்	தாங்கள்தாம்
34	8	உத்திரவு	உத்தரவு
35	2	விசிரி	விசிறி
35	27	ஸாவித்ரீதேவி	ஸரஸ்வதீதேவி
36	13	தாணுகவே	தாமாகவே
36	14	வது	வன
37	24	வாத்ஸ்யா	வாத்ஸ்யாய
38	14	சாஸ்திரங்களுடையவும்	சாஸ்திரங்களுடைய
39	25	வேதாங்கள்	வேதாங்கங்கள்
40	9	சுதந்தர	சுதந்திர
41	11	வாத்தியார்	உபாத்தியாயர்
44	4	தணீ	தணீர்
44	5	ராச	ராச
47	16	கேட்டுக்	கேட்டுத்
48	18	நாகில	நாணில

51	11	முதற் பருவ	இளம் பிராய
52	21	தான்	தாம்
55	8	கண்ணனே	கண்ணரே
55	24	நுணி	நுனி
57	6	முட்டான்	விட்டான்
59	10	செவந்த	சிவந்த
62	10	தானுகட்டும்	தாமாகட்டும்
62	19	தகடு அரை	தகட்டரை
65	5	குதிரையின்	குதிரைகளின்
65	11	அருசம்	அறுகம்
65	13	தினைவு	தினவு
67	17	நாகரா	நகரா
76	24	ஸுந்திர	ஸுந்தர
79	10	புரியாமல்	விளங்காமல்
79	25	நாடத்தி	நடாத்தி
80	16	கொடை	குடை
81	17	பர்வத்தின்	பர்வதத்தின்
81	22	அதனதனி	தம் தம்மி
82	11	பசியார	பசியாற
86	1	மல்லியும்	மல்லிகையும்
87	16	பொருமையுக்தூண்ட	பொருமையுந்தூண்ட
88	2	பாணா	பாணு
88	6	ஏகச்சக்ராதி	ஏகச்சத்ராதி
92	2	கிரைவி	கிரவி
94	4	கிறதென்பது	கின்றன வென்பது
95	6	னது	ரது
95	23	விருதம்	விரதம்
96	10	வாத்தியா	உபாத்தியா

சிற்சில விடங்களில் வல்லொற்றுக்கள் இரட்டிக்கவேண்டிய விடத்து இரட்டிக்காமலும், இரண்டோரிடத்து வல்லொற்று இரட்டவேண்டாவிடத்து இரட்டியும் கிடக்கின்றன. அவற்றை யறிஞர் திருத்திப் படித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். ஸரஸ்வதி ஸாவித்ரி முதலிய சொற்கள் வடமொழி ரீதியாகவே முதல் வேற்றுமையில் ஈகாராந்தமாகவும், விளிவேற்றுமையில் தமிழ் நடைப்படி ஈற்றெழுத்து நீண்டதாகவும் எழுதப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.